சுராவின்

# TRB

## Teachers Recruitment Board

# வரலாறு

## இளங்கலை

**UNDER GRADUATE STANDARD**

வீ.வீ.கே. சுப்புராசு

வெற்றி நிச்சயம்

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
சென்னை

E268

© வெளியீட்டாளர்கள்

# TRB – வரலாறு

## வீ.வீ.கே. சுப்புராசு

ISBN: 978-93-6417-044-4
Code : E268

(வெளியீட்டாளரின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி செய்யவோ கூடாது)

**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்**

**தலைமை அலுவலகம்:** 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040. ☎ 91-44-48629977, 42043273

**மேக்ஸ் பிரிண்டிங் பிரஸ், சென்னை–600 095 –இல் அச்சடிக்கப்பட்டு,**
**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷனுக்காக,**
1620, 'ஜே' பிளாக், 16–வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
**திரு. வீ.வீ.கே. சுப்புராசு** அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி எண்: 91–44–48629977
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

E268

# பொருளடக்கம்

# வரலாறு (விரிவான உரை)

TRB வரலாறு (இளங்கலை) 2024 – ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன்......................1 – 8

- இந்திய வரலாறு : பண்டைய காலம் முதல் கி.பி. 1206 வரை ...........................2 - 64
- இந்திய வரலாறு : கி.பி. 1206 முதல் கி.பி. 1857 வரை................................ 65 - 134
- இந்திய வரலாறு : கி.பி. 1857 முதல் கி.பி. 1947 வரை ...............................135 - 201
- சுதந்திரத்துக்குப் பிந்திய இந்திய வரலாறு ............................................. 202 - 274
- தமிழ்நாட்டின் வரலாறு : கி.பி. 1565 வரை ................................................275 - 328
- தமிழ்நாட்டின் வரலாறு : கி.பி. 1565 முதல் கி.பி. 2000 வரை ....................329 - 379
- கிழக்காசிய வரலாறு ................................................................... 380 - 430
- அமெரிக்காவின் வரலாறு ............................................................. 431 - 494
- ஐரோப்பிய வரலாறு ..................................................................... 495 - 551
- நவீன உலக வரலாறு ................................................................... 552 - 608

●❖◆❖●

# UG TRB – வரலாறு

### பகுதி B – முதன்மைப் பாடத் தேர்வு

**இது தேர்வர் தேர்ந்தெடுத்த முதன்மைப் பாடத்தை உள்ளடக்கிய முக்கிய பகுதியாகும்.**

| பாடத்தாள் | கேள்விகள் | கால அளவு | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, புவியியில் | 150 | 3 மணி நேரம் | 150 |

# TRB வரலாறு (இளங்கலை)

நேரம் : 3 மணி நேரம்
மதிப்பெண்கள் : 150

## ஒரிஜினல் வினாத்தாள் 2024

நாள் : 04.02.2024

1. **பின்வரும் துறவிகளுள் மராத்திய துறவியை கண்டுபிடிக்கவும்:**
   A) குருநானக் B) கபீர்
   C) குருகோவிந் D) நாமதேவர் **விடை: (D)**

2. **தக்காண கல்விக்கழகம் மேற்கொண்ட முயற்சியால் பெர்குஷன் கல்லூரி திறக்கப்பட்ட இடம் .............**
   A) பூனா B) சங்கலி
   C) பாட்னா D) வங்காளம் **விடை: (A)**

3. **சிந்து சமவெளி மக்கள் சுமேரிய இனத்தை சார்ந்தவர்கள் என கூறியவர் யார்?**
   A) பானர்ஜி B) ஜான் மார்ஷல்
   C) கோர்டன் சைல்டு D) மார்ட்டிமர் வீலர் **விடை: (C)**

4. **புனித பயண வரியை ஒழித்தவர் யார்?**
   A) பாபர் B) அக்பர்
   C) ஹுமாயூன் D) அவுரங்கசீப் **விடை: (B)**

5. **யாருடைய ஆட்சி காலத்தில் பேஷ்வா பதவி முதன் முதலாக நடைமுறைக்கு வந்தது ?**
   A) பாலாஜி விஷ்வநாத் B) சாம்பாஜி
   C) சிவாஜி D) இரண்டாம் பாஜிராவ்
   **விடை: (C)**

6. **“சாகர்களை அழித்தவர்” என வர்ணிக்கப்பட்டவர் யார்?**
   A) விக்ரமாதித்யர் B) முதலாம் சதகர்னி
   C) இரண்டாம் சதகர்னி D) கவுதமிபுத்திர சதகர்னி
   **விடை: (D)**

7. **‘சாளுக்கிய விக்கிரமகாலா’ சகாப்தத்தை தோற்றுவித்தவர் யார்?**
   A) மூன்றாம் சோமேஸ்வரர் B) ஆறாம் விக்கிரமாதித்யர்
   C) விஷ்ணுவர்த்தனர் D) முதலாம் ஜெயசிம்கா
   **விடை: (B)**

8. **‘இந்தியாவில் கிரேக்க ஏகாதிபத்தியத்தின் தூண்’ என வர்ணிக்கப்பட்டவர் யார்?**
   A) அலெக்சாண்டர் B) செலூக்கஸ்
   C) பிலிப்போஸ் D) மெகஸ்தனிஸ் **விடை: (C)**

9. **முதல் துணைப்படைத்திட்டம் ...............க்கிடையே கையெழுத்திடப்பட்டது.**
   A) வெல்லெஸ்லி மற்றும் ஆர்காட்டு நவாப்
   B) வெல்லெஸ்லி மற்றும் ஹைதராபாத் நிஜாம்
   C) வெல்லெஸ்லி மற்றும் ஜான்சி
   D) வெல்லெஸ்லி மற்றும் சதாரா **விடை: (B)**

10. **தன்னை சுல்தான் என்று மாற்றிக் கொண்ட முதல் இஸ்லாமிய சுதந்திர அரசர்**
    A) கோரி முகம்மது B) கஜினி முகம்மது
    C) இல்டுமிஷ் D) குத்புதீன் ஐபக் **விடை: (C)**

11. **ஆரியர்கள் தங்கள் இருப்பிடங்களை அமைக்க எந்தப் பொருளை பயன்படுத்தினார்கள்?**
    A) சுட்ட செங்கல் B) கல்
    C) மரம் D) களிமண் **விடை: (C)**

12. **எந்த நிறுவனம் மௌரியரின் நகர வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது?**
    A) நகரங்கள் B) சபைகள்
    C) கில்டுகள் (குழுக்கள்) D) நகராட்சிகள் **விடை: (B)**

13. **பரிநிர்வாணா என்பது:**
    A) பொதுமக்கள் மரணத்தை குறிப்பது
    B) புத்த பிட்சுகள் மரணத்தை குறிப்பது
    C) புத்தர் மரணமடைந்ததை குறிப்பது
    D) புத்த சமயத்தை பின்பற்றியவர்கள் மரணமடைவதை குறிப்பது
    **விடை: (C)**

14. **புத்த சமயத்தின் லலிதவிஸ்தரா சூத்திரங்கள் எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது ?**
    A) ஹிந்தி B) பாலி
    C) சமஸ்கிருதம் D) தமிழ் **விடை: (C)**

15. **பிதர்கான் கோவிலைக் கட்டியவர் யார்?**
    A) குஷானர்கள் B) சாளுக்கியர்கள் கள்
    C) குப்தர்கள் D) மௌரியர்கள் **விடை: (C)**

16. **“இந்தோ– சுமேரிய முத்திரை வடிவங்கள்” என்ற நூலை எழுதியவர் யார்?**
    A) மார்டிமர் வீலர் B) சர் ஜான் மார்ஷல்
    C) ரெவ். ஹீராஸ் D) கண்ணிங்காம் **விடை: (C)**

17. **டெல்லியின் முதல் முஸ்லீம் பெண் ஆட்சியாளர் யார்?**
    A) ரோசன் ஆரா
    B) அர்ஜுன்மன்ட பானு பேகம்
    C) ரஷியா பேகம்
    D) ஜெகன் ஆரா **விடை: (C)**

18. **கோத்வால்களின் முக்கிய வேலை எது ?**
    A) அந்நிய படையெடுப்பிலிருந்து நாட்டை பாதுகாப்பது
    B) நகரங்களில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது
    C) பொருள்களின் விலைகளை பராமரிப்பது
    D) வரி வசூலை பராமரிப்பது **விடை: (B)**

19. **இந்தியாவில் பிரஞ்சுக்காரர்களின் முதல் தொழிற்சாலை எப்போது ஏற்படுத்தப்பட்டது?**
    A) கி.பி. 1665 B) கி.பி. 1666
    C) கி.பி. 1667 D) கி.பி. 1668 **விடை: (D)**

20. **குவாலியர் சிந்தியாவை சிப்ரி என்ற இடத்தில் தோற்கடித்தவர் யார்?**
    A) ஜெனரல் அயர்குட்
    B) இராபட் கிளைவ்
    C) ஜெனரல் காமக்
    D) ஜெனரல் வெல்லஸ்லி **விடை: (C)**

21. **நீதிமன்றங்களில் வட்டார மொழியை பயன்படுத்துவதற்கு அனுமதி கொடுத்தவர் யார் ?**
    A) கர்ஷன் பிரபு B) கானிங் பிரபு
    C) காரன்வாலிஸ் பிரபு D) வில்லியம் பென்டிங் பிரபு
    **விடை: (D)**

22. **எந்த நதியின் இடப்புறத்தில் காலிபங்கன் அமைந்துள்ளது ?**
    A) கக்ஹார் B) சிந்து
    C) கோதாவரி D) கங்கை **விடை: (A)**

23. **எந்த ஆண்டில் அலாவுதீன் கில்ஜி பில்சா நகர் மீது படையெடுத்து கைப்பற்றினார்?**
    A) கி.பி. 1296 B) கி.பி. 1303
    C) கி.பி. 1294 D) கி.பி. 1292 **விடை: (D)**

SURA'S

**24. எந்த இரு அரசுகளுக்கிடையே ஹால்டிகாட் போர் நடந்தது?**
A) முகலாயர்கள் மற்றும் அம்பர்
B) முகலாயர்கள் மற்றும் கோட்டா
C) முகலாயர்கள் மற்றும் மார்வார்
D) முகலாயர்கள் மற்றும் மேவர் **விடை: (D)**

**25. கீழ்வருவனவற்றை சரியாக வரிசைப் படுத்துக.**
i) சதகர்னி –1 ii) கிருஷ்ண (அ) கனா
iii) சிமுகா iv) வேடிஸ்வி மற்றும் சதிஸ்ரி
A) (i), (iii), (ii), (iv)
B) (iii), (ii), (i), (iv)
C) (ii), (iii), (i), (iv)
D) (ii), (iv), (iii), (i) **விடை: (B)**

**26. பொருத்துக.**
a) திவான்–ஐ –விசாரத் i) ராஜதந்திர உறவுகள்
b) திவான்–ஐ –அரிஷ் ii) ஆவண பராமரிப்பு
c) திவான்–ஐ –இன்ஷா iii) இராணுவ தேர்வு
d) திவான்–ஐ –ரசலத் iv) வருவாய் மற்றும் செலவு

**குறியீடுகள்:**
A) (a)–(iv), (b) –(iii), (c) –(ii), (d)–(i)
B) (a)–(iii), (b) –(ii), c) –(i), (d)–(iv)
C) (a)–(ii), (b) –(i), (c) –(iv), (d)–(iii)
D) (a)–(i), (b) –(ii), (c) –(iii), (d)–(iv) **விடை: (A)**

**27. அசோகரின் போர்களைப் பற்றி விளக்கும் பாறைக் கல்வெட்டு எது ?**
A) பாறைக் கல்வெட்டு - II
B) பாறைக் கல்வெட்டு - XIII
C) பாறைக் கல்வெட்டு - III
D) பாறைக் கல்வெட்டு - V **விடை: (B)**

**28. முகலாயர் காலத்தில் நிலைப்படை உருவாக்கியது யார்?**
A) பாபர் B) ஹுமாயூன்
C) ஷெர் ஷா D) அக்பர் **விடை: (C)**

**29. கீழ்கண்ட எந்த வம்சம் அதிகப்படியான செப்பு நாணயங்களை இந்தியாவில் வெளியிட்டது?**
A) இந்தோ–கிரேக்கர் B) சாதவாகனர்கள்
C) குஷானர்கள் D) குப்தர்கள் **விடை: (C)**

**30. ஹர்சர் காலத்தில் புனிதப் பயணியர்களின் இளவரசன் என அழைக்கப்பட்டவர் யார்?**
A) பாகியான் B) யுவான் சுவாங்
C) இட்சிங் D) இபின் பதூதா **விடை: (B)**

**31. தன்னாட்சி இயக்கத்திற்கான காரணத்தை ஆதரித்தவர் யார்?**
A) திருவாங்கூர் ராஜா B) மைசூர் ராஜா
C) ஆற்காட்டு நவாப் D) விஜயநகர ராஜா **விடை: (D)**

**32. இந்திய மருத்துவக் கல்லூரி ............. நிறுவப்பட்டது.**
A) பொப்பிலி ராஜா B) பனகல் ராஜா
C) ஏ. ராமசாமி முதலியார் D) முத்தைய முதலியார்
**விடை: (B)**

**33. தமிழில் மணவாள மாமுனிகள் எழுதிய 19 நூல்களின் தொகுப்பின் பெயர்**
A) ராமானுஜர் நூற்றந்தாதி B) பெரியாழ்வார் திருமொழி
C) மணி பிரவாளம் D) திருவாய்மொழி **விடை: (C)**

**34. எங்கே முதன் முதலில் தமிழ்நாட்டில் நிரந்தர நிலவரித் திட்டம் 1807–1808–ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?**
A) திண்டுக்கல் B) மதுரை
C) மெட்ராஸ் D) தஞ்சாவூர் **விடை: (A)**

**35. அமெரிக்க ஜாப்னா இயக்கம் மதுரையில் ...........ம் ஆண்டு அமெரிக்க மதுரை இயக்கத்தை ஏற்படுத்தியது.**
A) 1831 B) 1832
C) 1833 D) 1834 **விடை: (D)**

**36. 1921 –ம் ஆண்டில் வேலூரில் ஒத்துழையாமை இயக்கத்தினை தலைமையேற்று நடத்தியது யார்?**
A) ராஜகோபாலச்சாரியார் B) விஜயராகவாச்சாரியார்
C) வீரராகவாச்சாரியார் D) திரு.வி. கல்யாண சுந்தரனார்
**விடை: (C)**

**37. சங்க காலத்தில் கணிதவியல் சுட்டுரை ........................... என்றழைக்கப்பட்டது.**
A) ஏரம்பம் B) எண்கோல்
C) எண் D) நெடும்கணக்கு **விடை: (A)**

**38. திருமலை நாயக்கர் மஹால் ............ கலைப்பாணியில் உள்ளது**
A) இந்தோ–பாரசீக கலை அழகு
B) திராவிட கலை அழகு
C) சாரசானிக் கலை அழகு
D) காந்தாரக் கலை அழகு **விடை: (C)**

**39. பாண்டியர்களின் எந்த செப்பேடு களப்பிரர்கள் கடுங்கோனால் தோற்கடிக்கப்பட்டதை குறிப்பிடுகிறது ?**
A) சின்னமனூர் B) வேள்விக்குடி
C) புதுக்கோட்டை D) தளவாய்புரம் **விடை: (B)**

**40. சந்தா சாகிப்பிற்கு எதிரான சண்டையில் முகமது அலியை ஆதரித்தவர் யார்?**
A) பிரெஞ்சுக்காரர்கள் B) ஆங்கிலேயர்கள்
C) டச்சுக்காரர்கள் D) போர்த்துக்கீசியர்கள்
**விடை: (B)**

**41. தமிழகத்திற்கு சீன புனிதப் பயணி யாருடைய காலத்தில் காஞ்சிக்கு வருகை புரிந்தார்?**
A) மகேந்திரவர்மன் –I B) நரசிம்மவர்மன் – I
C) கனிஷ்கர் D) நரசிம்மன் – II **விடை: (B)**

**42. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் எவை சரியானவை ?**
(i) சம்பந்தர், கூன் பாண்டியனின் சம காலத்தவர் ஆவார்
(ii) சுந்தரர்,ராஜசிம்மனின் சமகாலத்தவர் ஆவார்

**சரியான விடையளி :**
A) (i) மட்டும் சரியானது
B) (ii) மட்டும் சரியானது
C) (i) மற்றும் (ii) இரண்டும் சரியானவை
D) (i) சரியானது மற்றும் (ii) தவறானது **விடை: (C)**

**43. பல்கலைக்கழகம் மற்றும் வருடத்தினை பொருத்துக**
a) சென்னை பல்கலைக்கழகம் (i) 1918
b) ஆந்திரா பல்கலைக்கழகம் (ii) 1916
c) மைசூர் பல்கலைக்கழகம் (iii) 1913
d) உஸ்மானியா பல்கலைக்கழகம் (iv) 1857

**குறியீடுகள்:**
A) (a)–(i), (b) –(ii), (c) –(iii), (d)–(iv)
B) (a)–(iv), (b) –(ii), c) –(iii), (d)–(i)
C) (a)–(iv), (b) –(iii), (c) –(ii), (d)–(i)
D) (a)–(ii), (b) –(iv), (c) –(i), (d)–(iii) **விடை: (C)**

**44. செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கவர்னர்களை அவர்தம் காலத்துடன் பொருத்துக :**
a) ராபர்ட் க்ளைவ் (i) 1803
b) வில்லியம் பெண்டிங் பிரபு (ii) 1798
c) தாமஸ் மன்றோ (iii) 1832
d) சர் க்ரெடரிக் ஆடம் (iv) 1820

குறியீடுகள்:
A) (a)-(i), (b) -(ii), (c) -(iii), (d)-(iv)
B) (a)-(iv), (b) -(iii), (c) -(ii), (d)-(i)
C) (a)-(ii), (b) -(i), (c) -(iv), (d)-(iii)
D) (a)-(iii), (b) -(iv), (c) -(ii), (d)-(i) **விடை: (C)**

45. **மார்ட்டிமர் வீலர் இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் சென்னைக் கிளையின் தலைவராகப் பொறுப்பேற்ற ஆண்டு ..........**
A) 1942 B) 1943
C) 1944 D) 1945 **விடை: (C)**

46. **கணம் என்பது ஒரு வகையான ............. நாணயம்.**
A) செம்பு B) வெள்ளி
C) தங்கம் D) இரும்பு **விடை: (C)**

47. **முன்டிரி என்பது தமிழர்களின் அளவீடு அலகு :**
A) 1/8 B) 1/16
C) 1/64 D) 1/256 **விடை: (D)**

48. **........–ல் ரயத்துவாரி முறை வரிவிதிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
A) 1814 B) 1815
C) 1818 D) 1820 **விடை: (D)**

49. **நீதி கட்சியின் முதல் முதலமைச்சர் .......**
A) சுப்பராயலு ரெட்டியார் B) தியாகராய செட்டி
C) ராமசாமி முதலியார் D) ராமராயன் **விடை: (A)**

50. **பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு .......... .**
A) 1919 B) 1920
C) 1921 D) 1922 **விடை: (C)**

51. **பொருத்துக :**
a) இந்துஸ்தான் குடியரசு சங்கம் i) 1924
b) கக்கோரி சதி வழக்கு ii) 1925
c) லாகூர் iii) 1929
d) சிட்டகாங் சதி வழக்கு ஆயுத கிடங்கு சோதனை iv) 1930

குறியீடுகள்:
A) (a)-(iv), (b) -(iii), (c) -(ii), (d)-(ii)
B) (a)-(i), (b) -(ii), (c) -(iii), (d)-(i)
C) (a)-(iii), (b) -(ii), (c) -(i), (d)-(iii)
D) (a)-(ii), (b) -(i), (c) -(iii), (d)-(iv) **விடை: (B)**

52. **கூற்று (A) :** இருபெரும் விரோத சக்திகள் அணியின் பிரிவின் காரணமாக அணிசேரா இயக்கம் உருவாவதற்கு உடனடி சூழலாக கருதப்படுகிறது.
**காரணம் (R) :** சுதந்திரம் பெற்ற புதிய ஏழை நாடுகள் இருபெரும் விரோத சக்திகள் அணியில் சேர்வதால் எந்த பயனும் இல்லை என்று நேரு கருதினார்.
A) 'கூற்று' மற்றும் 'காரணம்' சரியானது
B) 'கூற்று' மற்றும் 'காரணம்' தவறானது
C) 'கூற்று' சரியானது 'காரணம்' தவறானது.
D) 'கூற்று' தவறானது 'காரணம்' சரியானது. **விடை: (A)**

53. **கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை மதிப்பீடு செய்யவும்.**
**கூற்று (A) :** கர்சன் 1905 –ல் வங்காளத்தை பிரித்தார்.
**காரணம் (R) :** அவர் தேசிய ஒற்றுமையை அழிக்க இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களை பிளவு படுத்தினார்.
**சரியான விடையளி :**
A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது. மற்றும் (R), (A)– வின் சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது. மற்றும் (R), (A)– வின் சரியான விளக்கம் அல்ல.
C) (A) சரியானது மற்றும் (R) தவறானது.
D) (A) தவறானது மற்றும் (R) சரியானது **விடை: (A)**

54. **பொருத்துக :**
**காங்கிரஸ் தலைவர்கள் இடமும் ஆண்டும்**
a) ஜார்ஜ் ஏல் (i) அலகாபாத் 1888
b) ஆர்.சி. தத் (ii) லக்னோ 1899
c) அன்னிபெசன்ட் (iii) கல்கத்தா 1917
d) சரோஜினி நாயுடு (iv) கான்பூர் 1925

குறியீடுகள்:
A) (a)-(i), (b) -(ii), (c) -(iii), (d)-(iv)
B) (a)-(iv), (b) -(iii), (c) -(ii), (d)-(i)
C) (a)-(iii), (b) -(iii), (c) -(i), (d)-(iv)
D) (a)-(iii), (b) -(iv), (c) -(i), (d)-(ii) **விடை: (A)**

55. **வரிசைப்படுத்துக:**
1) காரன்வாலீஸ் பிரபு 2) வாரன் ஹாஸ்டிங்க்ஸ்
3) சர் ஜான் ஷோர் 4) சர் ஜான் மாக்பர்ஸன்

குறியீடுகள்:
A) (1) (4) (3) (2)
B) (4) (3) (2) (1)
C) (2) (4) (1) (3)
D) (3) (1) (4) (2) **விடை: (C)**

56. **கீழ்கண்டவற்றில் தவறானவற்றை தேர்ந்தெடுக்கவும்:**
A) வேளாண்மைக்கான அரச குழு - 1928
B) லாகூர் காங்கிரஸ் - 1929
C) ஜார்ஜ் VI பதவியேற்பு - 1936
D) தாஷ்கண்ட் பிரகடனம் - 1966 **விடை: (A)**

57. **அமிர்த பஜார் பத்திரிக்கையின் ஆசிரியர் யார்?**
A) மோதிலால் நேரு B) மோதிலால் கோஷ்
C) ஜவஹர்லால் நேரு D) சுரேந்தர்நாத் பானர்ஜி
**விடை: (B)**

58. **வங்கப் பிரிவினை எப்போது திரும்பப் பெறப்பட்டது?**
A) 1905 B) 1910
C) 1911 D) 1912 **விடை: (C)**

59. **அன்னிபெசன்டின் தன்னாட்சி இயக்கம் .................. நாட்டின் தன்னாட்சி இயக்கத்தை சார்ந்தது.**
A) கனடா B) ஐரிஸ்
C) சுவிஸ் D) பிரான்ஸ் **விடை: (B)**

60. **யாருடைய ஆட்சியின் போது இந்தியாவில் சிவில் பணிக்காக இங்கிலாந்தில் நடத்தப்படுவது போன்றே இந்தியாவிலும் போட்டித் தேர்வு நடத்த அரசாங்கம் ஒப்புக்கொண்டது?**
A) ரீடிங் பிரபு
B) இரண்டாம் ஹார்டிஞ்சு
C) மாண்டேகு செம்ஸ்போர்டு
D) இரண்டாம் மிண்டோ மார்லி **விடை: (C)**

61. **காங்கிரஸ் அரசின் ஐந்தாண்டு திட்டத்திற்கு மாற்றாக ஜனதா அரசு அறிமுகப்படுத்திய பொருளாதார திட்டத்தின் பெயரை குறிப்பிடுக :**
A) சுருள் திட்டம்
B) 20 –அம்ச திட்டம்
C) உலகமயமாக்கல் திட்டம்
D) கலப்பு பொருளாதார திட்டம் **விடை: (A)**

62. **சரண்சிங் எத்தனை நாட்கள் இந்திய பிரதமராக பணியாற்றினார்?**
A) 13 B) 23
C) 33 D) 44 **விடை: (B)**

SURA'S

**63. காந்தி தென்னாப்பிரிக்காவின் எந்த ரயில் நிலையத்தில் வெள்ளையர் பயணியால் தள்ளி விடப்பட்டார்?**
A) டர்பன் B) பிரிடோரியா
C) மெரிட்ஸ்பர்க் D) கேப் டவுன்
**விடை: (C)**

**64. இந்திய ரயில்வே எந்த வருடம் சரக்கு சேவையை அறிமுகப்படுத்தியது ?**
A) 1960 B) 1970
C) 1980 D) 1990
**விடை: (*)**

**65. கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை சரியான காலவரிசை முறைப்படி எண் வரிசையில் கண்டறிக.**
a) அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள்
b) முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள்
c) தனி ஆந்திர மாநிலம் உருவான நாள்
d) பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைக்கப்பட்ட நாள்

**சரியான விடையளி :**
A) (a) (b) (d) (c)
B) (a) (b) (c) (d)
C) (b) (a) (c) (d)
D) (b) (c) (a) (d)
**விடை: (B)**

**66. அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் எந்த ஆண்டு டெல்லியிலிருந்து லாகூருக்கு பேருந்து சேவையை துவக்கி வைத்தார்?**
A) 20 பிப்ரவரி 1999 B) 26 மார்ச் 2000
C) 15 ஆகஸ்ட் 2001 D) 2 அக்டோபர் 2002
**விடை: (A)**

**67. 14 –வது மக்களவையின் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**
A) பிரணாப் முகர்ஜி B) சோம்நாத் சட்டர்ஜி
C) மீரா குமார் D) எல்.கே. அத்வானி
**விடை: (B)**

**68. முஸ்லீம் பல்கலைக்கழகம் உருவாக முன்னோடியாக இருந்தவர் யார்?**
A) பக்ருதீன் முகமது B) சர் சையது அகமது கான்
C) முகமது அலி ஜின்னா D) ஷேக் அப்துல்லா
**விடை: (B)**

**69. இந்தியாவில் வெள்ளியின் தரத்திற்கு பதிலாக தங்கத்தை அறிமுகம் செய்வதற்கு ஆதரவு அளித்தவர் :**
A) ரிப்பன் பிரபு B) லிட்டன் பிரபு
C) டப்ரின் பிரபு D) கன்னிங் பிரபு **விடை: (B)**

**70. கீழ்கண்டவற்றை பொருத்துக :**
a) அமைச்சரவைத் தூதுக் குழு (i) 1942, மார்ச்
b) இராஜ கோபாலாச்சாரி திட்டம் (ii) 1945, ஜூன்
c) வேவல் திட்டம் (iii) 1946, பிப்ரவரி
d) கிரிப்ஸ் குழு (iv) 1944, மார்ச்

**குறியீடுகள்:**
A) (a)–(iv), (b) –(iii), (c) –(ii), (d)–(i)
B) (a)–(i), (b) –(ii), c) –(iv), (d)–(iii)
C) (a)–(iii), (b) –(iv), (c) –(ii), (d)–(i)
D) (a)–(iii), (b) –(i), (c) –(ii), (d)–(iv) **விடை: (C)**

**71. அமெரிக்காவை உருவாக்குமுன் பதின்மூன்று அமெரிக்க குடியேற்றங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவை?**
A) ஸ்பெயின் B) கனடா
C) இங்கிலாந்து D) பிரான்ஸ் **விடை: (C)**

**72. அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலப் படைகளுக்கு தலைமை தாங்கியவர் யார்?**
A) ரிச்சர்ட் லீ B) ஜார்ஜ் வாஷிங்டன்
C) வில்லியம் ஹவா D) ராக்கிங்ஹோம் **விடை: (C)**

**73. அமெரிக்காவில் தேசிய வங்கியை நிறுவியவர் யார்?**
A) தாமஸ் ஜெபர்சன் B) ஜான் ஆடம்ஸ்
C) ஹாமில்டன் D) மாடிசன் **விடை: (C)**

**74. பொருத்துக**
a) ஷிம்னோஷேகி உடன்படிக்கை (i) 1860
b) சீனப் புரட்சி (ii) 1842
c) நான்கிங் உடன்படிக்கை (iii) 1911
d) பெய்ஜிங் உடன்படிக்கை (iv) 1895

**குறியீடுகள்:**
A) (a)–(iv), (b) - (iii), (c) - (ii), (d)–(i)
B) (a)–(ii), (b) - (iv), (c) - (i), (d)–(iii)
C) (a)–(iii), (b) - (i), (c) - (iv), (d)–(ii)
D) (a)–(i), (b) - (ii), (c) - (iii), (d)–(iv) **விடை: (A)**

**75. சீனாவில் கலாச்சாரப் புரட்சியை தொடங்கியவர் யார்?**
A) யான் – ஷி– கே B) மா–சே–துங்
C) சன்–யாட்–சென் D) லின் பியோ **விடை: (B)**

**76. பின்வருவனவற்றுள் எந்த போர் அமெரிக்க உள்நாட்டு போரில் நடைபெறவில்லை என்பதை கண்டறிக.**
A) பல்க் போர்
B) ஆண்டியேட்டம் போர்
C) கெட்டிஸ்பர்க் போர்
D) மான்சாஸ் போர் **விடை: (A)**

**77. எந்த கூற்றுகள் சரியானவை?**
i) ஜப்பானில் கல்வித்துறையின் சிறந்த சாதனையாக கருதப்படுவது டோக்கியோ பல்கலைக்கழகம் நிறுவியது ஆகும் .
ii) ஜப்பானில் மெய்ஜி முன்னிலை மீட்சி கி.பி. 1867 –ல் நடந்தது.
iii) ஜப்பானில் 1880 –ல் டோக்கியோ இசைப்பள்ளி நிறுவப்பட்டது.
iv) ஜப்பானில் மெய்ஜி அரசியலமைப்பு கி. பி. 1892–ல் செயல்படுத்தப்பட்டது.
A) (i) மற்றும் (iv) சரி B) (ii) மற்றும் (iv) சரி
C) (i) மற்றும் (iii) சரி D) (i), (ii) மற்றும் (iv) சரி
**விடை: (C)**

**78. பொருத்துக :**
a) மே நான்காம் நாள் இயக்கம் i) 1921
b) வாஷிங்டன் மாநாடு ii) 1764
c) நூறு நாட்கள் சீர்திருத்தம் iii) 1919
d) பக்சார் கலகம் iv) 1898

**குறியீடுகள்:**
A) (a)–(iii), (b) –(i), (c) - (iv), (d)–(ii)
B) (a)–(ii), (b) –(iii), (c) - (i), (d)–(iv)
C) (a)–(i), (b) –(iv), (c) –(ii), (d)–(iii)
D) (a)–(iv), (b) –(ii), (c) –(iii), (d)–(i) **விடை: (A)**

**79. "பழம்பெரும் புத்தர்" என்று அறியப்பட்ட சீன ஆட்சியாளரின் பெயரினைக் கூறுக.**
A) ஷூன் B) ஷூ–ஷி
C) காங்–யூ–வை D) பூ–யி **விடை: (B)**

**80. ஷிமோனோஸ்கி உடன்படிக்கை எந்த நாடுகளுக்கு இடையே கையெழுத்தானது?**
A) ஜப்பான் மற்றும் ரஷ்யா B) ரஷ்யா மற்றும் சீனா
C) சீனா மற்றும் ஜப்பான் D) சீனா மற்றும் கொரியா
**விடை: (C)**

SURA'S

- விவசாயிகளுக்கு நில உரிமை குறித்து பட்டா வழங்கப்பட்டது. விளைச்சலில் **மூன்றில் ஒரு பங்கு** அரசுக்கு வரியாக வசூலிக்கப்பட்டது.
- **'விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான்'** என ஷெர்ஷா நம்பினார். படைகள் ஓரிடம் விட்டு வேறிடங்களுக்குச் செல்லும் போது பயிர்களுக்குச் சேதம் ஏற்படக்கூடாது என்பதில் ஷெர்ஷா தனிக்கவனம் செலுத்தினார்.
- ஷெர்ஷாவின் நிலச் சீர்திருத்த முறையினை பின்னாளில் அக்பர் பின்பற்றியதால், ஷெர்ஷா **'அக்பரின் முன்னோடி'** எனப்படுகிறார்.
- ஷெர்ஷா நீதியின் ஊற்றாக விளங்கினார். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். அனைத்து மேல் முறையீட்டு வழக்குகளையும் விசாரித்தார்.
- தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களில் களவு போகும் பொருட்களுக்கு கிராமத் தலைவரே பொறுப்பு என்று ஷெர்ஷா அறிவித்தவுடன் கிராமத் தலைவர்கள் எச்சரிக்கையுடன் செயல்பட்டனர்.
- ஷெர்ஷா வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார். நுழைவு வரி மற்றும் விற்பனை வரி மட்டுமே வசூலிக்கப்பட்டன.
- தங்க, வெள்ளி, செப்புக் காசுகளில் இடம்பெறும் உலோகங்களின் தர அளவு வரையறை செய்யப்பட்டது.
- பழைய மற்றும் கலப்பு நாணயங்களை ரத்து செய்தார். தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். நாணயங்களில் தனது பெயரினை தேவநாகிரி எழுத்தில் பொறிக்கச் செய்தார். **'தாங்கா'** எனப்படும் வெள்ளி நாணயத்தை அறிமுகம் செய்தார். அந்த நாணயங்கள் 1835 வரை புழக்கத்தில் இருந்தன. இவர் **'நவீன நாணயமுறையின் தந்தை'** என்று அழைக்கப்படுகிறார்.
- பீஹாரிலுள்ள **சசாரம்** நகரில், தனது கல்லறையை இந்திய இஸ்லாமியக் கட்டடக்கலை பாணியில் உருவாக்கினார்.
- டெல்லியில் யமுனை நதிக்கரையில் புகழ்பெற்ற **புராணகிலா** (Old Fort) என்ற சிறந்த கட்டடத்தை உருவாக்கினார்.
- ஷெர்ஷா சிந்துப் பகுதியிலிருந்து வங்காளத்தில் சோனார்கான் வரையிலான **கிராண்ட் டிரங்க்** சாலையை சீர்படுத்தினார்.
- குஜராத் கடற்கரைத் துறைமுகங்களை ஆக்ராவோடும் ஜோத்பூரோடும் இணைக்கும் புதிய சாலைகளையும் அமைத்தார்.

**ஷெர்ஷா அமைத்த முக்கியப் பெருவழிச் சாலைகள்**

1. சோனார்கான் முதல் சிந்து வரை
2. ஆக்ரா முதல் பர்ஹாம்பூர் வரை
3. ஜோத்பூர் முதல் சித்தூர் வரை
4. லாகூர் முதல் முல்தான் வரை

- அனைத்து சாலைகளிலும் **'சராய்'** எனப்படும் சத்திரங்கள் அமைக்கப்பட்டு வணிகர்கள் தங்கவும் உணவருந்தவும் வசதி செய்து தரப்பட்டன.
- இவரது ஆட்சிக் காலத்தில் மாலிக் முகமது ஜெயசிங் என்பவர் புகழ் வாய்ந்த இந்தி நூலான **பத்மாவதி** என்ற நூலைப் படைத்தார். அது சித்தூர் ராணி பத்மினியின் வரலாறாகும்.
- பிற சமயப் பிரிவுகளை சகிப்புத் தன்மையுடன் நடத்தினார்.
- காவல்துறை மிகவும் திறமையான முறையில் சீரமைக்கப்பட்டிருந்தது.
- இவர் அலாவுதீன் கில்ஜியின் இராணுவ முறையில் இருந்து முக்கிய அம்சங்களைப் பின்பற்றினார்.
- குதிரைப் படையில் குதிரைகளுக்கு சூடுபோடும் **தாக்** முறையை அறிமுகப்படுத்தினார்.
- இவர் வைதீக சன்னி முஸ்லீம் ஆவார்.
- கி.பி. 1545–இல் பண்டேல்கண்டை ஆட்சி செய்த அரசருக்கு எதிராக தனது கடைசி படையெடுப்பை மேற்கொண்டார் **கலிஞ்சார்** கோட்டையை முற்றுகையிட்ட போது வெடிகுண்டு விபத்தின் காரணமாக கி.பி. 1545–இல் மரணமடைந்தார்.
- அவருக்குப் பின் பதவியேற்ற அவரது இரண்டாவது மகன் இஸ்லாம் ஷா கி.பி.1553 வரை ஆட்சி செய்தார். சிறு வயதிலேயே இஸ்லாம் ஷா மரணமடைந்ததால் வாரிசுரிமை குழப்பம் ஏற்பட்டது. இச்சூழ்நிலையை ஹுமாயூன் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

**ஹுமாயூன் மீண்டு வருதல்**

- ஷெர்ஷாவின் மறைவிற்குப் பின்னர் வலிமை குன்றிய அரசர்கள் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.
- ஹுமாயூன் பாரசீகப் படைகளின் உதவியுடன் காந்தகாரையும் காபூலையும் கைப்பற்றினார். ஹுமாயூனின் வருகையினால் பஞ்சாபிலிருந்த ஆப்கானியப் படைகள் தப்பியோடின.
- ஹுமாயூன் மீண்டும் பேரரசர் ஆனார். ஆனால் ஓராண்டு காலத்திற்குள்ளாகவே தில்லி கோட்டைக்குள் இருந்த நூலகம் ஒன்றின் மாடிப்படிகளில் இடறி விழுந்து ஹுமாயூன் இறந்துவிட்டார்.
- **'ஸ்டேன்லி லேன்போலின்'** வார்த்தைகளில் சொல்வதென்றால் **"வாழ்க்கை முழுவதும் இடறி விழுந்த ஹுமாயூன் இடறி விழுந்தே இறந்தார்"** எனலாம்.

**அக்பர் (கி.பி. 1556-1605)**

- ஹுமாயூன் நாடிழந்து வாழ்ந்த காலகட்டத்தில் அவருக்கும் ஹமீது பானுவிற்கும் அக்பர் பிறந்தார்.
- இந்து அரசரான ராணா பிரசாத் என்பவரின் ஆதரவில் ஹுமாயூனும் ஹமீதா பானுவும் அமரக் கோட்டையில் வாழ்ந்த போது 1542, நவம்பர் 23–அன்று அக்பர் பிறந்தார்.
- தந்தை இறந்ததினால், தனது 14–ஆவது வயதில் முடிசூட்டப்பட்டார். இவருடைய இயற்பெயர் **'ஜலாலுதீன் முகமது அக்பர்'** என்பதாகும். இவருக்கு பாதுகாவலராக இருந்த **'பைரம்கான்'** என்பவர் ஹுமாயூனால் நியமிக்கப்பட்டவர்.
- அக்பர் அரியணை ஏறியபோது ஆப்கானியரும் ரஜபுத்திரரும் அவருக்கு சவாலாக இருந்தனர்.

**இரண்டாம் பானிப்பட் போர் (கி.பி. 1556)**

- ஷெர்ஷாவின் வழிவந்த ஆப்கானிய மன்னர் அடில்ஷாவின் தளபதியான ஹெமு முகலாயரை எதிர்த்து படைநடத்தி வந்தார். அவர் முதலில் குவாலியரையும் பின்னர் ஆக்ராவையும் கைப்பற்றினார்.
- பின்னர் தில்லியைக் கைப்பற்றும் நோக்கில் வந்த போது அக்பர், பானிப்பட் என்ற இடத்தில் ஹெமுவைத் தோற்கடித்தார். ஹெமு கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

**அக்பரும் பைரம்கானும்**

- பைரம்கானின் துணையுடன் அக்பர் குவாலியர், அஜ்மீர் உட்பட காபூலிலிருந்து ஜான்பூர் வரை தன்னுடைய ஆட்சிப் பகுதிகளை விரிவுபடுத்தினார்.
- பைரம்கான் மிகவும் இறுமாப்புடன் நடந்து கொண்டதால் அக்பர், அவரை பணி நீக்கம் செய்து. மெக்காவிற்கு அனுப்பி வைத்தார்.
- செல்லும் வழியில் பைரம்கான், ஆப்கானியன் ஒருவனால் கொல்லப்பட்டார்.
- பைரம்கானின் மகன் **அப்துர்ரஹீம்** அறிவுக் கூர்மை மிக்க மேதையாக கான்–இ–கானான் என்ற பட்டத்துடன் அக்பரின் அவையில் ஒளிர்ந்தார்.

**அக்பரின் வெற்றிகள்**

- கி.பி. 1562–இல் மாளவம் பாஜ்பகதூரிடமிருந்து கைப்பற்றப்பட்டு, அவர் அக்பரின் அரசவையில் ஒரு மன்சப்தராக ஆக்கப்பட்டார்.
- கி.பி. 1564–இல் கோண்டுவானா பகுதியை, அதன் அரசி துர்காதேவியைத் தோற்கடித்துக் கைப்பற்றினார்.
- மேவார் அரசரான ராணா உதய் சிங் சித்தூரை, அக்பரிடம் இழப்பதற்கு முன்னர் கடுமையாகப் போரிட்டார். அக்பரின் வெற்றிக்குப் பின் உதய்சிங் பின் வாங்கினார். ஆனால் அவருடைய ஜெய்மால், பட்டா

ஆகியோர் தொடர்ந்து போரை நடத்தினர். இறுதியில் இவ்விருவர் உட்பட 30,000 ரஜபுத்திர வீரர்கள் போரில் மடிந்தனர். இந்த இரு வீரர்களின் துணிச்சலைக் கண்டு வியந்த அக்பர் அவர்களுக்கு ஆக்ரா கோட்டையின் பிரதான வாயிலில் சிலைகளை நிறுவினார்.

- இதனைத் தொடர்ந்து ரஜபுத்திர அரசுகளான ராந்தம்பூர், கலிஞ்சார், பிக்கானீர், ஜோத்பூர், ஜெய்சால்மர் ஆகியவை அக்பரிடம் சரணடைந்தன.
- கி.பி. 1573–இல் முசாபர்ஷா என்ற மன்னனிடமிருந்து குஜராத்தைக் கைப்பற்றினார்.
- கி.பி. 1576–இல் தாவுத்கானிடமிருந்து அவர் ஆட்சி செய்த பீஹார், வங்காளம் ஆகிய பகுதிகளை அக்பர் கைப்பற்றினார்.
- ராஜாமான்சிங், பகவன்தாஸ் ஆகியோரின் துணையுடன் காபூலைச் சேர்ந்த மரிசா ஹக்கிமைப் தோற்கடித்தார்.
- கி.பி. 1586–இல் காஷ்மீரையும், கி.பி.1591–இல் சிந்துவையும் அக்பர் கைப்பற்றினார்.
- கி.பி. 1591–இல் காண்டேஷ் பகுதியையும் கி.பி. 1596–இல் சாந்த்பீபியிடமிருந்து பெராரையும் கைப்பற்றினார்.
- மேவார், மார்வார் ஆகியவை முகலாயப் பேரரசை எதிர்த்து நின்ற ரஜபுத்திர அரசுகளாகும்.
- ராணா உதய்சிங்கின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மகன் ராணா பிரதாப் சிங் அக்பரின் அதிகாரத்தை ஏற்க மறுத்து போரிட்டுக் கொண்டிருந்தார்.
- கி.பி. 1576–இல் **ஹால்திகாட்** என்ற இடத்தில் நடந்த போரில் ராஜாமான்சிங் பிரதாப் சிங்கை முறியடித்தார். ஆனால் தனது 'மரணம் வரை ராணா பிரதாப் சிங் அக்பரை எதிர்த்து தொடர்ந்து போரிட்டார்.

**அக்பரின் தலைநகர்**

- தொடக்கத்தில் **ஆக்ரா** அக்பரின் தலைநகராக இருந்தது. பின்னாளில் **பதேபூர்சிக்ரி** என்னும் புதிய தலைநகரை அக்பர் உருவாக்கினார். இந்நகரை குஜராத் வெற்றியின் நினைவாக உருவாக்கினார்.
- பதேபூர்சிக்ரி அழகான மசூதிகளாலும் உன்னதமான **புலந்தர்வாசா** என்ற நுழைவுக் கட்டடத்தோடும் திகழ்கிறது.
- இங்கு அக்பர் **'இபாதத்கானா'** என்ற வழிபாட்டுக்கூடத்தை அமைத்தார். அங்கு அனைத்து சமய அறிஞர்களையும் வரவழைத்து விவாதிக்கச் செய்தார்.

**இரஜபுத்திரர்களுடனான நல்லுறவு**

- இரஜபுத்திரர்களுக்கு அரசவையில் உயர்ந்த பதவிகளைக் கொடுத்தார். இரஜபுத்திர குடும்பங்களோடு திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டார்.
- இராஜா தோடர்மால், இராஜாமான்சிங், இராஜ்பகவன்தாஸ், பீர்பால் போன்றவர்களுக்கு உயர் பதவிகளை அளித்தார்.
- ஆமீர் நாட்டு அரசர் ராஜாபார்மல் (பிகாரிமால்) மகளான ஹர்க்காபாயை மணந்தார். பின்னாளில் இவர் **'ஜோதா அக்பர்'** என அறியப்பட்டார். மேலும் பிக்கானீர், ஜெய்சால்மர் ஆகிய ரஜபுத்திர அரசுகளின் இளவரசிகளையும் மணந்து கொண்டார்.
- ஜோதா அக்பருக்குப் பிறந்த சலீம் (ஜஹாங்கீர்) இராஜாபகவன் தாஸின் மகளை மணந்து கொண்டார்.
- இராஜா பகவன் தாஸின் மகனான **ராஜாமான்சிங்** அக்பரின் நம்பிக்கைக்குரிய படைத் தளபதி ஆவார்.
- வருவாய்த்துறை நிர்வாகத்தில் நிபுணத்துவம் பெற்ற ராஜா தோடர்மால் திவானாக பதவி உயர்த்தப்பட்டார்.
- ராஜா பீர்பால் அக்பரின் நெருங்கிய நண்பராக இருந்தார்.
- சிறந்த இசைஞானியான **தான்சேன்** அக்பரின் அவையில் இருந்தார்.
- இந்துக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த **ஜிசியா வரியை** ரத்து செய்தார். உடன்கட்டை ஏறும் வழக்கத்தை தடை செய்தார்.
- போர்க் கைதிகளை அடிமைகளாக்கும் நடைமுறையை ஒழித்தார்.

**அக்பரின் மதக் கொள்கை :**

- அக்பர் **'அனைவருக்கும் அமைதி'** (சுல்க்–இ–குல்) என்னும் தத்துவத்தை பரப்புரை செய்தார்.
- இபாதத்கானா என்ற வழிபாட்டுக் கூடத்தில் அக்பர் பல்வேறு மதங்களைச் சேர்ந்த ஞானிகளுடன் விவாதம் செய்தார். அவர்கள் –
- புருஷோத்தம், தேவி (இந்துமதம்).
- மெகர் ஜிராணா (ஜொராஸ்டிரியம்)
- அகவாவிவா, மான்சரட் (போர்த்துகீசிய கிறித்தவர்கள்)
- ஹிர விஜய சூரி (சமணம்)
- பல்வகைப்பட்ட விவாதங்களுக்குப் பின்னர் ஒரு கடவுள் கோட்பாட்டை உணர்த்தும் தீன்–இலாஹி (தௌஹித்–இ–இலாஹி) என்ற புதிய மதத்தை அக்பர் தோற்றுவித்தார். இம்மதம் அக்பருக்குப் பின் இல்லாமல் போனது.
- அக்பர், ஒரு பெரிய மொழியாக்கத் துறையை உருவாக்கினார். இதன் மூலம் இராமாயணம், மகாபாரதம், அதர்வண வேதம், விவிலியம், குரான் ஆகியவை பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.
- இராஜாதோடர்மால் **பாகவத புராணத்தை** பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.
- அபுல்பைசி (அபுல்பாசலின் மூத்த சகோதரர்) **இராமாயணம் & மகாபாரதத்தை** பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

**அக்பரின் ஆட்சி முறை**

- அக்பரது நில வருவாய் முறை **'ஜப்தி'** அல்லது **'பந்தோபஸ்து'** என அழைக்கப்பட்டது. அதனை இராஜா தோடர்மால் மேலும் சீரமைத்தார். அது **'தாஹாசாலாமுறை'** எனப்பட்டது. தாஹாசாமுறைப்படி தோடர்மால் கி.பி. 1580–இல் ஒரேமாதிரியான நில அளவையை அறிமுகப்படுத்தினார்.
- நிலங்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டன.
- போலஜ் – ஆண்டுதோறும் பயிரிடப்படும் நிலம்.
- பரௌதி – இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பயிரிடப்படும் முறை.
- சச்சார் – மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிரிடப்படும் முறை.
- பஞ்சார் – ஐந்து அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிரிடப்படும் முறை.
- நிலவரி பணமாக செலுத்தப்பட்டது.
- நிலம் முறையாக அளவீடு செய்யப்பட்டு விளைச்சலில் 1/3 பகுதி வாரியாக வசூலிக்கப்பட்டது.

**மன்சப்தாரி முறை :**

- பிரபுக்கள், குடிமைப்பணி சார்ந்த இராணுவ நிர்வாகம் சார்ந்த அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே பணியின் கீழ் கொண்டுவரப்பட்டு அவர்களுக்கு **'மன்சப்தார்'** என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- மன்சப்தார் தகுதி **ஜாட், சவார்** என்று இருவகைப்பட்டது.
- **ஜாட்**–ஒருவரது தனிப்பட்ட அந்தஸ்து. இதில் ஒரு மன்சப்தார் குறைந்தபட்சம் 10 வீரர்களையும் அதிகபட்சமாக 10,000 வீரர்களையும் வைத்திருக்கும் தகுதி முறையாகும்.
- **சவார்** ஒரு மன்சப்தாரி வைத்திருக்கும் குதிரை எண்ணிக்கைகளைப் பொருத்து கொடுக்கப்படும் அந்தஸ்து முறையாகும்.
- மன்சப்தாரிகளின் ஊதியமாக நிலங்கள் (ஜாகீர்) ஒதுக்கப்பட்டன.
- இப்பதவி பரம்பரை உரிமை சார்ந்தது கிடையாது. ஒரு மன்சப்தார் மரணமடைந்து விட்டால் அவருக்கு வழங்கப்பட்ட ஜாகீரை அரசு உடனடியாகக் கையகப்படுத்திக் கொள்ளும்.

**அரேபியா, தென்கிழக்காசியா, சீனாவுடன் வணிகத் தொடர்பு**

- குஜராத்தைக் கைப்பற்றிய அக்பர் குஜராத்தின் கடல்பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் அப்பகுதியில் வணிகம் மேற்கொண்டிருந்த அரேபியரையும் ஐரோப்பியரையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.

✦ கிழக்கே வங்காளம், பீஹார், ஒடிஸா ஆகியவற்றின் மீது அக்பர் மேற்கொண்ட படையெடுப்பின் காரணமாக தென்கிழக்கு ஆசியாவுடனும் சீனாவுடனும் தொடர்பு ஏற்பட வழி வகுத்தது.

**பேரரசின் விரிவாக்கம்**

✦ வடமேற்குப் படையெடுப்பின் மூலம் காண்டகார் (காந்தகார்), காஷ்மீர் ஆகியவற்றைப் பேரரசுடன் இணைத்தார்.
✦ தக்காணப் படையெடுப்புகளின் மூலம் பீரார், காண்டேஷ், அகமது நகரின் சில பகுதிகள் பேரரசுடன் இணைக்கப்பட்டன.
✦ வடக்கே காஷ்மீர், தெற்கே கோதாவரி, மேற்கே காண்டகார், கிழக்கே வங்காளம் முகலாயப் பேரரசின் எல்லையாக இருந்தன.

**அக்பரின் அவையில் இருந்த அறிஞர்கள்**

✦ அபுல்பாசல், அப்துல் பெய்சி, அப்துர் ரஹீம், கான்–இ–கான் ஆகியோர், சிறந்த கதை ஆசிரியரான பீர்பால், திறமையான அதிகாரியான ராஜா தோடர்மால், ராஜா பகவன்தாஸ், ராஜாமான்சிங், பாடலாசிரியரும் இசை மேதையுமான தான்சென், ஓவியர் தஷ்வந் போன்றோர் அக்பரின் அவையை அலங்கரித்தனர்.

**அக்பரின் மறைவு :**

✦ கி.பி. 1604 செப்டம்பரில் நோய் வாய்ப்பட்ட அக்பர் கி.பி. 1605 அக்டோபர் 27–இல் இயற்கை எய்தினார்.

**ஜஹாங்கீர்**

✦ அக்பருக்குப் பின் அவருடைய மகன் சலீம், '**நூருதீன் ஜஹாங்கீர்**' என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினார். '**உலகத்தைக் கைப்பற்றியவர்**' என்பது அவருடைய பெயருக்குப் பொருளாகும்.
✦ இவர் அரசாட்சியை விட கலைகள், ஓவியம், தோட்டங்கள், மலர்கள் ஆகியவற்றின் மீது அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். ஜஹாங்கீரின் மனைவி நூர்ஜஹான் என்ற மெகருன்னிசாவிடம் உண்மையான அதிகாரங்கள் இருந்தன.
✦ இவருடைய மூத்த மகன் குஸ்ரூ, ஜஹாங்கீர் பதவியேற்றதை விரும்பாமல் கலகம் செய்தார்.
✦ கலகம் செய்த குஸ்ரூ சிறையில் அடைக்கப்பட்டு குருடாக்கப்பட்டு பின் கொல்லப்பட்டார்.
✦ குஸ்ரூவிற்கு உதவி செய்த சீக்கிய குரு அர்ஜுன் சிங் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**ஜஹாங்கீர் வெற்றிகள் :**

✦ வங்காளத்தில் தனக்கெதிராகக் கலகம் செய்த ஆப்கானியரான உஸ்மான் கானைப் பணியவைத்தார்.
✦ ராணா உதய்சிங்கின் பேரனான ராணா அமர்சிங்கிற்கு எதிராக தன் மகன் குர்ரம் (ஷாஜகான்) தலைமையில் படையெடுப்பு நடத்தி வெற்றி கொண்டார். பின்னர் அமர்சிங் ஜஹாங்கீரின் மேலதிகாரத்தை ஏற்றுக் கொண்டார். அவருடைய பகுதிகளை திருப்பிக் கொடுத்தார்.
✦ கிபி. 1608–இல் தக்காண அரசான அகமது நகர் மாலிக் ஆம்பரின் தலைமையில் தன்னை சுதந்திர அரசராக அறிவித்துக் கொண்டது. அங்கு இளவரசர் குர்ரம் தலைமையில் படைகளை அனுப்பி வைத்தார். 14 மாத கால முற்றுகைக்குப் பின்னர் குர்ரம் காங்ரா கோட்டையைக் கைப்பற்றினார்.

**மாலிக் ஆம்பர்**

எத்தியோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு ஓர் அடிமையாகக் கொண்டுவரப்பட்டவர். பல இடங்கள் மாறி இறுதியில் அகமதுநகர் அரசின் பிரதம மந்திரியான செங்கிஸ்கானிடம் வந்து சேர்ந்தார். செங்கிஸ்கானிடம் அரசியல் விவேகம், ராணுவம் மற்றும் நிர்வாக விஷயங்களைக் கற்றுக் கொண்டார். செங்கிஸ்கானின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மனைவி இவருக்கு விடுதலை அளித்தார். பின்னர் இவர் தென்னிந்திய சுல்தானியங்கள் ஒன்றின் இராணுவத் தளபதியாகவும் ஆனார். முகலாயரின் மேலாதிக்கத்தை எதிர்த்த முஸ்லீம்களுக்கும் மராத்தியர்களுக்கும் மூளையாக இருந்து செயல்பட்டார்.

✦ அக்பரால் கைப்பற்றப்பட்ட காந்தகாரை பாரசீக அரசர் ஷா அப்பாஸ் கி.பி.1622–இல் மீட்டிருந்தார். அதை ஜஹாங்கீர் மீண்டும் கைப்பற்ற எண்ணினார். ஆனால் இளவரசர் குர்ரம் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாக அவரால் அதை வெற்றி கொள்ள இயலவில்லை.
✦ ஜஹாங்கீர் ஆட்சியின் போது இங்கிலாந்து நாட்டிலிருந்து ஆங்கிலேய வணிகக் குழு சார்பாக கி.பி.1608–இல் தளபதி வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் கி.பி.1615–இல் சர் தாமஸ் ரோ ஆகியோர் வருகை புரிந்தனர்.
✦ சர் தாமஸ் ரோ, சூரத் நகரில் வணிகம் செய்ய ஜஹாங்கீரிடம் அனுமதி பெற்றார்.
✦ ஜஹாங்கீர் நீதித்துறையில் சிறந்து விளங்கினார். இவர் பதவி ஏற்கும் போது '**நீதி சங்கிலி மணி**' என்ற முறையை அறிமுகப்படுத்தினார். நீதிமணி **ஷாபர்ஜ்** எனப்பட்டது.
✦ இவருடைய பாரசீக மனைவி மெகருன்னிசா (நூர்ஜஹான்) அரியணையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராகத் திகழ்ந்தார்.
✦ கி.பி.1627–இல் ஜஹாங்கீரின் இறப்புக்குப் பின்னர் மெகருன்னிசா தன் செல்வாக்கை இழந்தார்.
✦ ஜஹாங்கீர் தன்னுடைய சுயசரிதையை '**தூசுக்–இ–ஜஹாங்கிரி**' என்ற பெயரில் எழுதியுள்ளார்.
✦ ஜஹாங்கீரின் பாரசீக மனைவி மெகருன்னிசா ஆவார். இவர் ஜஹாங்கீரால் 'நூர்ஜஹான்' என அழைக்கப்பட்டார்.
✦ நூர்ஜஹான் மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சிகளின் காரணமாக இளவரசர் குர்ரம் தனது தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். ஆனால் ஜஹாங்கீரின் தளபதி மகபத்கான் மேற்கொண்ட முயற்சிகளால் வெற்றி பெற முடியாத நிலையில் குர்ரம் தக்காணம் திரும்பினார்.
✦ நூர்ஜஹான், தளபதி மகபத்கானுக்கு எதிராக செயல்பட்டதால், தளபதி தக்காணம் திரும்பி குர்ரமுடன் கைகோர்த்தார்.
✦ ஜஹாங்கீர் இறந்தவுடன் நூர்ஜஹான் தன் மருமகன் ஷாரியாருக்கு முடிசூட்ட எண்ணினார். ஆனால் நூர்ஜஹானின் சகோதரரும் குர்ரமின் மாமனாருமான ஆசப்கான் மேற்கொண்ட முயற்சிகளால் குர்ரம் 'ஷாஜஹான்' என்ற பெயரில் அடுத்த முகலாய அரசராக ஜஹாங்கீரின் மறைவிற்குப் பின் அரியணை ஏறினார்.
✦ ஜஹாங்கீர் ஸ்ரீநகரில் ஷாலிமர் மற்றும் நிஷாத் பூந்தோட்டங்களை உருவாக்கினார். சிக்கந்தராவில் தன் தந்தை அக்பரின் கல்லறையை அழகுடன் கட்டி முடித்தார்.

**ஷாஜகான் :**

✦ ஜஹாங்கீரைத் தொடர்ந்து இளவரசர் குர்ரம் பலவிதப் போராட்டங்களுக்குப் பின் ஷாஜஹான் (உலகின் அரசர்) என்ற பெயரில் அரியணை ஏறினார். 1632–இல் அவர் அகமது நகருக்கு எதிராகப் போர் செய்து அதனைப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் கைப்பற்றினார். இவரது ஆட்சிக் காலத்தில் **ஷாஜி போன்ஸ்லே** (சத்ரபதி சிவாஜியின் தந்தை) போன்றோரின் தலைமையில் மராத்தியர்கள் முகலாயருக்கு எதிராகப் போரிட்டனர்.
✦ வடமேற்கு எல்லை, தக்காணம் ஆகிய பகுதிகளில் ஷாஜஹான் கி.பி. 1639 முதல் கி.பி. 1667 வரை தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தார்.
✦ அக்பரால் கைப்பற்றப்பட்டு, ஜஹாங்கீரால் இழக்கப்பட்ட காந்தகாரைக் கைப்பற்றி இணைத்துக் கொண்டார்.
✦ கோவாவிலிருந்த போர்த்துக்கீசியர்களை தோற்கடித்தார்.
✦ பிரான்ஸ் அரசன் பதினான்காம் லூயியின் சமகாலத்தவரான ஷாஜஹான் 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவருடைய காலத்தில்தான் அரசருக்காகப் புகழ்பெற்ற '**மயிலாசனம்**' செய்யப்பட்டது. இந்த மயிலாசனத்தை பாரசீகப் படையெடுப்பின் போது நாதிர்ஷா கவர்ந்து சென்றார்.

**செங்கோட்டை : லால் குய்லா** எனப்படும் இது டெல்லியில் உள்ள செங்கோட்டையாகும். இக்கோட்டை சிவப்பு நிறக் கற்களால். கட்டப்பட்டுள்ளதால், இப்பெயர் பெற்றது. 1639–இல் ஷாஜஹானால் அவரது தலைநகரான ஷாஜஹானாபாத்தில் கட்டப்பட்டது. இந்த அரண்மனை முகலாயப் பேரரசர்களின் வாழ்விடமாகும்.

தாராஷுகோ சன்னி இஸ்லாம் பிரிவைச் சேர்ந்தவராயினும் சூஃபித் தத்துவங்களின் மேல் ஆர்வம் கொண்டிருந்தார்.

தில்லி அரியணைப் போட்டியில் ஔரங்கசீப்பிடம் தோல்வியடைந்த தாராஷுகோ **'தத்துவஞான இளவரசர்'** என அறியப்பட்டார். பல்வேறு பண்பாடுகளை ஆய்வு செய்து இந்துமதத்திற்கும் இஸ்லாத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்தார். சமஸ்கிருத மொழியிலிருந்து உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.

- **இவருடைய காலத்தில் இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டினர் :**

| | | |
|---|---|---|
| பெர்னியர் | – | பிரெஞ்சு மருத்துவர் |
| தாவர்னியர் | – | பிரெஞ்சு வைர வியாபாரி மற்றும் பயணி. |
| மான்டெல்சோ | – | ஜெர்மன் பயணி மற்றும் கடற்பயண சாகஸக்காரர் |
| பீட்டர் முன்டி | – | இங்கிலாந்து வணிகர் |
| மனுச்சி | – | இத்தாலிய எழுத்தாளர் மற்றும் பயணி |

- **ஷாஜகான் தன்னுடைய நான்கு புதல்வர்களையும் வெவ்வேறு மாகாணங்களுக்கு ஆளுநர்களாக நியமித்தார்.**
- தாராஷுகோ – பட்டத்து இலவர்
- ஷீஜா – வங்காள ஆளுநர்
- ஔரங்கசீப் – தக்காண ஆளுநர்
- மூரத் பக்ஷ் – மாளவம் மற்றும் குஜராத் ஆளுநர்
- நால்வரிடையே நடந்த அரியணைப் போட்டியில் ஔரங்கசீப் வென்று அரியணை ஏறினர்.
- பேரரசர் ஷாஜகான் **'கட்டடக் கலையின் இளவரசர்'** என்று அழைக்கப்பட்டார். உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைக் கட்டினார். ஷாஜஹானாபாத் என்ற புதிய, அழகிய தலைநகரை உருவாக்கினார்.
- ஷாஜகானை வீட்டுச் சிறையிலடைத்த ஔரங்கசீப், முகலாயப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார்.

**தாஜ்மஹால் :** யமுனை ஆற்றங்கரையில் ஆக்ரா நகரில் தனது அன்பு மனைவி மும்தாஜின் நினைவாக, ஷாஜகான் தாஜ்மஹாலைக் கட்டினார். பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த **உஸ்தத் அகமத் லஹாவ்ரி** என்பவரின் தலைமையில் இது கட்டிமுடிக்கப்பட்டது. இக்கட்டடத்தில் தலைவாயில், தோட்டம், மசூதி, கல்லறைமாடம், மினார் என்று அழைக்கப்படும் நான்கு கோபுரங்கள் அடங்கியுள்ளன. கி.பி. 1632–இல் தொடங்கி கி.பி. 1647 வரை இதன் கட்டுமானப் பணிகள் மற்றும் அலங்கார வேலைகள் நடந்தன. இதைக் கட்டி முடிப்பதற்காக இந்தியா, பாரசீகம், உதுமானியப் பேரரசு, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து 20,000–ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

- கடைசிவரை வீட்டுக்காவலிலேயே இருந்த ஷாஜகான் கி.பி. 1666–இல் மரணமடைந்தார். தாஜ்மஹாலில் அவரது மனைவியின் உடல் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டார்.
- 1657–இல் ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டதால் அவருடைய நான்கு மைந்தர்களிடையே வாரிசுரிமைப் போர் வெடித்தது. தம்முடைய சகோதரர்களான தாரா, சூஜா, முராத் ஆகிய மூவரையும் கொன்றுவிட்டு ஔரங்கசீப் அரியணை ஏறினார். ஷாஜஹான் தன்னுடைய வாழ்நாளில் இறுதி எட்டு ஆண்டுகளை ஆக்ரா கோட்டையிலுள்ள ஷாபர்ஜ் அரண்மனையில் கைதி போன்றே கழித்தார்.

**ஔரங்கசீப் :**

- கி.பி. 1658–இல் ஆலம்கீர் (உலகை வெல்பவர்) என்ற பட்டத்துடன் ஔரங்கசீப் அரியணை ஏறினார். அவருடைய 50 ஆண்டுகால ஆட்சியில் முதல் 25 ஆண்டுகள் வட இந்திய அரசியலிலும் அடுத்த 25 ஆண்டுகள் தக்காணப் பகுதி அரசியலிலும் ஈடுபட்டார்.
- முகலாய வம்சத்தின் கடைசி, வலிமை வாய்ந்த அரசராக கருதப்படுகிறார்.
- இஸ்லாத்தின் புனித நூலான குரானை தினந்தோறும் படித்துவந்தார். மது அருந்தமாட்டார். தனது சமயக்கோட்பாட்டின்படி தினமும் ஐந்துவேளை தொழுகை நடத்தி, ரம்ஜான் நோன்பையும் தவறாது கடைப்பிடித்தார்.
- இவருடைய ஆட்சிக்காலத்தில் மது அருந்துவதும், **'பாங்க்'** என்ற போதைத் தாவரம் பயிரிடுவதும் தடைசெய்யப்பட்டன.
- பேரரசர் மக்கள் முன் மணிமாடத்தில் தோன்றும் **'தரோக்கா தர்ஷன்'** என்ற சடங்கையும் தசரா விழாவையும் தடை செய்தார்.
- முஸ்லீம் அல்லாதவர்கள் மீது **ஜெசியா** வரியினை மீண்டும் விதித்தார். இந்த வரி அக்பர் காலத்தில் நீக்கப்பட்டிருந்தது.
- ஷாஜகான் காலத்தில் 1/3 பங்கு நிலவரி வசூல் செய்யப்பட்டது. இவரது காலத்தில் 1/2 பங்காக உயர்த்தப்பட்டது.
- வடமேற்கிலும் வடகிழக்கிலும் ஔரங்கசீப் மேற்கொண்ட போர்களால் கருவூலம் காலியானது. மேலும் நீடித்த போர் நடவடிக்கைகளாலும் விவசாயிகளின் மீது அதிக வரியைச் சுமத்தினார்.
- முதலில் தலைநகராக ஷாஜகானபாத் இருந்தது. 25 ஆண்டுகளுக்குப் பின்னர் ஔரங்கசீப்பின் நீண்ட படையெடுப்பால், எங்கெல்லாம் அவர் முகாமிட்டாரோ அவ்விடங்களுக்கெல்லாம் தலைநகர் மாறியது.

**ஔரங்கசீப்பிற்கு எதிராக உருவான வட இந்தியக் கிளர்ச்சிகள்**

**ஜாட் கிளர்ச்சி (மதுரா மாவட்டம்)**

- ஜஹாங்கீர், ஷாஜகான் காலத்திலிருந்து தொடர்ந்து கலகம் செய்துவந்த ஜாட்டுகள் 1669–இல் தற்காலிகமாக ஒடுக்கப்பட்டாலும் ஔரங்கசீப்பின் இறப்பிற்குப் பின்னரும் கட்டுக்கடங்காதவர்களாகவே இருந்து வந்தனர்.

**சத்னாமியர் கிளர்ச்சி (ஹரியானா பகுதி)**

- இக்கிளர்ச்சி உள்ளூர் இந்து ஜமீன்தார்களின் உதவியோடு ஒடுக்கப்பட்டது.

**சீக்கியர் கலகம் :**

- அதிகாரப்பூர்வமாக சீக்கிய குரு என்ற பதவியை வகித்து வந்த தேஜ்பகதூருக்கு எதிராக அப்பதவியின் மீது உரிமை பாராட்டிய **ராம்ராய்** மேற்கொண்ட சூழ்ச்சிகளின் காரணமாக சீக்கியர் கலகம் வெடித்தது. இறுதியாக சீக்கியரின் ஒன்பதாவது குருவான தேஜ்பகதூர் கொல்லப்பட்டதோடு கிளர்ச்சி முடிவுற்றது.

**ராஜபுத்திரர்களின் கிளர்ச்சி**

- ஔரங்கசீப் ஜிஸியா வரியை மீண்டும் நடைமுறைப் படுத்தியதால், அதுவரைப் பேரரசிற்கு விசுவாசத்துடன் சேவைசெய்த ராஜபுத்திரர்களிடையே கிளர்ச்சி மனநிலை உருவானது.
- மார்வாரில் ஜஸ்வந்த்சிங்கின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வாரிசுரிமை சிக்கலில் ஔரங்கசீப் தலையிட்டு இந்திரசிங் என்பவரை பெயரளவிற்கு அரசபதவியில் அமர்த்தினார்.
- மார்வார் அரசியலில் ஔரங்கசீப் தலையிட்டதால், மேவாரின் ராணாவான ராஜ்சிங் கலகத்தில் ஈடுபட்டார். இக்கிளர்ச்சியை ஔரங்கசீப்பின் மகனான அக்பர் ஆதரித்தார்.
- 1680–இல் தான் மரணமடையும் வரை கொரில்லா போர் முறையைக் கையாண்டு ராஜ்சிங் போராடினார். அவருக்குப் பின் பதவிக்கு வந்த

| | | |
|---|---|---|
| 5. | பழங்குடியினர் | 6 |
| 6. | சீக்கியர்கள் | 4 |
| 7. | ஆங்கிலோ–இந்தியர்கள் | 3 |
| 8. | பாரசீகர்கள் | 3 |
| | மொத்தம் | 296 |

**அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இடம் பெற்ற பெண்மணிகள்**

| பெண்களின் பெயர்கள் | குறிப்புகள் |
|---|---|
| தாஷாயணி வேலாயுதன் | புலையர் எனும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் (கொச்சியைச் சேர்ந்தவர்) |
| ஹன்ஸா மேத்தா | ஐ.நா.வின் மனித உரிமைகள் தீர்மானத்துக்கான வரைவுக் குழுவில் உறுப்பினராக இருந்தார். (குஜராத்தை சேர்ந்தவர்) |
| துர்காபாய் தேஷ்முக் | ஒத்துழையாமை இயக்கத்திலும், உப்பு சத்தியாகிரகத்திலும் கலந்துகொண்டார். இவர் ஆந்திர மகிளா சபாவை தோற்றுவித்தவர். |
| பேகம் ஐசாஸ் ரசூல் | முஸ்லிம் லீக் கட்சியில் இணைந்து அரசியலில் ஈடுபட்டார். |
| அம்மு சுவாமிநாதன் | இந்திய பெண்களுக்கு சம உரிமை வழங்கும் அரசியலமைப்பு சாசனத்தை உருவாக்க வலியுறுத்தினார். |
| விஜயலட்சுமி பண்டிட் | ஜவஹர்லால் நேருவின் தங்கை ஆவார். ஐ.நா பொது சபையின் தலைவராக தேர்வு செய்யப்பட்ட ஆசியாவைச் சேர்ந்த முதல் நபர். |
| சுசேதா கிருபளானி | வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கு பெற்றார். அரசியல் சாசன கூட்டத்தில் வந்தே மாதரம் பாடலைப் பாடி துவக்கி வைத்து, தேசிய கீதம் பாடி நிறைவு செய்தார். |
| சரோஜினி நாயுடு | தேசிய காங்கிரஸின் முதல் இந்தியப் பெண் தலைவர். |
| லீலா ராய் | அனைத்து வங்காள பெண்கள் வாக்குரிமை கமிட்டியின் துணை செயலாளராக இருந்தார். |
| பூர்ணிமா பானர்ஜி | உப்பு சத்தியாகிரகம் மற்றும் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். |
| ஆன் மாஸ்கரீன் | மாகாண தேர்தலுக்காகவும், திருவதாங்கூர் மாநிலத்தை இந்தியாவோடு இணைப்பதற்கு கடுமையாக போராடியவர். |
| ரேணுகா ராய் | பெண்களுக்கு எதிரான முரண்பாடுகளையும், பாகுபாடுகளையும் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடினார். |
| கமலா சௌதரி | பெண்களின் மன உலகம் குறித்தும், நவீன நாடாக இந்தியா வளர்ந்து வருவது குறித்தும் பல சிறந்த கதைகளை எழுதியுள்ளார். |
| ராஜ்குமாரி அம்ருத் கௌர் | பெண் கல்விக்காக போராடிய அம்ருத், விளையாட்டு, மருத்துவம் போன்ற துறைகளில் பெண்கள் பங்கேற்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார். |
| மாலதி சௌதரி | 1933–ஆம் ஆண்டு தனது கணவரோடு இணைந்து 'உத்கல் காங்கிரஸ் சமாஜவாதி கர்மி' சங்கத்தை தோற்றுவித்தார். |

பிரிவினைக்குப் பிறகு இந்திய அரசியல் நிர்ணய சபை, இந்திய நாடாளுமன்றமாகவும் செயல்படத் துவங்கியது. இது 1947 நவம்பர் 17 அன்று முதன்முறையாகக் கூடியது. இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராக இராஜேந்திர பிரசாத் தொடர்ந்து நீடித்தார். அதே நேரம் இந்தியாவின் முதல் நாடாளுமன்றமாகவும் திகழ்ந்த இச்சபை, நாடாளுமன்றமாகச் செயல்படும் பொழுதெல்லாம் அதன் தலைவராக (Speaker) ஜி.வி. மவ்லாங்கர் செயல்பட்டார்.

**அரசியல் நிர்ணய சபையில் மொத்த கூட்டத் தொடர்கள்**

2 ஆண்டுகள் 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் தனது பணியைச் செய்த அரசியல் நிர்ணய சபை மொத்தம் 11 முறை கூடியது. 1949 நவம்பர் 26 அன்று அரசியலமைப்பு சாசனம் முழுமையாக வடிவமைக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது (adopted). அரசியல் நிர்ணயச்சபையில் நிகழ்ந்த விவாதங்களின் தொகுப்பு 12 தொகுதிகளைக் கொண்டதாகும். அரசியல் நிர்ணயசபையின் இறுதி நிகழ்வான அரசியலமைப்பிற்கு ஒப்புதல் தருவதற்காக 24.01.1950 அன்று கூடியது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைமையேற்றார்.

1950 ஜனவரி 26 அன்று, இந்தியாவிற்காக இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட அரசியல் சாசனம் அமலுக்கு வந்தது (Our constitution was adopted on 26th November 1949, but came into force on 26th January 1950). இந்நாள் இந்தியக் குடியரசு நாளாக (Republic Day) கொண்டாடப்படுகிறது.

குடியுரிமை, தேர்தல்கள் மற்றும் இடைக்கால நீதிமன்றம் உள்ளிட்ட சில அம்சங்கள் மட்டும் உடனடியாக நடைமுறைக்கு வந்தன. எஞ்சியவை 1950 ஜனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தன.

**அரசியல் சாசன சபையின் சில முக்கியக் குழுக்கள்**

| குழு | தலைவர் |
|---|---|
| நடைமுறை விதிகள், தலைமைக்குழு, தேசியக் கொடிக்கான இடைக்கால குழு | வி. இராஜேந்திர பிரசாத் |
| வருவாய் மற்றும் ஊழியர்கள் | வி. இராஜேந்திர பிரசாத் |
| நற்சான்றுக் குழு (Credential) | அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் |
| அவைக்குழு | பட்டாபி சீத்தாராமையா |
| அலுவல் குழு | கே.எம். முன்ஷி |
| அரசியல் நிர்ணய சபையின் வேலைகளுக்கான குழு | ஜி.வி. மவ்லாங்கார் |
| மாநிலங்கள் குழு, மத்திய அதிகாரங்கள் குழு, மத்திய அரசியலமைப்புக் குழு | ஜவஹர்லால் நேரு |

| | |
|---|---|
| அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர், மலைவாழ் மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான அறிவுரைக்குழு. | வல்லபாய் படேல் |
| **இதன் துணைக் குழுக்கள் :** | |
| i. அடிப்படை உரிமைகள் துணைக் குழு. | ஜெ.பி. கிருபளானி |
| ii. சிறுபான்மையினர் துணைக் குழு | H.C. முகர்ஜி |
| iii.ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான குழு (வடகிழக்கு மற்றும் அஸ்ஸாம்) | கோபிநாத் பர்தோலாய் |
| iv. பிற ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான குழு | ஏ.வி. தாக்கர் |
| வரைவுக்குழு | டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் |

284 உறுப்பினர்கள் அரசியலமைப்பினை கையொப்பமிட்டு நிறைவேற்றினார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் **ஹீலியம் வாயு** நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | கூட்டத் தொடர் | சிறப்பம்சங்கள் |
|---|---|---|
| 1. | 9 டிசம்பர், 1946 | அரசியல் நிர்ணயசபையின் முதல் கூட்டம் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்றது. தனிநாடு கோரி இந்திய யூனியன் முஸ்லீம் கட்சி கூட்டத்தை புறக்கணித்தது. தற்காலிக தலைவராக சச்சிதானந்த சின்ஹா தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| 2. | 11 டிசம்பர்1946 | இராஜேந்திர பிரசாத் அரசியல் நிர்ணய சபையின் தலைவராகவும் எச்.சி. முகர்ஜி துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சர்.பி.என். ராவ், சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். |
| 3. | 13 டிசம்பர் 1946 | ஜவஹர்லால் நேரு குறிக்கோள் தீர்மானம் கொண்டுவந்தார். |
| 4. | 22 ஜனவரி 1947 | குறிக்கோள் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 5. | 22 ஜுலை 1947 | இந்திய தேசியக்கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 6. | 15 ஆகஸ்ட் 1947 | இந்தியா விடுதலை அடைந்த நாள். |
| 7. | 29 ஆகஸ்ட் 1947 | சட்டம் முன் மொழிவு குழுவிற்கு அம்பேத்கர் தலைவராக நியமிக்கப்பட்டார். |
| 8. | 16 ஜுலை 1948 | எச்.சி. முகர்ஜி மற்றும் வி.டி. கிருஷ்ணமாச்சாரி அரசியல் நிர்ணய சபையின் துணைத்தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். |
| 9. | 26 நவம்பர் 1949 | அம்பேத்கர் முன்மொழிந்த இந்திய அரசியலமைப்பு சட்டம் அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 10. | 24 ஜனவரி 1950 | இந்திய தேசிய கீதம் மற்றும் இந்திய தேசிய பாடல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இராஜேந்திர பிரசாத் இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும், சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் துணைக் குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். |
| 11. | 26 ஜனவரி 1950 | இந்தியாவிற்காக இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட அரசியல் சாசனம் அமலுக்கு வந்தது. |

பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது .

அரசியல் நிர்ணய சபையின் சின்னமாக யானை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள்

ஒவ்வொரு அரசியலமைப்பும் தனக்கே உரித்த சில தனிப்பண்புகளையும், சிறப்பு அம்சங்களையும் கொண்டிருக்கும். அதேபோன்று இந்திய அரசியலமைப்பும் பின்வரும் சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

**எழுதப்பட்ட அரசியலமைப்பு (Written Constitution)**

எழுதப்பட்ட அரசியலமைப்பு என்பது பொதுவாக எழுதப்பட்ட நிலையில் விதிமுறைகளடங்கிய நூல் வடிவில் கிடைக்கக்கூடிய அரசியலமைப்பைக் குறிக்கும். இந்திய அரசியலமைப்பு எழுதப்பட்ட ஒன்று. இந்திய அரசியலமைப்பு 1950, ஜனவரி 26–இல் நடைமுறைக்கு வந்தது. இது மிக விரிவாக எழுதப்பட்ட ஆவணமாகும். பிரிட்டன், அயர்லாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் அரசியலமைப்புகளே இந்திய அரசியலமைப்புக்கு மூலாதாரமாக இருந்தன.

**உலகிலேயே மிக நீளமான அரசியலமைப்பு (The Lengthiest Constitution)**

உலகிலேயே எழுதப்பட்ட அரசியல் அமைப்பில் மிக விரிவானதும், நீளமானதும் இந்திய அரசியலமைப்பே ஆகும். இதில் தற்பொழுது 25 பகுதிகளும், 12 அட்டவணைகளும் 448–க்கு மேல் ஷரத்துக்களும், அடங்கியுள்ளன.

**கூட்டாட்சி முறை (Federal System)**

இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி அரசியலமைப்பாக உள்ளது. சில தருணங்களில் ஒற்றையாட்சி அரசியலமைப்பாகவும் செயல்படுகின்றது. உதாரணமாக, நெருக்கடிக் காலங்களில் அல்லது தேச நலன் சார்ந்த விஷயங்களில், இந்தியாவின் ஆட்சி முழுவதும் மத்திய அரசின்

கையில் வந்துவிடுகிறது. இதனால் கூட்டாட்சி மறைந்து ஒற்றையாட்சி ஏற்படுகின்றது.

**பல்வேறு மூலங்களிலிருந்து எடுத்தாளப்பட்டது (From Multiple Sources)**

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மன், பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பின் தன்மைகளை நமது இந்திய அரசியலமைப்பு எடுத்துக் கொண்டுள்ளது. இந்தியாவின் தேவையையும், சூழ்நிலையையும் மனதில் கொண்டு, அரசியலமைப்பை வகுத்தவர்கள் மற்ற நாடுகளின் அரசியலமைப்புகளின் கருத்துக்களையும் எடுத்துக் கொண்டனர்.

**இறைமை வாய்ந்த அரசு (Sovereign, Socialist, Secular, Democratic, Republic)**

இந்திய அரசியலமைப்பு, இந்தியாவை ஒரு இறைமை வாய்ந்த சமதர்மநெறி சார்ந்த சமயச் சார்பற்ற மக்களாட்சிக் குடியரசாக உருவாக்கியுள்ளது. இந்தியா ஒரு இறைமை வாய்ந்த அரசு. ஏனென்றால் அது மற்ற எந்த நாட்டின் கட்டுப்பாட்டின் கீழும் இல்லை. இந்திய அரசின் ஆட்சி மக்களாட்சி. ஏனென்றால் ஆட்சியாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தியா ஒரு குடியரசு. ஏனென்றால், நாட்டின் மிக உயர்ந்த நிர்வாக அதிகாரம் பெற்ற குடியரசுத்தலைவர் இந்திய மக்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார். பிரதம மந்திரி அரசாங்கத்தின் (Government) தலைவர். குடியரசுத்தலைவர் நாட்டின் (State) தலைவர்.

**மக்களாட்சி நாடு (Republic)**

இந்தியா, மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களின் அரசு எனும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களாட்சி நாடாக விளங்கும் வகையில் அரசியலமைப்பு எழுதப்பட்டுள்ளது.

**நெகிழும் மற்றும் நெகிழா அரசியலமைப்பு (Partly Rigid Partly Flexible Constitution)**

சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள் சாதாரண சட்டங்கள் எனப்படும். அரசியலமைப்புச் சட்டம் சாதாரண சட்டத்தினின்றும் வேறுபட்டது. இந்திய அரசியலமைப்பின் விதிமுறைகளில் திருத்தம் கொண்டு வருவதற்குச் சில சிறப்பு வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்பில் சிலவற்றை எளிய முறையில் திருத்த இயலும், சிலவற்றை அவ்வளவு எளிதாக திருத்தம் செய்ய இயலாது. ஆகவே நம்முடைய அரசியலமைப்பு பகுதியளவு நெகிழும் இயல்பும், பகுதியளவு நெகிழா இயல்பும் கொண்டுள்ளது.

**அடிப்படை உரிமைகள் (Fundamendal Rights)**

அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதியில் கூறப்படுகிறது. இதன்படி மூன்றாவது பகுதியில் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை அகற்றும்படியோ அல்லது மீறும்படியோ அரசு சட்டம் இயற்ற முடியாது. அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுது, அதற்கு தீர்வாக, நம் அரசியலமைப்பு 5 வகையான நீதிப்பேராணைகளை அளிக்கிறது.

**அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் (DPSP - Directive Principles of State Policy)**

இது பற்றி, இந்திய அரசியல் அமைப்பின் நான்காவது பகுதியின் 36 முதல் 51 வரை உள்ள ஷரத்துகள் குறிப்பிடுகின்றன. இந்திய மக்களுக்கு சமூக, பொருளாதார, அரசியலில் நீதி கிடைக்கும் வகையில் அரசு தனது கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று இவை வலியுறுத்துகின்றன.

**நாடாளுமன்ற மக்களாட்சி (Parliamentary System of government)**

அரசின் அமைப்பு முறையை ஒட்டி, நாடாளுமன்ற அரசமைப்பு முறை அரசு (Parliamentary form of Government) என்றும் குடியரசுத் தலைவர் அரசமைப்பு முறை அரசு (Presidential form of Government) என்றும் வகைப்படுத்தியுள்ளனர். நாடாளுமன்ற அரசமைப்பு முறையில் பிரதம மந்திரியின் தலைமையில் அமைந்த அமைச்சரவை (Cabinet) நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பானது ஆகும். அரசமைப்பு முறையில் உண்மையான நிர்வாக அதிகாரம் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசு தலைவரிடம் இருக்கும். நாடாளுமன்ற அமைப்பு முறை இங்கிலாந்து, இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா போன்றவற்றிலும் குடியரசு தலைவர் அரசமைப்புமுறை அமெரிக்காவிலும் பின்பற்றப்படுகின்றன.

அரசியலமைப்பினை உருவாக்கியவர்கள் நாடாளுமன்ற மக்களாட்சி முறையை முற்றிலும் இங்கிலாந்து நாட்டின் அடிப்படையில் அமைத்துள்ளார்கள். மேலும் நமது இந்திய அரசியலமைப்பில் குடியரசுத்தலைவர் முறையும் உள்ளது. மொத்தத்தில் இந்திய அரசியலமைப்பு பாராளுமன்ற – குடியரசுத்தலைவர் முறையாக விளங்குகின்றது.

**சுதந்திரமான நீதித்துறை (Independent Judiciary)**

பல அடிப்படை உரிமைகள் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருப்பினும், அதனை முறையாகப் பாதுகாப்பதற்கு ஓர் அமைப்பு இல்லையென்றால், அப்படிப்பட்ட அடிப்படை உரிமைகளினால் எவ்வித பலனும் கிடையாது. இதற்காகவே ஒரு சுதந்திரமான பாரபட்சமற்ற நீதித்துறையானது, நீதி சீராய்வு அதிகாரத்துடன் இந்திய அரசியல் அமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**நீதிப்புனராய்வு (Judicial Review)**

- நமது அரசியலமைப்பு சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- இந்திய உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் சட்டங்களை நீதிப்புனராய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளன.
- ஒரு சட்டம் அரசியலமைப்புக்கு உட்பட்டது அல்லது புறம்பானது என்று தீர்ப்பு வழங்கத்தக்க அதிகாரத்திற்கே நீதிப்புனராய்வு என்று பெயர். அரசியலமைப்பின் காவலனாக நீதித்துறை விளங்குகிறது.
- இந்திய குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும், நீதித்துறை இதன்மூலம் பாதுகாக்கிறது.

**சமயச் சார்பற்ற அரசு (Secular State)**

இந்தியா ஒரு சமயச் சார்பற்ற அரசாக விளங்குகின்றது. அது எல்லா சமயத்தையும் சமமாக பாவிக்கின்றது. தனது குடிமக்கள் எந்த மதத்தையும் பின்பற்றவும் வழிபடவும் சுதந்திரமளிக்கிறது.

**வயது வந்தோர் வாக்குரிமை (Adult Suffrage)**

இந்திய அரசியலமைப்பு வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்க உறுதியளிக்கிறது. பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொரு குடிமகனும் சாதி, மதம், நிறம், பாலினப்பாகுபாடு இன்றி தேர்தலில் பங்கு பெற உரிமை பெற்றுள்ளார்.

**ஒற்றைக் குடியுரிமை (Single Citizenship)**

இந்திய அரசியல் அமைப்பு ஒற்றைக் குடியுரிமைக்கு வகை செய்கிறது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், சுவிட்சர்லாந்திலும் நாட்டிற்கு ஒரு குடியுரிமை மற்றும் மாநிலத்திற்கு ஒரு குடியுரிமை என இரட்டைக் குடியுரிமை உள்ளது.

இந்திய அரசியலமைப்பு தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கு தனிப்பட்ட சட்ட வகைமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

**அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties)**

1976–இன் அரசியலமைப்பு திருத்தச் சட்டமானது (42–ஆவது திருத்தம்) குடிமக்களுக்கு பத்து அடிப்படைக் கடமைகளின் தொகுப்பினை அறிமுகப்படுத்தியது. இந்த எண்ணிக்கை தற்போது 11–ஆக உள்ளது.

இந்த அடிப்படைக் கடமைகள், இந்திய அரசியலமைப்பால் சில அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு வழங்கப்பட்டிருப்பதை அடிக்கடி நினைவூட்டி, குடிமக்கள் / மக்களாட்சி உறவின் மற்றும் மக்களாட்சி நடத்தையின் சில நெறிகளை பின்பற்ற வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. 6 வயது முதல் 14 வயது வரை தம் பிள்ளைகளை கட்டாயமாக பள்ளிக்கு அனுப்புதல். (இது 2002–ஆம் ஆண்டு, 86–ஆவது சட்டத்திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது).

### நெருக்கடி கால சட்டவகை முறைகள் (Emergency Provisions)

நாட்டில் அசாதாரணமான சூழ்நிலை நிலவும் போது நாட்டின் இறைமை, ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு மக்களாட்சி அரசியல் முறை இவற்றைக் காக்க நெருக்கடி நிலையினை அமல் செய்வதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் வகை செய்கிறது.

### மூன்றடுக்கு அரசாங்க முறை (Three Tier Government)

முதலில் இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி நாடுகளின் இயல்பான இரட்டை அரசாங்கம் என்பதைக் கொண்டே விளங்கியது. இதன்படி மைய, மாநில அரசாங்கங்களின் அமைப்பு, அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டிருந்தன. ஆனால், பின்னர் இயற்றப்பட்ட 73–ஆவது மற்றும் 74–ஆவது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் (1992) மூன்றாவது அடுக்கான உள்ளாட்சி அமைப்புகளின் அமைப்பு அதிகாரம், பணிகள் ஆகியவற்றை வரையறை செய்தன.

இது உலகின் வேறெந்த அரசியலமைப்பிலும் காணப்படாத ஒன்றாகும். இதனால் இந்திய அரசியலமைப்பு ஒன்றிய அரசாங்கம், மாநில அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி அரசாங்கம் என்ற மூன்றடுக்கு அரசாங்கமாக உருமாற்றம் பெற்றது.

### சிறுபான்மையருக்கும் தனிப்பட்டவருக்கும் எனச் சிறப்பு வாசகங்கள்

பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வகையில் குறிப்பிட்ட பிரிவினர் மற்றவரைவிடத் தாழ்வுற்று இருக்கின்றனர். மக்களாட்சி நாட்டில் பொருளாதார மற்றும் மற்ற பேதங்கள் இருப்பது தவிர்க்கப்படவேண்டும். அனைவருக்கும் சம உரிமை இருத்தல் வேண்டும். இவைகளைக் கருத்தில் கொண்டு ஷெட்யூல்ட் வகுப்பினர் (தாழ்த்தப்பட்டவர்கள்), பழங்குடியினர், பின் தங்கியவர் போன்றவருக்குச் சிறப்புச் சலுகைகள் தர வழிவகை அரசமைப்புச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மையினரின் மொழி மற்றும் கலாச்சார உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளது. அவர்கள் நலம் காக்கும் பொருட்டு ஆணையங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

### கூட்டுறவுச் சங்கங்கள்

2011–ஆம் ஆண்டு 97–ஆவது சட்டதிருத்தத்தின்படி கூட்டுறவு சங்கங்களுக்கு, அரசியலமைப்பு அந்தஸ்தும் மற்றும் பாதுகாப்பும் கொடுக்கப்பட்டது. உறுப்பு 19–இன் கீழ் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குவதற்கான ஓர் அடிப்படை உரிமையை இது அளிக்கிறது.

இது ஷரத்து 43(B)–இன் வாயிலாக கூட்டுறவு சங்கங்களின் மேம்பாட்டிற்காக புதிய மாநிலக் கொள்கையின் வழிகாட்டு கோட்பாடுகளை சேர்த்துள்ளது. இது ‘கூட்டுறவு சங்கம்’ (ஷரத்து 243–ZH முதல் 243-ZT வரை) என்ற தலைப்பில் அரசியலமைப்பில் புதிய பகுதி IX(B)–ஐ சேர்த்துள்ளது.

### அரசியலமைப்பின் அடிப்படை வடிவம் (Basic structure)

அரசியலமைப்பு சாசன ஷரத்து 368–இன்படி பாராளுமன்றம் அரசியலமைப்பின் எந்தவொரு பகுதியையும் திருத்தம் செய்யலாம். ஆனால் அரசியலமைப்பின் அடிப்படை வடிவத்தை பாதிக்காத அளவிற்கு இந்த திருத்தம் அமைய வேண்டும்.

1973–இல் நடைபெற்ற கேசவானந்த பாரதி வழக்கில்தான் உச்சநீதிமன்றம் முதன்முதலாக ``Basic structure'' எனும் சொல்லைப் பயன்படுத்தியது. ஆனால் எவையெல்லாம் அடிப்படை வடிவங்கள் என தற்பொழுது வரை உச்சநீதிமன்றம் முழுமையாக வரையறுக்கவில்லை. பல்வேறு வழக்குகள் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளின்படி பின்வருபவை அடிப்படை அம்சங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- ✦ அரசியலமைப்பின் உயர்ந்த நிலை (Supremacy of the Constitution)
- ✦ மதச்சார்ப்பற்ற தன்மை (Secular character of constitution)
- ✦ அரசின் நிர்வாகம், சட்டமியற்றல் மற்றும் நீதித்துறை இடையே அதிகாரப்பகிர்வு. (Separation of Powers)
- ✦ அரசியலமைப்பின் கூட்டாட்சித் தன்மை (Federal character of the constitution)
- ✦ நீதித்துறை மறுசீராய்வு (Judicial Review)
- ✦ சட்டத்தின்படியான ஆட்சி (Rule of law)
- ✦ பாராளுமன்ற முறை அரசு (Parliamentary System)
- ✦ சுதந்திரமான நேர்மையான தேர்தல்கள் (Free and fair elections)
- ✦ அரசியலமைப்பைத் திருத்துவதில் பாராளுமன்றத்தின் அதிகார வரம்பினைக் குறைத்தல் (Limited Power of Parliament to amend the Constitution)

### முகப்புரை

இந்திய அரசியலமைப்பு முகப்புரையிலிருந்து துவங்குகிறது. அரசியலமைப்பின் நோக்கங்களை முகப்புரை சுருங்கக் கூறி விளங்க வைக்கிறது. அரசியலமைப்பின் குறிக்கோள்கள் யாவும் முகப்புரையில் அடங்கியுள்ளன என்று கூறலாம். அரசியலமைப்பின் வரையறைகளை விளங்க வைப்பதற்கு இது துணையாக இருக்கிறது. முகப்புரை அரசியலமைப்பின் ஒரு பகுதியாகாது. எனவே இது நீதிமன்றங்களின் நீதிப்புனராய்வுக்கு அப்பாற்பட்டது. முகப்புரையானது 1946 டிசம்பர் 13 அன்று அரசியல் சாசன நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் கொண்டுவரப்பட்ட குறிக்கோள் தீர்மானத்தினை (Objective Resolution)அடிப்படையாகக் கொண்டதாகும்.

- ✦ **1976–ஆம் ஆண்டு 42–ஆவது அரசியல் சட்டத் திருத்தத்திற்குப் பிறகு முகப்புரையின் வடிவம்,**
  - சமதர்ம, சமயச் சார்பின்மை, ஒருமைப்பாடு என்ற வார்த்தைகள் முகப்புரையில் 1976–ஆம் ஆண்டு 42–ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டன.
  - பால்கிவாலா அவர்களின் கருத்துப்படி, “முகப்புரை” என்பது “அரசியலமைப்பின் அடையாள அட்டையாகும்”.
  - தாகூர்தாஸ் பார்கவ் அவர்களின் கருத்துப்படி, “முகப்புரை” என்பது “இந்திய அரசியலமைப்பின் ஆன்மா” ஆகும்.
  - அமெரிக்காவைப் பின்பற்றி இந்திய அரசியலமைப்பிலும் முகப்புரை சேர்க்கப்பட்டுள்ளது.
  - சமூக, பொருளாதார, அரசியல் நீதி எனும் கருத்தாக்கம் 1917–இல் நடைபெற்ற இரஷ்ய புரட்சியிலிருந்து பெறப்பட்டவை.
  - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் உள்ளிட்ட கருத்தாக்கங்கள் 1789 முதல் 1799 வரை நடைபெற்ற பிரெஞ்சு புரட்சியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.
  - ‘சமயசார்பற்ற’ என்ற சொல், எந்தவொரு சமயத்திற்கும் முன்னுரிமை கொடுப்பதிலிருந்து அரசு விலகியிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

இந்திய மக்களாகிய நாம் இந்திய நாட்டினை இறைமை, சமத்துவம், சமயசார்பின்மை மற்றும் மக்களாட்சி முறை கொண்ட ஒரு குடியரசாக நிறுவ பவித்தரமான முடிவெடுத்து, அதன் குடிமக்கள் அனைவருக்கும் சமுதாய, பொருளாதார அரசியல் நீதி, எண்ணம், சொல், நம்பிக்கை, சமய நம்பிக்கை மற்றும் வழிபாடு இவற்றில் சுதந்திரம், சமுதாயப்படிநிலை, வாய்ப்பு, நலம் இவற்றில் சமத்துவம் ஆகியவற்றை எய்திடச் செய்யவும் அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டு மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் உடன் பிறப்புரிமையினை வளர்க்கவும். உள்ளார்ந்த உறுதியுடையவராய், நம்முடைய அரசியலமைப்பு பேரவையில் 1949 நவம்பர் 26–ஆம் நாளாகிய இன்று ஈங்கிதனால் இந்த அரசியலமைப்பினை ஏற்று, இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

| குறுநில மன்னர்கள் | ஆட்சி செய்த பகுதி | வள்ளல் தன்மை |
|---|---|---|
| வல்வில் ஓரி | கொல்லி மலை | யாழ் மீட்டும் பாணர்களுக்கு நாட்டையே பரிசாக வழங்கியவர். |

## இந்தியப் பண்பாட்டிற்கு தமிழகத்தின் கொடை

### மொழிக்கொடை

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிடர்கள் உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்துள்ளார்கள். வடமொழிகள் பலவற்றிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன.

கடல்கடந்த நாடுகளிலும் இந்திய நாகரிகத்தோடு பரவியுள்ள மொழி தமிழ் மொழியாகும். சமஸ்கிருதத்திலும் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன.

### திருக்கோயில்கள்

திருக்கோயில்கள் பழங்காலத்தில் பண்பாட்டு மையங்களாகவும் கலைக்கூடங்களாகவும் திகழ்ந்தன. கோயில்களில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலைகள் நிறைந்துள்ளன. இவையனைத்தும் தமிழகம் இந்தியாவிற்கு வழங்கிய நன்கொடையாகும். தமிழகக் கோயில் அமைப்புகளில் வட இந்தியாவில் பலகோயில்கள் அமைந்துள்ளன.

### நாட்டியம்

"கை வழிக் கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே" ஆடலின் நுட்பமாகும். ஆடவல்ல நடன மகள் **'விறலி'** எனப்பட்டாள். நடன மகன் **'கூத்தன்'** எனப்பட்டான். வள்ளிக் கூத்து, முருகனை வழிப்பட்டு ஆடும் **குன்றக்குரவை** ; திருமாலை வழிபட்டு ஆடும் **ஆய்ச்சியர் குரவை**, துணங்கைக் கூத்து, குணலைக் கூத்து போன்றவை இலக்கியங்களில் காணப்படுகின்றன. சிவன் ஆடும் கூத்து **தாண்டவம்** எனப்படுகிறது. சைவர்கள் சிவனை ஆடும் கடவுளாக அம்பலக் கூத்தனாக, ஆடல் வல்லானாக, நடராசனாகப் போற்றி வணங்கினர். வைணவர்கள் திருமாலை குழல் ஊதி கோபியருடன் ஆடும் கண்ணனாகப் போற்றினர். இந்தியப் பெருநாட்டிற்கு தமிழகப் பரதக்கலை ஒரு சிறந்த கொடையாகும்.

### ஹஸ்தம்

பரத நாட்டியத்தில் கை அசைவுகள் 'ஹஸ்தம்' எனப்படுகிறது. 'கை' என்பதன் சமஸ்கிருதச் சொல் ஹஸ்தம் ஆகும். இதனைத் தமிழில் 'முத்திரை' என்பர். பரத நாட்டியத்தில் அடவு, அபிநயம் இரண்டிற்கும் முக்கியமானது முத்திரைகளாகும்.

### விழாக்கள்

உழவுத் தொழிலுக்கு உதவி செய்த சூரியனுக்கும் மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக தமிழகத்தில் கொண்டாடும் பொங்கல் விழா வட இந்தியாவில் மகர சங்கராந்தியாகக் கொண்டாடப்படுகிறது. வசந்தகாலத்தில் இந்திரவிழா கொண்டாடப்பட்டது.

### பிறகொடைகள்

**திருக்குறள் :** உலகப் பொதுமறையான திருக்குறள் தமிழர்களின் கொடையாகும். **மருத்துவம் :** சித்த மருத்துவம் எனப்படும் மூலிகை மருத்துவத்தை உலகிற்கு வழங்கியவர்கள் தமிழர்கள். **இசை :** தமிழர்கள் பண்பட்ட உணர்விற்கு எடுத்துக்காட்டான இசை, தமிழர்கள் வழங்கிய கொடையாகும். **கப்பல் கட்டுமானம் :** பன்னெடுங்காலத்திற்கு முன்பே கப்பல் கட்டும் நுட்பத்தை அறிந்திருந்தவர்கள் தமிழர்கள். **மண்டபங்கள்:** நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், இசைத்தூண்கள் போன்றவை தமிழர்களின் கொடையாகும்.

## தமிழகத்தின் தொல்லியல் சான்றுகள்

### தொல்லியல் துறை

- தொன்மைக் காலத்தைப் பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் (அ) தொல்பொருளியல் என்கிறோம்.
- 1861–ம் ஆண்டு அலெக்ஸாண்டர் கன்னிங்காம் அவர்களால் இந்திய தொல்லியல் துறை உருவாக்கப்பட்டது.
- 1961–ம் ஆண்டு தமிழகத்தில் தொல்லியல் துறை தோற்றுவிக்கப்பட்டது.
- பழங்கால மக்கள் வாழ்ந்த இடங்களையும் கட்டுமானங்களையும் நினைவுச் சின்னங்களையும் நிர்வாகம் செய்யும் அமைப்பு இந்தியத் தொல்லியல் துறை ஆகும். இது மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது.
- தமிழக அரசின் கீழ் தமிழ்நாடு தொல்லியல் துறை இயங்குகிறது.
- இந்தியாவில் உள்ள தொல்லியல் பொருட்களைப் பாதுகாப்பதற்கு இந்தியக் கருவூலம் மற்றும் புதையல் சட்டம் (1878), பழங்காலப் பொருட்கள் மற்றும் கலைக் கருவூலங்கள் சட்டம் (1972) பழமைவாய்ந்த நினைவுச்சின்னங்கள், தொல்லியல் ஆய்வுக் களங்கள் மற்றும் எஞ்சிய பொருட்கள் சட்டம் (1958) ஆகியவை வகுக்கப்பட்டுள்ளன.

### தொல்லியல் ஆய்வுகள்

- தொல்லியல் அகழாய்வுப் பணி என்பது பண்டைக்கால சமூகத்தின் வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ளும் நோக்கில் முறைப்படி ஓர் இடத்தை அகழ்ந்து, சான்றுகளாகக் கிடைத்த பொருள்களை முறையாகத் திரட்டி ஆராய்வதாகும்.
- தமிழ்நாட்டின் அரிக்கமேடு. அழகன்குளம் , கீழடி. கொடுமணல், உறையூர் கரூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை வசவசமுத்திரம் ஆகிய இடங்களிலும், கேரளத்தின் பட்டணம் என்ற இடத்திலும் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளிலிருந்து சங்க கால மக்களின் வாழ்க்கை முறைக்கான பலவகையான தொல்லியல் சான்றுகள் கிட்டியுள்ளன.
- தொல்பழங்காலத்து மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள், உறைவிடங்கள், தாழிகள், பிணக்குழித் தோட்டங்கள் முதலியன தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றன.
- **1863** ஆம் ஆண்டு **இராபர் புரூஸ் புட்** என்பவர் சென்னையை அடுத்த பல்லாவரத்தில் பழங்கால கற்கால கருவிகளை கண்டறிந்தார். இந்தக் கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம் ஆகும்.
- இந்த கண்டுபிடிப்பிற்கு முன்னைய ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டறிந்தனர்.
- அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால் ரோமானியருக்கும் தமிழருக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.
- இராமநாதபுரம் அழகன்குளத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கீறல் கோட்டோவியம் வணிகக் கப்பலைக் குறிக்கிறது. சங்ககாலத் தமிழர்களின் துறைமுகமாகக் கருதப்படும் அழகன் குளத்திலிருந்து ரோம் நகரத்திற்குக் கடல் பயணம் மேற்கொண்ட கப்பலின் மாதிரியாக இது குறிப்பிடப்படுகிறது.
- ஈரோடு மாவட்டம் கொடுமணல், போடி நாயக்கனூர் ஆகிய ஊர்களில் முத்திரை பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன.
- அமராவதி ஆற்றுப்படிகைகளில் சேரர்களின் பல்வேறு நாணயச் சான்றுகள் கிடைத்துள்ளன. தாய்லாந்தின் பல்வேறு துறைமுகங்களிலும் சோழர்களின் சதுரச் செப்பு நாணயங்கள் கிடைத்ததாக வரலாறு கூறுகிறது.
- ரோமானிய நாணயங்கள் தென்னிந்தியாவில் கோயம்புத்தூர் மண்டலத்தில் செறிந்து காணப்படுகின்றன.

### சாசனங்களும் பட்டயங்களும்

- சாசனங்கள் இரு வகைப்படும். அவை, கல்வெட்டுகள், செப்பேடுகளுமாகும். தமிழகத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் காலத்தால் பழமையானவை. இவை "தமிழி" எழுத்துக்களாலான கல்வெட்டுக்களாகும்.

- பொ.ஆ.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த அசோகனின் கிர்னார் கல்வெட்டு அன்றைய தமிழகத்து அரசுகளைக் காட்டுகின்றது.
- அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டு சத்திய புத்திரா என்ற தென்னிந்திய மன்னரைக் குறிப்பிடுகிறது. அவர் தென்னிந்தியாவை ஆட்சி செய்த அதியமானாக அறியப்படுகிறார். ஜம்பைக் கல்வெட்டு அசோகர் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த அதியமானின் சமயப் பொறைக்கு விளக்கமளிக்கின்றது.
- களப்பிரர் காலத்து அரசியல் குழப்பங்களை வேள்விக்குடி சாசனம் சுட்டிக் காட்டுகின்றது. இது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த, ஆவணமாக அறியப்படுகிறது. இது முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னரால் கொடையாக அளிக்கப்பட்ட நிலப்பட்டயத்தைக் குறிக்கிறது.
- நந்திவர்ம பல்லவ மன்னனுடைய கல்வெட்டொன்று தமிழ் மன்னர்களை "திராவிட மன்னர்கள்" என்று குறிப்பிடுவதால் பல்லவர்களைத் தமிழர்களிலிருந்து வேறுபடுத்திக்காட்டுவதை அறியமுடிகிறது.
- திருவாலங்காடு பகுதியில் செய்யப்பட்டயங்கள் கண்டறியப்பட்டது. இந்த செப்புப் பட்டயங்கள் முதலாம் இராஜேந்திரச் சோழனால் சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டது. சுந்திரச்சோழனால் அன்பில் செப்பேடுகள் வெளியிடப்பட்டன.
- உத்திரமேரூர் சாசனங்களும், கரந்தை, திருவாலங்காடு பட்டயங்களும், சின்னமனூர்ச் செப்பேடுகளும், வேள்விக்குடி சாசனமும் மிக முக்கியமானவைகளாகும். வேள்விக்குடி சாசனத்தில் சங்க காலத்து மன்னன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கல்வெட்டுச் சான்றுகள்**

- 1886 ல் பேராசிரியர் ஹல்ட்ஸ்ச் என்பவரால் கல்வெட்டுகள் முறையாக படித்தறியப்பட்டது. கல்வெட்டுகளைக் குறித்து படிப்பது 'கல்வெட்டியல்' ஆகும்.
- தமிழகத்தில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்ட மொழியின் வரிவடிவத்திற்குத் தமிழ் பிராமி என்று பெயர்.
- தமிழகத்தின் இருண்ட காலம் என்று அறியப்படும் களப்பிரர்களின் காலம் பற்றிய குறிப்பீடுகளைக் கொண்ட பூலாங்குறிச்சி கல்வெட்டு சிவகங்கை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டது. அது பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படுகிறது. இதில் கூற்றன், சேத்தன் போன்ற ஆட்சியாளர்கள் பெயர் காணப்படுகிறது.
- ஐராவதம் மகாதேவன் அவர்களால் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனைப் பற்றிய மாங்குளம் குகை கல்வெட்டு கண்டறிப்பட்டது. சேரர்களின் புகழைக் கூறும் புகளூர் கல்வெட்டு கரூர் மாவட்டத்தில் காணப்படுகிறது.

**தமிழ் பிராமி கல்வெட்டுகள்**

- தமிழ்நாட்டில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கற்பாறைகளிலும் குகைகளிலும் காணப்படுகின்றன. சமணத் துறவிகள் இக்குகைகளைப் பெரும்பாலும் தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தனர்.
- மழைநீர் வழிந்து வெளியேறுவதற்காகச் சிறிய பகுதியை வெட்டி கொடுங்கை போன்று செதுக்கியிருந்தனர்.
- தமிழ்நாட்டில் மாங்குளம், முத்துப்பட்டி, புகலூர், அரச்சலூர், ஜம்பை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் உள்ள குகைகளில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் காணப்படுகிறது.

## தமிழகத்திலுள்ள பெருங்கற்கால தொல்லியல் ஆய்விடங்கள்:

**1. ஆதிச்சநல்லூர் - தூத்துக்குடி மாவட்டம்:**

- ஆதிச்சநல்லூர் திருநெல்வேலியிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 1876 ஆம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த இயற்கைவியலாளரும்,இன வரைவியலாளருமான ஆண்டிரு ஜாகர் ஆதிச்சநல்லூரில் முதன்முதலில் அகழ்வாய்வை மேற்கொண்டார்.
- 1903–04 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அலெக்சாடர் ரே ஆதிச்சநல்லூரில் 9000 க்கும் மேற்பட்ட தொல் பொருட்களை கண்டுபிடித்தார்.
- இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில், முதுமக்கள் தாழிகள், பல்வகைப்பட்ட மட்பாண்டங்கள் (கருப்பு, சிவப்பு ) இரும்பாலான குத்துவாள், கத்திகள், ஈட்டிகள், அம்புகள், சில கல்மணிகள், ஒரு சில தங்க ஆபரணங்கள் கிடைத்துள்ளன.
- வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளான புலி, யானை, மான் போன்றவற்றின் வெண்கலத்தாலான உருவங்கள் கிடைத்துள்ளன.
- மட்பாண்டங்கள் செய்தல், கல் மற்றும் மரங்களைப் பயன்படுத்தி பொருட்கள் செய்தல் போன்ற திறன்களை மக்கள் பெற்றிருந்தனர்.

**2. கீழடி -சிவகங்கை மாவட்டம்**

- இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை திருப்புவனம் தாலுகாவிலுள்ள கீழடி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த பழமையான நகரத்தை அகழ்ந்து ஆய்வு செய்துள்ளது.
- செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் நன்கு அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு போன்ற சான்றுகள் இந்த ஆய்வில் கிடைத்துள்ளன.
- மேலும் தமிழ்–பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள மண்பாண்டங்கள், கண்ணாடியிலான மணிகள், செம்மணிகள், வெண்கல் படிகம், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள், சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை போன்றவையும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.
- 2017ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் துறை இரு மாதிரிகளை கதிரியக்க கார்பன் வயதுக்கணிப்பு முறையில் கணிக்க அமெரிக்காவில் புளோரிடா என்னும் இடத்தில் உள்ள பீட்டா அனாலடிக் என்ற நிறுவனத்திற்கு அனுப்பியது.
- அச்சோதனையில் இப்பொருள்கள் கி.மு (பொ.ஆ.மு) 200ஐச் சார்ந்தது என்பது தெரியவந்துள்ளது. இங்கு ரோம்நாட்டைச் சேர்ந்த பழங்கால தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே நிலவிய வணிகத் தொடர்பிற்கு மேலும் சில சான்றுகளாகும்.
- தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பன குறித்தும் பெரிப்பிளஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருந்தல் - திண்டுக்கல் மாவட்டம்**

- புதைகுழிப் பொருட்கள், கண்ணாடி மணிகள் (வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் மற்றும் பச்சை வண்ணங்களில் ) இரும்பு வாள்கள், தமிழ் –பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள், அரிசி நிரப்பப்பட்ட மட்பாண்டங்கள், ஓரளவு அரிதான கற்களான படிகக்கல், சிவப்பு நிற மணிக்கற்கள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்கள் இரும்பினாலான கதிர் அறுக்கும் அரிவாள், ஈட்டி, கொழுமுனைகள் ஆகியவை தமிழக மக்கள் நெல் விளைவித்ததற்கு சான்றுகளாய் உள்ளன.
- இங்கு கிடைத்துள்ள அரிசி நிரம்பிய பானை, மக்களின் முக்கிய உணவாக அரிசி இருந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

**4. பையம்பள்ளி - வேலூர் மாவட்டம்**

- இங்குமேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்தபொருட்கள் இரும்பினால் செய்யப்பட்ட தொல் பொருட்களோடு பெருங்கற்காலத்து கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.
- பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. ரேடியோ கார்பன் முறையில் இப்பண்பாட்டின் காலம் கி.மு. (பொ.ஆ.மு) 1000 என கணிக்கப்பட்டுள்ளது.

**5. கொடுமணல்-ஈரோடு மாவட்டம்**

- பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள கொடுமணம் என்னும் ஊர் இதுவே என அடையாளப்படுத்தப்படுகிறது.

SURA'S

- இங்கு தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட முந்நூற்றுக்கும் அதிகமான மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- மேலும் நூல் சுற்றி வைக்கப்பயன்படும் சுழல் அச்சுக்கள், சுருள்கள், துணிகளின் சிறிய துண்டுகள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், மணிகள் முக்கியமாக சிவப்பு நிற மணிக்கற்கள் ஆகியவற்றையும் தொல்லியல் ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.
- புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக் கல் (Menhir) பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் பெருங்கற்கால நினைவு சின்னங்கள்

புதிய கற்காலத்தின் கடைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருங்கற்காலப் புதைப்பு முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இம்முறையின்படி இறந்தவர்களின் உடல் பெரிய மட்பாண்டத்தில் வைக்கப்படும். ஏனைய சில பொருட்களும் அதனுடன் வைக்கப்படும். இந்த பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரும்பைக் குறித்த அறிவைப் பெற்றிருந்த, சமூகமாக கூடி வாழத் தெரிந்திருந்த மிகவும் முன்னேறிய தமிழ் நாகரிகத்திற்கான சாட்சிகளாகும்.

**கற்திட்டைகள்** (Dolmens):

- இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறம் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின்மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும்.
- இக்கற்திட்டைகள் வீரராகவபுரம் (காஞ்சிபுரம் மாவட்டம்) கும்மாளமருதுபட்டி (திண்டுக்கல் மாவட்டம்) நரசிங்கம்பட்டி (மதுரைமாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**நினைவு கற்கள் (Menhir)**

- பிரித்தானிய (Briton) மொழியில் 'மென்' என்றால் கல், 'கிர்' என்றால் நீளமான'' என்று பொருள். ஒரே கல்லிலான இத்தூண்கள் இறந்தோரின் நினைவாக செங்குத்தாக நடப்படும்.
- திருப்பூர் மாவட்டம் சிங்கரிபாளையம், தேனி மாவட்டம் வெம்பூர் ஆகிய இடங்களில் இவ்வாறான நினைவுத் தூண்கள் உள்ளன.
- இவை உப்பாற்றின் இரு கரைகளிலும் பழங்கால வாழ்விடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.
- மதுரை மாவட்டம் நரசிங்கம்பட்டியிலும், ஈரோடு மாவட்டம் குமிக்கல்பாளையத்திலும், கொடுமணலிலும் இது போன்ற நினைவுத் தூண்கள் உள்ளன.

**நடுகற்கள்**

- போர்க்களத்திலும் ஆநிரை கவரும் சண்டைகளிலும் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடப்பட்டன.
- முல்லை நில வாழ்க்கையில் மக்களின் சிறப்பான செல்வ வளமாகக் கால்நடைகள் இருந்தன. அருகருகே வாழ்ந்த இனக்குழுவினர் மற்ற குழுவினரின் கால்நடைகளைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்வதற்காகச் சண்டையிட்டுள்ளனர்.
- முல்லைநில மக்களின் தலைவன் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டுக் கால்நடைகளைக் கவர்ந்து வரும்போது அதனை எதிர்த்து போரிடுவர். அப்போது இறக்கநேரிடும் வீரர்களைத் தியாகிகளாகப் போற்றி அவர்களின் நினைவாக நடுகற்களை நிறுவினர்.
- நடுகற்கள் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து தொல்காப்பியம் விரிவாக எடுத்துரைக்கிறது.
- புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக் கோட்டை என்ற இடத்தினும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் காணப்படுகின்றது.
- திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு அருகேயுள்ள மானூர், தூத்துக்குடி மாவட்டம் வெள்ளாளன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன.
- வைகை ஆற்றுப்பள்ளத்தாக்கில் உள்ள ஊர் புலிமான்கோம்பை ஆகும். இது பொ.ஆ.மு நான்கு முதல் மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக கருதப்படுகிறது.
- புலிமான் கோம்பையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் கீழ்க்கண்ட செய்தி காணப்படுகிறது. ''கூடல் ஊர் ஆகோள் பெடு தியன் அந்தவன் நல்'' இதன் பொருள்: ''கூடலூரில் ஆநிரை கவர்ந்தபோது நடந்த பூசலில் கொல்லப்பட்ட தியன் அந்தவனின் கல்'' என்ற குறிப்பு காணப்படுகிறது.

### தமிழக தொல்லியல் அகழாய்வுகள்

| இடம் | மாவட்டம் | அகழாய்வு நடந்த ஆண்டு | தளத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| 1. கொற்கை | தூத்துக்குடி | 1968 –1969<br>2020 – 2021 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 2. பாஞ்சாலங் குறிச்சி | தூத்துக்குடி | 1968 –1969 | நவீனக் காலம் |
| 3. வசவசமுத்திரம் | செங்கல்பட்டு | 1969 – 1970 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 4. ஆனைமலை | கோயம்புத்தூர் | 1969–1970 | பெருங் கற்காலம் |
| 5. பல்லவமேடு | காஞ்சிபுரம் | 1970–1971 | இடைக்காலம் |
| 6. கரூர் | கரூர் | 1973–1974<br>1994–1995 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 7. பனைக்குளம் | தருமபுரி | 1979–1980 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 8. போளுவாம்பட்டி | கோயம்புத்தூர் | 1979–1980<br>1980–1981 | இடைக்காலம் |
| 9. கோவலன் பொட்டல் | மதுரை | 1980–1981 | பெருங் கற்காலம் |
| 10. தொண்டி | இராமநாதபுரம் | 1980–1981 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 11. கங்கைகொண்ட சோழபுரம் | அரியலூர் | 1980–1981<br>1986–1987<br>2008–2009<br>2020–2021<br>2021–2022<br>2022–2023 | இடைக்காலம் |
| 12. கண்ணனூர் | திருச்சிராப்பள்ளி | 1982–1985 | இடைக்காலம் |
| 13. குரும்பன்மேடு | தஞ்சாவூர் | 1984–1985 | இடைக்காலம் |
| 14. பழையாறை | தஞ்சாவூர் | 1984–1985 | இடைக்காலம் |
| 15. அழகன்குளம் | இராமநாதபுரம் | 1986–1987<br>1990–1991<br>1992–1993<br>1994–1995<br>1996–1997<br>2014–2015<br>2016–2017 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 16. திருக்கோவிலூர் | கள்ளக்குறிச்சி | 1992–1993 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 17. கொடுமணல் | ஈரோடு | 1992–1993<br>1996–1997<br>2019–2020<br>2020–2021 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 18. சேந்தமங்கலம் | விழுப்புரம் | 1992–1993<br>1994–1995 | இடைக்காலம் |
| 19. படைவீடு | திருவண்ணாமலை | 1992–1993 | இடைக்காலம் |

SURA'S

| இடம் | மாவட்டம் | அகழாய்வு நடந்த ஆண்டு | தளத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| 20. திருத்தங்கல் | விருதுநகர் | 1994–1995 | இடைக்காலம் |
| 21. பூம்புகார் | மயிலாடுதுறை | 1992–1993 | இடைக்காலம் |
| 22. மாளிகைமேடு | கடலூர் | 1999–2000 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 23. தேரிருவேலி | இராமநாதபுரம் | 1999–2000 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 24. மாங்குடி | திருநெல்வேலி | 2001–2002 | நுண்கற்காலம் |
| 25. பேரூர் | கோயம்புத்தூர் | 2001–2002 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 26. ஆண்டிப்பட்டி | தி ரு வ ண் ண ா மலை | 2004–2005 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 27. மோதூர் | தருமபுரி | 2004–2005 | புதிய கற்காலம் |
| 28. மரக்காணம் | விழுப்புரம் | 2005–2006 | இடைக்காலம் |
| 29. பரிக்குளம் | திருவள்ளூர் | 2005–2006 | பழங் கற்காலம் |
| 30. நெடுங்கூர் | கரூர் | 2006–2007 | பெருங்கற்காலம் |
| 31. மாங்குளம் | மதுரை | 2006–2007 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 32.செம்பியன்கண்டியூர் | நாகப்பட்டினம் | 2007–2008 | பெருங்கற்காலம் |
| 33. தரங்கம்பாடி | மயிலாடுதுறை | 2008–2009 | பெருங்கற்காலம் |
| 34. ராஜாக்கள் மங்கலம் | திருநெல்வேலி | 2009–2010 | இடைக்காலம் |
| 35. தலைச்சங்காடு | நாகப்பட்டினம் | 2010–2011 | இடைக்காலம் |
| 36. ஆலம்பரை | செங்கல்பட்டு | 2011–2012 | நவீனக்காலம் |
| 37. ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி | 2013–2014 2014–2015 | இடைக்காலம் |
| 38. உக்கிரன் கோட்டை | திருநெல்வேலி | 2014–2015 | இடைக்காலம் |
| 39. பட்டறைப் பெரும்புதூர் | திருவள்ளூர் | 2015–2016 2017–2018 2022–2023 | பிந்தைய பழைய கற்காலம் |
| 40. கீழடி | சிவகங்கை | 2017–2018 2018–2019 2019–2020 2020–2021 2021–2022 2022–2023 2024 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 41. ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 2019–2020 2020–2021 | இரும்புக் காலம் |
| 42. சிவகளை | தூத்துக்குடி | 2019–2020 2020–2021 | இரும்புக் காலம் |
| 43. மயிலாடும்பாறை | கிருஷ்ணகிரி | 2020–2021 2021–2022 | புதிய கற்காலம் |
| 44. வெம்பக் கோட்டை | விருதுநகர் | 2021–2022 2022–2023 2024 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 45. துலுக்கர்பட்டி | திருநெல்வேலி | 2021–2022 2022–2023 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 46. பெரும்பாலை | தருமபுரி | 2021–2022 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 47. கீழ்நமண்டி | திருவண்ணாமலை | 2022–2023 2024 | இரும்புக் காலம் |
| 48. பொற்பனைக் கோட்டை | புதுக்கோட்டை | 2022–2023 2024 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 49. பூதிநத்தம் | தருமபுரி | 2022–2023 | புதிய கற்காலம் |
| 50. திருமலாபுரம் | தென்காசி | 2024 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 51. சென்னானூர் | கிருஷ்ணகிரி | 2024 | புதிய கற்காலம் |
| 52. கொங்கல் நகரம் | திருப்பூர் | 2024 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 53. மருங்கூர் | கடலூர் | 2024 | தொடக்க வரலாற்றுக் காலம் |

# சங்க காலம்

- கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளே சங்ககாலம் என்பது பெரும்பாலோர் ஒத்துக்கொள்ளும் காலவரையறை ஆகும். இதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்கள், கல்வெட்டுகள், தொல்பொருளியல் மூலம் கிடைக்கப்பெற்றன. எனவே இக்காலகட்டத்தை தொடக்க வரலாற்றுக் காலம் எனக் கூறலாம்.
- சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்க்கு உரியதாகக் கூறுகின்றன. 'வண்புகழ் மூவர் தன்பொழில் வரைப்பு' என்று தொல்காப்பியம் கூறுகின்றது. மூவேந்தர்கள் எப்போது தோன்றினார்கள் என்று கூறுவது எளிதன்று. அவர்கள் தொன்மையான அரச மரபினர் என்று மட்டுமே கூற இயலும். வால்மீகி ராமாயணம், மகாபாரதம், அர்த்தசாஸ்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளதால் இவர்களை கிறிஸ்துவுக்கு பன்னெடுங்காலம் முற்பட்டவர்கள் என உறுதியாகக் கூற இயலும்.
- முடியுடைய மூவேந்தரிலும் சேரர்களே பழைமையானவர் என்று கூறுகின்றனர். புறநானூற்றில் உள்ள பாடல்கள் சேர, சோழ, பாண்டியர் என்ற வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. "போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" என்று தொல்காப்பியர் சேரரை முன்வைத்துள்ளார். சேரர்களை வானவர், வில்லவர், குடவர், குட்டுவர், பொறையர், மலையர், உதியன் என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடுவர்.
- மேட்டுநிலப் பகுதியான மலைநாட்டுக்கு உரியவர்கள் சேரர்கள். குட்ட நாட்டை ஆண்டவர்கள் 'குட்டுவன்' என்றும், குடநாட்டை ஆண்டவர்கள் 'குடவர்' என்றும், பூழி நாட்டை ஆண்டவர்கள் 'பூழியர்' என்றும் அழைக்கப்பட்டனர். சேரமன்னர்களின் பெயரின் காணப்படும் 'பொறை' என்ற சொல் மலையைக் குறிக்கும் சொல்லாகும்.
- சோழர்கள் சென்னி, செம்பியன், வளவன், கிள்ளி என்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர்.
- பாண்டியர்கள் மீனவர், கவுரியர், பஞ்சவர், செழியர், தென்னவர் மாறர் என்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

என்று தம்மை அழைத்துக் கொண்ட ஹங் சியு–சுவான், தோல்வியைக் கண்டு மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டார். தைப்பிங் கலகம் அடக்கப்பட்டுவிட்டது.

### தைப்பிங் கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்

1851லிருந்து, 1864 வரை சீனா முழுவதையும் ஆட்கொண்டிருந்த இப்பெருங்கலகம் ஏற்படக் காரணம் சீனாவின் மஞ்சுப் பேரரசின் திறமையின்மையே ஆகும். பேரரசு படையினர், தைப்பிங்குகளின் படைகளுக்கு முன் நிற்காமல் சிதறியோடினர். தைப்பிங் கலகத்தினர் இன்னும் சிறப்பாகப் பணியாற்றி, மக்களின் குறைகளைப் போக்கி, திறமையான, நேர்மையான, ஆட்சி முறையை ஏற்படுத்த முயன்றிருந்தால் ஒருவேளை மஞ்சுகுலத்தினரை வீழ்த்தி, பேரரசைக் கைப்பற்றியிருக்கலாம். ஆனால், தைப்பிங் இயக்கத்தினரிடையே திறமையான, ஆற்றல்மிக்க தலைவர்கள் தோன்றவில்லை. திறமையுடன் செயலாற்றிய தலைவர்கள் புரட்சியின் ஆரம்ப காலத்திலேயே உயிரிழந்தனர். அதன்பின்னர் தோன்றிய தலைவர்களுக்குள் ஒற்றுமையில்லை. அவர்களுக்குள்ளேயே போட்டியும் பொறாமையும் ஏற்பட்டன. ஒருவரையொருவர் தாக்கி அழித்துக்கொள்ள முற்பட்டனர். இந்த உட்பூசலைத் தடுத்து, தன்கீழ்ப் பணியாற்றிய இளவரசர்களை அமைதிப்படுத்தும் திறமையற்று விளங்கினார் ஹங்–சியு–சுவாங். இத்தகைய குறைபாடுகளினால் தைப்பிங் கலகம் தோல்வியில் முடிந்தது.

செங்–கோ–ஃபான், லி–ஹங்–சாங் போன்ற படைத் தலைவர்களின் எழுச்சியும், அவர்கள் கையாண்ட படைச் சீர்திருத்த முறைகளும், பேரரசு படைகளை மிகவும் சிறப்படையச் செய்தன. மிகப் பெரிய தைப்பிங் படைகளை எதிர்த்து, எண்ணிக்கையில் குறையான வீரர்களைக் கொண்டு, தமது திறமையாலும், போர்த் தந்திரத்தாலும் செங்–கோ–ஃபான் மாபெரும் வெற்றிகளைப் பெற்றார். உள்நாட்டில் யாங்ட்சி பள்ளத்தாக்கிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தைப்பிங் படைகளைத் தோல்வியுற்றுப் பின்னடையச் செய்து, கடற்கரைப் பகுதிகளுக்கு விரட்டினார். கடற்கரைப் பகுதிகளை அடைந்த தைப்பிங் படையினருக்கு உரிய வரவேற்பளிக்க, ஐரோப்பியர்களின் தகரிகள் (பீரங்கிகள்), வேட்டெஃகங்கள் (துப்பாக்கிகள்) காத்துக் கொண்டிருந்தன. இவ்விரு படைகளுக்கிடையே சிக்கிய தைப்பிங் படைகள் அழிந்தன.

தைப்பிங்குகளின் சமூக, பொருளாதாரச் சீரமைப்புத் திட்டங்கள், மக்களிடையே வெறுப்புணர்ச்சியைத் தோற்றுவித்தன. கன்பூசியத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருந்த பாமர மக்கள் தைப்பிங்குகளின் புரட்சித் திட்டங்களை ஏற்க மறுத்தனர். தேசியமும், கூட்டுப்பண்ணை முறைகளும், சமுதாயச் சமநிலை அமைப்பும், சகோதரத்துவக் கொள்கையும், கொள்கையளவில் மிகச் சிறந்ததாகக் காணப்பட்டாலும், பழமைச் சமுதாய நெறியில் ஊறிவிட்டவர்கள், இப்புதிய கருத்துகளை ஏற்க மறுத்தனர். ஆரம்பத்தில் தைப்பிங்குகளுக்கு பாமர மக்கள் காட்டிய ஆதரவு மறையத் தொடங்கியது.

மஞ்சுக்களின் திறமையின்மை, ஊழல், அதிகார வேட்கை. தரக்குறைவான வாழ்க்கை நெறிகள் இவைகளைச் சாடி, இக்குறைபாடுகளை நீக்கித் தூய்மையான, நேர்மையான, சமதர்ம சமுதாய அமைப்பில் திறமையான ஆட்சியமைப்பினை உருவாக்கி, நாட்டு மக்கள் நலனைப் பேணிப் பாதுகாப்போம் எனச் சூளுரைத்த தைப்பிங்குகள், அதிகாரத்தைக் கைப்பற்றியதும், மஞ்சுக்களிடம் காணப்பட்ட அதே தவறுகளைத் தாங்களும் செய்தனர். மஞ்சுக்கள் அரசியலில் காணப்பட்ட குறைபாடுகள் அப்படியே தைப்பிங்குகளின் ஆட்சியிலும் காணப்பட்டன.

தைப்பிங் கலகம், சமய அடிப்படையில் தோன்றியதால், சீன மக்கள் அனைவரின் முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றிருக்கவில்லை. இக்காரணத்தால் இதனை மஞ்சுக்களுக்கெதிரான தேசிய எழுச்சியெனக் கருத இயலாது. அத்துடன் தைப்பிங் படையினரின், தேவையற்ற அழிவுச் செயல்கள் நாட்டு மக்களுக்கு எல்லையற்ற வேதனையை ஏற்படுத்தின. இறுதியாக, அந்நியர்கள் மஞ்சுப் பேரரசை ஆதரிக்க ஆரம்பித்தவுடனேயே தைப்பிங் கலகத்தினரின் முடிவு காலம் நெருங்கிவிட்டது.

### தைப்பிங் கலகத்தின் விளைவுகள்

தைப்பிங் கலகம் முடிவுற்றாலும் அதன் விளைவுகள் சீன வரலாற்றில் சில முக்கிய மாறுதல்களைத் தோற்றுவித்தன. தைப்பிங் கலகத்தின்போது நாட்டின் பல பகுதிகள் அழிக்கப்பட்டன. கலகம் முடிந்து பல ஆண்டுகள் அழிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வரிவசூல் செய்வது இயலாது போயிற்று. இதனால் மைய அரசின் நிதி நிலை மிகவும் சீர்கேடுற்றது. ஐரோப்பியர்களுக்குப் போர் இழப்பீட்டுத் தொகை கொடுக்க இயலவில்லை, படைச் சீர்திருத்தச் செலவுகளை ஏற்கவும், பணமில்லாது போயிற்று. அரசின் அடிப்படைக் கடமையான சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவைகளைக்கூட நிறைவேற்ற இயலாத அளவிற்கு மைய அரசு திறமையற்றுவிட்டது என்பது தெளிவாகியது.

இக்கலகம் 1911–ல் ஏற்பட்ட சீனப் புரட்சிக்கு முன்னோடியாய் இருந்தது.

இக்கலகத்தின்போது இருபது மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். ஒருசில வரலாற்றாசிரியர்கள் இத்தொகையை முப்பது மில்லியன்கள் என்றும் குறிப்பிடுகின்றனர், இத்தகைய படுகொலை உலக வரலாற்றிலேயே ஏற்பட்டதில்லை எனலாம். இத்தகைய படுகொலையால் ஒரு நன்மை ஏற்பட்டது என்றும் கருதப்படுகிறது. இவ்வளவு மக்கள் இறந்துபட்டதனால், ஒருசில ஆண்டுகள் சீனா, மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படுகின்ற தீய விளைவுகளிலிருந்து தப்பியது.

தைப்பிங் கலகத்தினர் சில சீர்திருத்தங்களை ஏற்படுத்த முனைந்தனர். இச்சீர்திருத்தங்களை மக்கள் விரும்பியேற்றுக் கொள்ளவில்லையென்றாலும், சீர்திருத்தங்களின் தேவையை உணர்ந்தனர். சீன வரலாற்றில் இதன்பின்னர்த் தோன்றிய சீர்திருத்த இயக்கங்களுக்கும் இக்கலகம் முன்னோடியாய் இருந்திருக்கின்றது.

நிதிப்பற்றாக்குறை காரணமாகச் சீனாவில் இக்கலகத்தின்போது புதிய வரியொன்று விதிக்கப்பட்டது. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு பொருள்களை எடுத்துச் செல்லும்போது, அப்பொருள்களின் மீது வரி விதிக்கப்பட்டது. இப்புதிய வரியினால் மிக அதிகமான பணம் வசூலிக்கப்பட்டு, நிதிநிலையை ஓரளவுக்குச் சீராக்க முடிந்தது.

தைப்பிங் கலகத்தின்போது, ஷாங்காய்த் துறைமுகத்திலிருந்த சுங்கவரி அதிகாரிகள் அனைவரும் ஓடிவிட்டனர். இதனால் ஐரோப்பியர்கள் தங்கள் கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்கவோ, ஏற்றுமதிப் பொருள்களை எடுத்துச் செல்லவோ இயலவில்லை. மேலும், சீன அரசுக்குச் சுங்கவரி செலுத்துவது தங்கள் கடமை என்பதனை உணர்ந்த ஆங்கிலேயர்கள், தாங்களாகவே சுங்கவரியை வசூலிக்க ஆரம்பித்தனர். இவ்வாறு வசூலிக்கப்பட்ட சுங்க வரியினை முறையாக மைய அரசுக்கு அனுப்பி வைத்தனர். கலகம் முடிவுற்ற பின்னர் திரும்பிவந்த சீன அதிகாரிகள், ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் நடக்கின்ற சுங்கவரி வசூல் முறைகளைக் கண்டு வியந்தனர். ஆங்கிலேயர்கள் பின்பற்றிய அதே முறைகளை ஏற்றுக் கொண்டதோடு, ஆங்கிலேய அதிகாரிகளைத் தொடர்ந்து பணியாற்றுமாறும் வேண்டிக்கொண்டனர். இம் முறை ஒருசில மாறுதல்களுடன், 1920 வரை செயல்பட்டது.

மைய அரசு படைகளின் திறமைக் குறைவினை அறிந்த மஞ்சுக்கள், மாநிலப் படைகளை உருவாக்கினர். ஒவ்வொரு மாநில ஆளுநரும் ஒரு பெரிய படையை உருவாக்கி, பயிற்சியளித்து வைத்திருக்கின்ற உரிமைகளைப் பெற்றார். இந்த நிலையினால்தான் பிற்காலத்தில் போர்ப் பிரபுக்கள் (War Lords) என்றழைக்கப்பட்ட படைப் பிரபுக்கள் தோன்றி, மஞ்சு அரசின் கட்டளைகளை ஏற்க மறுத்து, புரட்சிகளில் ஈடுபட்டனர். ஒரு சில பிரபுக்கள் தங்களது படை வலிமையால் பேரரசரை ஆட்டிப் படைக்கின்ற அளவுக்கு வலிமை பெற்றனர். இதன் விளைவாக 1911 வரை, சீனாவில் உள்நாட்டுப் போர்கள், கலகங்கள் ஏற்பட்ட வண்ணம் இருந்தன.

மாநில ஆட்சித் தலைவர்கள், பேரரசின் திறமையின்மையை உணர்ந்து, நெருக்கடியான காலங்களில், தங்களது மூத்தோர் அவையைக் கூட்டி ஆலோசனை நடத்தினர். இதனால் மாநிலங்களிலிருந்த அறிஞர்கள் அரசியல் செல்வாக்குப் பெற முடிந்தது. இவ்வாறு உருவாக்கப்பட்ட அரசியல் அறிஞர்கள் தாம் அரசியலமைப்புக் கோரி ஏற்பட்ட இயக்கத்தினையும் சீனாவின் சீர்திருத்த இயக்கத்தினையும் தோற்றுவித்து வளர்த்தவர்களாவார்கள்.

# இரண்டாம் அபினிப்போர் (1856-1860)

**காரணங்கள்**

நாங்கிங் உடன்படிக்கையின் விளைவாகச் சீனக் கதவுகள் சிறிதளவு திறக்கப்பட்டனவே தவிர, முழுவதுமாகத் திறக்கப்படவில்லை. சீனக்கதவுகளை முழுவதுமாகத் திறந்து, சீனாவெங்கிலும் பயணம்செய்யும் உரிமையைப் பெறுதலையும், சீன மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதையும் நோக்கங்களாகக் கொண்டிருந்த ஐரோப்பியர்களுக்கு நாங்கிங் உடன்படிக்கை ஆரம்பமாகத் தோன்றியதே தவிர, அவர்களது முழு வேட்கையைத் தணிக்கவில்லை. எனவே, மேலும் உரிமைகள் பெற ஐரோப்பியர்கள் முயன்றனர். ஐரோப்பியர்களை வெறுத்த சீன அரசும், ஏற்கெனவே அளித்த உரிமைகளையே நிறைவேற்றத் தயங்கியபோது, மேலும் புது உரிமைகளைத் தர மறுத்தது. இதனால் மீண்டும் ஐரோப்பிய சீன உறவுகள் மோசமடைந்தன.

மேலும், அபினி வர்த்தகம் தொடர்ந்து நடைபெறுவதையும், அதனால் சீனப் பொருளாதார நிலை பாதிக்கப்படுவதோடு, மக்கள் நலமும் கெடுகிறது என்று சீன அரசும், மக்களும் ஐரோப்பியர்களை வெறுத்தனர். அத்துடன் ஐரோப்பியர்கள் சீனர்களைப் பெருமளவில் வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று, அங்குக் கூலிகளாகப் பயன்படுத்தினர், இவ்வாறு வெளிநாடு சென்ற சீனக்கூலிகள் மிருகங்களைவிட மோசமாக நடத்தப்பட்டனர். இதை உணர்ந்த சீனர்கள் கொதிப்படைந்தனர். மேலும், சீனக் கடற்பகுதிகளில் கடற்கொள்ளைக்காரர்கள் மிகுந்து காணப்பட்டனர். கள்ள வாணிபமும் நடைபெற்றது. போர்ச்சுக்கீசியரும், மற்ற ஐரோப்பியர்களும் இவைகளுக்கு, உடந்தையாக இருக்கின்றனர் என்றும் சீன அரசு நம்பியது. இதனால் சீனர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்ட சீனச் சட்டங்களின் செயல்முறைகளிலிருந்த விதிவிலக்கு (Extra-territorial) ஐரோப்பியக் கிறித்தவ சமயத்தினருக்கும் கிடைத்தது. அத்துடன் கிறித்தவ சமயத்தைத் தழுவிய சீனர்களும் இவ்வுரிமையில் அடங்கினர். இவைகள் அனைத்தும் சீன மக்களைக் கொதிப்படையச் செய்தன.

இதற்கிடையில் ஐரோப்பியர்கள் தங்கள் தூதுவர்களுக்குப் பீகிங் நகரில் தங்க அனுமதி கோரினர். ஐரோப்பியர்களுக்குச் சம உரிமை அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை மேலும் வலியுறுத்தினர். தங்கள் வர்த்தகத்திற்கு மேலும் பல துறைமுகங்கள் திறந்துவிடப்பட வேண்டும் என்றும், ஐரோப்பிய வர்த்தகர்கள் சீனாவெங்கிலும் தடையின்றிப் பயணம் செய்யும் உரிமைகளையும் கோரினர். கிறித்தவ சமயப் பரப்பாளர்கள் சீனர்களைச் சமய மாற்றம் செய்யும் உரிமையையும், மதத்தைப் பரப்புகின்ற உரிமையையும், தங்கள் சமயத்தினருக்குப் பாதுகாப்பையும் வேண்டினர். பீகிங் நகரில் தங்களது தூதுவர்கள் முழுப்பாதுகாப்புடன் தங்கியிருந்து, பேரரசரவையில் இடம் பெறுகின்ற உரிமையையும் வேண்டினர். இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு, புதிய திருத்தப்பட்ட உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அமெரிக்கர்களும், ஆங்கிலேயரும் முயன்று தோல்வியுற்றனர். காண்டன் நகரில் இருந்த எதிர்ப்பும், சீனப் பேரரசின் திறமையற்ற நிலையும், மீண்டும் படைவலிமையைக் கொண்டு சீனர்களைப் பணிய வைக்கவேண்டும் என்ற எண்ணத்தை ஐரோப்பியர்களுக்கு ஏற்படுத்தின. போர் ஏற்படக்கூடிய சூழ்நிலை மீண்டும் உருவாகியது.

**லோர்ச்சா ஆரோ பிரச்சனை (The Lorcha Arrow Incident),**

முதல் அபினிப் போரில் மிக எளிதாகச் சீனர்களை வென்று அடிபணியச் செய்த பெருமிதத்தில் திளைத்த ஐரோப்பியர்கள், தங்களுக்கெதிரான சிறு நிகழ்ச்சிகளையும் மிகைப்படுத்தி, மீண்டும் போரைத் துவக்க அணியமாயினர். இவ்வாறு சீனர்களுடன் இரண்டாவது முறை மோதி, வென்று, அவர்கள் விரும்பியவாறு புதிய திருத்திய உடன்படிக்கைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் ஐரோப்பியர்கள் போருக்கான காரணங்களைத் தேடினர். காரணமும் விரைவில் அகப்பட்டது. அக்காரணம் இரண்டாவது அபினிப் போரைத் துவக்கியது. 1856–ல் ஹாங் காங்கில் பத்தாண்டுக் காலம் தங்கியிருந்த சீன வர்த்தகர் ஒருவரின் கப்பல், ஹாங்காங்கில் பதிவு செய்யப்பட்டு, ஆங்கிலக் கொடியை பறக்க விட்டுக்கொண்டு காண்டன் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. 'லோர்ச்சா ஆரோ' (Lorcha Arrow) என்ற அக்கப்பலின் தலைவர் ஓர் ஆங்கிலேயராவார். அக்கப்பல் கள்ள வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றம் சாட்டி, சீன அதிகாரிகள் அக்கப்பலைக் கைப்பற்றி, அதிலிருந்த சீன மாலுமிகளில் பன்னிரண்டுபேரைக் கைது செய்தனர். அந்த பன்னிரண்டு பேரும் கடற்கொள்ளையிலும், கள்ள வாணிகத்திலும் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். இச்செய்தியைக் கேட்டவுடன் ஹாரி பார்க்ஸ் (Harry Parks) என்ற ஆங்கில அதிகாரி, லோர்ச்சா ஆரோ என்ற கப்பல் ஆங்கில வர்த்தகக் குழுவிற்குச் சொந்தமான கப்பலென்றும், தமக்கு முன்னறிவிப்புக் கொடுக்காமல் அக்கப்பலில் நுழைந்து, மாலுமிகளைக் கைது செய்தது முறையற்ற செயல் என்றும் கண்டித்து, உடனடியாகக் கைது செய்யப்பட்டிருந்த பன்னிருவரும் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் கோரினார். மேலும், அக்கப்பலில் நுழைந்த சீன அதிகாரிகள் ஆங்கிலேயரின் தேசியக் கொடியை அவமதித்துவிட்டனரென்றும் குற்றம் சாட்டினார். கைது செய்யப்பட்ட பன்னிருவரும் விடுதலை செய்யப்படுவதுடன், இனி இம்மாதிரி தவறுகள் நடக்காது என்ற உறுதிமொழி தரவும், நடந்துவிட்ட தவறுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார். பார்க்ஸ் அவர்களின் முறையீடுகளை ஏற்ற சீனர்கள் கைது செய்யப்பட்ட பன்னிருவரையும் விடுதலை செய்தனர். ஆனால், பார்க்ஸ் கேட்டவாறு மன்னிப்புக் கடிதம் தர மறுத்துவிட்டனர். ஏதாவது ஒரு காரணம் காட்டி, உடன்படிக்கைத் திருத்தங்களைப் பெற வேண்டும் என்றெண்ணிய ஆங்கிலேயருக்கு இது ஒரு நல்வாய்ப்பாய் அமைந்தது. ஆங்கிலேயர்களுக்குத் துணையாகப் பிரெஞ்சுக்காரர்களும் நின்றனர், ஆங்கில– பிரெஞ்சுப் படைகள் பீகிங் நோக்கிச் செலுத்தப்பட்டன.

ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்கள், அமெரிக்கர்கள், ருஷியர்கள் ஆகிய நான்கு நாட்டினரும் சீனாவிடமிருந்து மேலும் பல உரிமைகள் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். சீனாவில் கிறித்தவ சமயப் பரப்பாளராய் இருந்த பிரெஞ்சு நாட்டு பாதிரி அபே சாப்தலின் (Abbe Chapdelaine) என்பார். சீனப் பேரரசுக்கெதிராக மதம் மாறிய சீனர்களைத் தூண்டிவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார். சீன நீதிமன்றம் இவருக்கு மரணதண்டனை விதித்தது. சாப்தலின் பாதிரியார் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். சீன நீதிமன்றத்தினரால் செய்யப்பட்ட இக்கொலையை பிரெஞ்சுக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். பிரெஞ்சுக்காரர்கள் இக்கொலையைக் காரணமாகக் காட்டி, சீனர்களுக்கெதிராக, ஆங்கிலேயருடன் கூட்டுச் சேர்ந்தனர். ஆங்கில– பிரெஞ்சுக் கப்பற்படைகள் பீகிங்கை நோக்கி நகர்ந்தன. இப்படைகளைப் பின்தொடர்ந்து அமெரிக்க–ருஷியக் கப்பற்படைகளும் நகர்ந்தன.

இங்கிலாந்து அரசும், இப்போரை ஆதரித்து, எல்ஜின் பிரபு (Lord Elgin) என்பவரை முக்கியமாக உடன்படிக்கைத் திருத்தங்களை வலியுறுத்தி, புதிய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் நோக்கத்துடன் அனுப்பியது. சிப்பாய்க் கலகத்திற்காக இந்தியாவில் தடுத்து நிறுத்தப்பட்ட படைகள், பின்னர் சீனாவை அடைந்து 1857 டிசம்பரில் காண்டன் நகரை கைப்பற்றின. இந்திய விடுதலைப் போரை முடித்தபின்னர் இப்படைகள் 1857–ல் காண்டன் நகரை, அடைந்தன. காண்டன் நகரம் 1857, டிசம்பரில் வீழ்ந்தது. காண்டன் நகர ஆளுநரும் சிறைப்பிடிக்கப்பட்டார். பின்னர், இவ்வெற்றிப் படைகள் சீனத் தலைநகரை நோக்கி நகர்ந்து, தலைநகரின் நுழைவாயிலாய் இருந்த தாகு (Taku) கோட்டையை முற்றுகையிட்டு

அழித்து, முன்னேறினர். தங்கள் தலைநகருக்கு வந்த ஆபத்தினை உணர்ந்த சீனர்கள் சமாதானம் வேண்டினர். சீனர்கள் சமாதானக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நான்கு ஐரோப்பிய அமெரிக்க நாட்டினரும் தியன்சின் நகரில் சீன அதிகாரிகளைச் சந்தித்து, தனித்தனியாக உடன்படிக்கைகளைச் செய்து கொண்டனர்.

### தியன்சின் உடன்படிக்கைகள் -1858 (The Treaties of Tientsin)

**முக்கிய கூறுகள்**

1. ஆங்கில அரசின் தூதுவர் ஒருவர் பீகிங், நகரில் தங்கியிருக்கவும், மற்ற நகரங்களுக்குச் சென்று வரவும் ஏற்பாடு செய்யப்பட்டது. சீன அரசுடன் ஏற்படும் அரசியல் உறவுகளில், சுதந்திர இங்கிலாந்து அரசின் பேராளர் என்ற கண்ணியத்துடனும் உரிமையுடனும் மதிப்புடன் அவர் நடத்தப்படவேண்டும்.
2. மேலும், பத்துத் துறைமுகங்கள் ஆங்கிலேயருக்குத் திறந்துவிடப்பட வேண்டும். அத்துறைமுகங்கள் மஞ்சூரியாவிலிருந்து, பார்மோசாத் தீவுவரை விரிந்து கிடந்தன. மேலும், யாங்ட்சி நதியில் கப்பல் செலுத்தும் உரிமையும் ஆங்கிலேயர் பெற்றனர். இதன் காரணமாக ஹான்கௌ நகர்வரையில் யாங்ட்சி நதியின் இருமருங்கிலும் இருந்த வளமான நகர்ப் பகுதிகளையடையும் வாய்ப்பினை ஆங்கிலேயர் பெற்றனர்.
3. ஐரோப்பிய அதிகாரிகளின் அனுமதியுடன் சீன அதிகாரிகளின் ஒப்புதலையும் பெற்று, சீனாவெங்கிலும் தடையற்ற பயணம் செய்கின்ற உரிமைகள் ஐரோப்பியர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.
4. கிறித்தவ சமயத்தினருக்கு, சமயப் போதனை செய்யவும், சீனர்களை மதமாற்றம் செய்கின்ற உரிமையும், எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்ற தடையற்ற பயண உரிமையும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
5. ஐரோப்பியக் கடற்படைகள், உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எத்துறைமுகத்திற்கும், யாங்ட்சி நதிக்கரையில் அமைந்திருந்த ஹான்கௌ நகர்வரைக்கும் கூடச் செல்லும் உரிமைகள் பெற்றன.
6. சீன அரசு நான்கு மில்லியன் டாலர்களைப் போர் இழப்பீடாக ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டும்.
7. ஆங்கிலேயர்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளை ஆங்கில அதிகாரிகளே முடிவு செய்யவேண்டும். சீனர்–ஆங்கிலேயருக்கிடையே ஏற்படும் வழக்குகளை சீன–ஆங்கிலேய அதிகாரிகளின் குழு ஏற்று முடிவு செய்யும். குற்ற வழக்கானால், குற்றம் சாட்டப்பட்டவர் எந்த நாட்டினரோ அந்த நாட்டின் சட்டப்படி தண்டனைகள் வழங்கப்படும்.

இதே போன்ற உடன்படிக்கைகளை நான்கு ஐரோப்பிய–அமெரிக்க நாட்டினரும் செய்துகொண்டனர். மேலும், பத்துச் சீனத் துறைமுகங்கள் திறந்துவிடப்பட வேண்டும் என்று உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், புதிய துறைமுகங்களில் ஐரோப்பியர்கள் அவ்வளவு எளிதாக அனுமதிக்கப்படவில்லை. உதாரணமாக, நாங்கிங் நகரில் 1899 வரை ஐரோப்பியர்கள் நுழைய இயலவில்லை. இதே போன்று வேறு துறைமுகங்களிலும் ஐரோப்பியர்களுக்கு ஏராளமான முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. இருப்பினும் சீனர்கள் ஐரோப்பியர்களைத் தடுத்து நிறுத்த இயலவில்லை.

முதன் முதலாக, தியன்சின் உடன்படிக்கையின் போதுதான் அபினி வர்த்தகத்தின் மீதும் சுங்கவரி விதிக்கப்பட்டது. பொதுவாக சீனாவின் இறக்குமதி–ஏற்றுமதிப் பொருள்களின் மீதான சுங்கவரி, பொருள்களின் விலையில் ஐந்து விழுக்காடு என்று முடிவு செய்யப்பட்டது. அதே போல அபினியின் மீதும் வரி விதிக்கப்பட்டது. இதன் விளைவாக அபினி வியாபாரமும் சீன அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. ஆனால், அபினி வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

**மீண்டும் போர்**

தியன்சின் உடன்படிக்கைகள் சீனப் பேரரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், ஏற்றுக்கொண்டு, கையெழுத்திடப்பட்ட இவ்வுடன்படிக்கைகளின் படிகள், பீகிங் நகரில் கூடவிருக்கும் மாநாட்டில் அதிகார பூர்வமாகப் பெற்றுக்கொள்ளப்படும் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், சீனப் பேரரசு ஏதாவது காரணம் காட்டி, பீகிங் நகரில் ஐரோப்பியர்களை நுழையவிடாமல் தடுக்க எண்ணியது. தரை வழியாக வந்த ருஷிய தூதுவர் பீகிங் நகரை எளிதாக அடைந்தார். ஆனால், கடல் வழியாக வந்த ஆங்கில, பிரெஞ்சு, அமெரிக்க அதிகாரிகள் பீகிங்கின் நுழைவாயிலான தாகு (Taku) கோட்டையை 1859, ஜூன் மாதத்தில் அடைந்தனர். ஆனால், தாகு கோட்டையிலிருந்த சீனப் படைகள் ஐரோப்பியர்களை மேற் செல்லவிடாமல் தடைசெய்தனர். போரிட்டு, வழியேற்படுத்திக் கொள்ள முனைந்த ஐரோப்பியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ஐரோப்பியக் கப்பற்படை ஷாங்காய் திரும்பியது. பீகிங்கை முன்னரே அடைந்துவிட்ட ருஷிய தூதுவரும் வெறுங்கையுடன் ஷாங்காய் திரும்பினார். ஷாங்காய் நகரில் ஐரோப்பியர்கள் மேலும் ஒரு படையெடுப்பிற்குத் தங்களை அணியமாக்கிக் கொண்டிருந்தனர். 1860ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஐரோப்பியக் கூட்டுக் கடற்படையினர் மீண்டும் தாகு கோட்டையைத் தாக்கி அழித்துவிட்டு பீகிங்கை நோக்கி முன்னேறினர். சீனப்படைகள் ஐரோப்பிய படைகளை எதிர்த்து நிற்காமல், சிதறி யோடின. போர் வெறியால் தூண்டப்பட்டுப் பழிவாங்கும் கொடூரமான எண்ணத்துடன், ஐரோப்பியப் படைகள் பீகிங் நகரில் நுழைந்தன. இதற்கு முன்னரே மஞ்சுப் பேரரசர் பீகிங்கை விட்டு ஓடிவிட்டார். சீனப் பேரரசர்களின் கோடைக்கால மாளிகை (Summer Palace) தீக்கிரையாக்கப்பட்டு முற்றிலும் அழிக்கப்பட்டது. அம்மாளிகையில் இருந்த விலைமதிப்பற்ற கலைப் பொருள்கள் முழுவதும் தீக்கிரையாக்கப்பட்டன. பீகிங் நகரைக் கைப்பற்றிய ஐரோப்பியர்கள், தாங்கள் தியன்சின் நகரில் செய்துகொண்ட உடன்படிக்கைகளை ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல், வேறு பல புதிய சலுகைகளையும் பெற்றனர்.

### பீகிங் மாநாடு - 1860 (The Peking Convention)

பீகிங் நகரில் நுழைந்து, சீனப் பேரரசரையே விரட்டிய ஐரோப்பியர்கள் வெற்றிப் பெருமிதத்தில் களித்தனர். தாங்கள் கோருவது அனைத்தையும் பெறமுடியும் என்பதை உணர்ந்தனர். இந்தப் பீகிங் மாநாட்டில் தியன்சின் நகர உடன்படிக்கைக் கூறுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 1859–ல் தாகு கோட்டைக்கெதிரில் நடத்திய தவறான நடவடிக்கைகளுக்குச் சீனப் பேரரசர் வருத்தம் தெரிவித்தார். ஆங்கில அதிகாரி ஒருவர் பீகிங் நகரில் தங்க அனுமதியளித்தார். தியன்சின் துறைமுகமும் ஐரோப்பியர்களுக்குத் திறந்துவிடப்பட்டது. ஹாங்காங் தீவினை அடுத்து இருந்த கௌலுன் (Kowloon) தீபகற்பப் பகுதியும் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. தியன்சின் உடன்படிக்கையின்படி நான்கு மில்லியனாக இருந்த இழப்பீட்டுத் தொகை இப்போது அதிகரிக்கப்பட்டு, போரில் பங்கெடுத்துக்கொண்ட இங்கிலாந்து, பிரான்சு ஆகிய இரு நாடுகளுக்கும் எட்டு மில்லியன் டாலர்கள் என உயர்த்தப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் கத்தோலிக்கத் திருச்சபையைக் கட்டுவதற்குத் தேவையான நிலங்களை வாங்கவும், 1724 முதல் திருச்சபையினரிடமிருந்து பறித்துக் கொள்ளப்பட்ட நிலமனைத்தையும் மீண்டும் பெற்றுக்கொள்ளவும் ஒத்துக்கொள்ளப் பட்டது.

முதல் அபினிப் போர் சீனாவில் ஐரோப்பியர்கள் நுழைய வழிவகுத்தது. இரண்டாவது அபினிப் போர், சீனாவில் ஐரோப்பியர்கள் முழு உரிமை பெற்றவர்களாகச் சீனத் துறைமுகங்களனைத்திலுமே தங்கி வர்த்தகம் புரியவும், தங்கள் தூதுவர்கள் பீகிங் நகரில் தங்கவும், ஐரோப்பியர்களுக்கு சீனச் சட்டங்களிலிருந்து விலக்குப் பெற்றுத் தனியுரிமை பெறவும், சீனாவில் பாய்ந்தோடுகின்ற நதிகளில் கப்பல் செலுத்தும் உரிமையும், பெறச் செய்தது.

# சீன-ஜப்பானியப் போர் (1894-1895)

உலகப் படத்தை நோக்கும்போது சீனாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் கொரியா அமைந்திருப்பதைக் காணலாம். வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே சீன–ஜப்பானிய உறவுக்குப் பாலமாகக் கொரியா இருந்து வந்திருக்கின்றது. சீனப் பேரரசு சிறப்போடு இருந்த காலந்தொட்டே கொரியா வழியாகத்தான் ஜப்பானை அடைந்திருக்கின்றது. சீனாவின் அரசியல், சமயம், பண்பாடு, ஆக அனைத்துமே கொரியா வழியாகத்தான் ஜப்பானை அடைந்திருக்கின்றன. ஆதிக்காலம் தொட்டே கொரியாவின் வரலாறும் தன் இரு பக்கங்களிலும் பரவியிருக்கின்ற சீன ஜப்பானிய வரலாறுகளுடன் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது. 16ஆம் நூற்றாண்டிலிருந்தே கொரியா, சீன–ஜப்பானியரின் தாக்குதல்களுக்கு உள்ளாகி இருந்து வந்திருக்கின்றது. இத்தாக்குதல்களின்போது சீனாவும் ஜப்பானும் போட்டியிட்டனவே தவிர, வேற்று நாட்டவர்களின் தலையீடு இருந்ததில்லை. ஆனால் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், வளர்ந்துவிட்ட ஜப்பான் தனது எல்லைகளை விரிவடையச் செய்யும் எண்ணம் கொண்டபோது அதன் பார்வை இயற்கையாகவே கொரியாவை நோக்கி நிலைத்து நின்றது. ஜப்பான் கொரியா மீது தன் கவனத்தைச் செலுத்தியபோது, சீனா மட்டுமன்றி, ஐரோப்பிய நாட்டினரும், கொரியாவை அடையும் எண்ணம் கொண்டிருந்தன. இப்புதியப் போட்டியாளர்கள் தோன்றிய பின்னர் கொரியப் பிரச்சினை உலகநாடுகளின் பொதுப் பிரச்சினையாக மாறியது. ஐரோப்பிய வழிகளில் தன்னை வளர்த்துக்கொண்ட ஜப்பான், ஐரோப்பிய ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டு செயல்படத் துவங்கியது. கொரியாவை ஜப்பான் கைப்பற்ற வேண்டுமெனில், கொரியாவின் பாதுகாவலனாக இருந்த சீனாவை எதிர்க்கவேண்டியிருக்கும். எனவே முதல் சீன ஜப்பானியப் போரின் அடிப்படைக் காரணம் கொரியப் பிரச்சினையாய் அமைந்தது.

## கொரியா

சீன ஜப்பானிய உறவின் அடிப்படையாகவும், ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கக் கொள்கைகளின் செயலிடமாகவும் விளங்கிய கொரியாவின் வரலாற்றை மிகவும் சுருக்கமாகவேனும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. ஆசியப் பெருநிலப்பரப்பில் சீனாவின் கிழக்கிலும் மஞ்சூரியாவின் தெற்கிலும் ஜப்பானின் மேற்கிலுமாக அமைந்திருக்கின்ற தீபகற்பப் பகுதியே கொரியா ஆகும். இது ஏறத்தாழ 600 மைல் நீளமும், 150 மைல் அகலமும் கொண்டது. மஞ்சூரியாவையும் கொரியாவையும் பிரிக்கும் எல்லையாக யாலு நதி இருக்கின்றது. மற்ற மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்டிருக்கின்றன. மேற்கில் மஞ்சள் கடலும், கிழக்கில் ஜப்பான் கடலும் தெற்கில் ஜப்பானையும் கொரியாவையும் பிரிக்கின்ற 40 மைல் அகலமுள்ள நீர்ப்பரப்பும் உள்ளது. இப்பகுதியில் ஸீஷிமா (Tsushima) தீவும், கொரிய நீரிணைப்பும் இருக்கின்றன.

சீனப் பேரரசின் ஒரு பகுதியாகவே கொரியா இருந்துவந்திருக்கின்றது. 16–ஆம் நூற்றாண்டில் ஹிதயோஷி (Hideyoshi) என்ற ஜப்பானியப் படைத்தலைவன் கொரியாவைக் கைப்பற்ற முயன்று, தோல்வியுற்றான். சீனா தனது மேலதிகாரத்தை நிலை நிறுத்திக் கொண்டது. இந்நிலை 1894–95–ல் ஏற்பட்ட முதல் சீன ஜப்பானியப் போர் வரை நீடித்திருந்தது.

சீனாவிலும் ஜப்பானிலும் வர்த்தக உரிமைகளைப் பெற்ற ஐரோப்பிய நாட்டினர் கொரியாவிலும் நுழைய முயன்று தோல்வியுற்றனர். ருஷியா 1858–லும், 1860–லும், இருமுறை தனது எல்லையைக் கொரியா வரையில் விரிவடையச் செய்ய முயன்றது. இத்தகைய ஐரோப்பிய நாட்டினரின் ஆதிக்க முயற்சிகளைத் தடுத்து, கொரியாவைப் பாதுகாப்பது தனது கடமை என்பதையுணர்ந்த சீனா, கொரியா நாட்டில் அந்நியர் தலையிடுவதை விரும்பவில்லை. மேலும் ஜப்பானில் நுழைந்த ஐரோப்பியப் பண்பாடு, அரசியல், பொருளாதார முறைகள், கொரியா வழியாகத் தன் நாட்டிலும் பரவக்கூடும் எனவும் அஞ்சியது, கொரியாவும் சீனாவுக்குக் கடமைப்பட்ட நாடாக இருந்தது. ஏனெனில் தனது பண்பாடு, அரசியல், சமயம், சமுதாய அமைப்பு ஆகிய அனைத்துமே சீனாவினின்று பெற்றவையாகும். கொரியர்களும் ஐரோப்பிய முறைகளை ஏற்றுக்கொண்டிருந்த ஜப்பானியரை விரும்பவில்லை. மேற்கத்திய முறைகளை ஏற்றுக்கொண்டதோடு அல்லாமல் கொரியர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த கன்பூசிய மதத்தை அறவே நீக்கிவிட்டு, மீண்டும் ஷிண்தோ மதத்தை ஏற்றுக்கொண்டிருந்த ஜப்பானியரைக் கொரியர்கள் வெறுக்கத் தொடங்கினர். ஆனால், ஜப்பான் தனது பாதுகாப்புக்காகவும், ஆதிக்க வளர்ச்சிக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் கொரியாவில் தனக்கு உறவோ, செல்வாக்கோ, ஒப்பந்தமோ இருந்தாக வேண்டுமென உறுதிகொண்டிருந்தது.

1868–ல் முன்னிலை மீளப்பெற்று, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜப்பானியப் பேரரசர், தம்முடைய அதிகார ஏற்றத்தை உலகிற்கு அறிவிப்புச் செய்தார். அதேமுறையில் கொரியாவிற்கும் தூதுக்குழு மூலமாக அறிவிப்புகள் அனுப்பினார். கொரியா, இத்தூதுக் குழுவை ஏற்க மறுத்தது. பின்னர் அனுப்பப்பட்ட மூன்று ஜப்பானியத் தூதுக் குழுக்களுக்கும் இதே நிலைமை ஏற்பட்டது. ஜப்பான் தன்னை எவ்வாறு அமெரிக்கக் கடற்படைத் தளபதி அச்சுறுத்தி உரிமைகள் பெற்றாரோ, அதே முறையில் தானும் கொரியாவில் உரிமைகள் பெறும் எண்ணம் கொண்டது. ஜப்பானியக் கடற்படை கொரியத் தலைநகரைச் சூழ்ந்தது. கொரியாவும் ஜப்பானை எதிர்க்கும் வலிமையற்ற நிலையில் தனது கதவுகளைத் திறந்துவிட்டது (1876); ஜப்பானுடன் வர்த்தக உடன்படிக்கையும் செய்து கொண்டது. இதன் பின்னர் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் சீனாவின் உதவி பெற்றுக் கொரியாவுடன் வணிக ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. இவ்வாறு செய்து கொண்ட ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் கொரியாவில் சீனாவுக்கு இருந்த மேலாதிக்க நிலையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு கொரியாவை மிரட்டிப் பணியவைத்து அந்நியர்கள் உரிமை பெற்றதைக் கண்ட கொரியர்கள், அந்நியரின் தலையீடுகளையும் விரும்பவில்லை. இவ்வாறு நுழைந்துவிட்ட அந்நியர்களை வெளியேற்றச் சீனாவின் உதவியை நாடவேண்டுமென ஒருசாரார் விரும்பினர். இவர்கள் பிற்போக்குவாதிகள் என அழைக்கப்பட்டனர். ஜப்பானை முன்மாதிரியாக ஏற்றுக்கொண்டு, மேற்கத்திய முறைகளை ஏற்றுக் கொரியாவையும் முன்னேற்ற வேண்டும் என முற்போக்குவாதிகள் வாதிட்டனர். கொரிய மக்களிடையே ஏற்பட்ட இந்தப் பிரிவு பல மோதல்களுக்குக் காரணமாய் அமைந்தது. முற்போக்கு வாதிகளுக்கு ஜப்பான் ஆதரவு கொடுக்க முன்வந்தது.

1882ஆம் ஆண்டு கொரியப் பிரிவினர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் கொரியத் தலைநகரான செவுல் (Seoul) நகரிலிருந்த ஜப்பானியத் தூதரகம் தாக்கப்பட்டது. சில ஜப்பானியர் கொல்லப்பட்டனர். சீனா தன் படைகளை அனுப்பிக் கொரியாவில் அமைதி நிலைநாட்டியது. ஜப்பானுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. தனது தூதரகத்தைத் தொடர்ந்து செவுல் நகரில் வைத்திருக்கவும், காவல் படையைக் கொரியாவில் வைத்திருக்கும் உரிமையும், மேலும் சில உரிமைகளையும் ஜப்பான் பெற்றது. இனி ஜப்பான் நேரடியாகக் கொரியாவுடன் தொடர்பு கொள்ளலாமெனவும், சீனாவின் மூலமாகத் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை என்றும் ஏற்பாடாயிற்று. ஜப்பானுக்கு அளித்த இவ்வுரிமைகளால் ஜப்பானியரின் செல்வாக்கு மேலும் வளரவிடாமல் தடைசெய்யவும், கொரியாவில் மீண்டும் கலகங்கள் ஏற்படுவதைத் தடுக்கவும், தனது மேலதிகாரத்தை மேலும் உயர்த்தும் வகையிலும் சீனா செயல்பட முனைந்தது. இப்பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, சீனாவில் தலைசிறந்த அரசியலறிஞராக விளங்கிய லீ–ஹங்–சாங் (Li-Hung-chang) என்பவரை மேலதிகாரியாக அனுப்பியது.

SURAS

பாழ்படுத்தப்பட்டனர். ஆனால் இவர்மீது இராணுவத்துறை குற்றச்சாட்டுகளை சுமத்தியது. செனட் கமிட்டி விசாரித்த போது இவரது போலித்தனம் வெளிப்படுத்தப்பட்டது. இவருக்கு எதிராக செனட் மன்றம் தீர்ப்பளித்ததன் விளைவாக இவர் மதிப்பிழந்தார். 1957இல் இறந்தார்.

**சிவில் உரிமைப் போராட்டங்கள்**

உள்நாட்டுப் போருக்குப்பின் அடிமைமுறை ஒழிக்கப்பட்டாலும், நீக்ரோக்களுக்கு சம உரிமை வழங்கப்படவில்லை. பள்ளிகள், பொது இடங்கள், பேருந்துகளில் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஜிம்குரோ சட்டங்கள் ரத்து செய்யப்பட வேண்டும், சம உரிமைகள் வேண்டும் என நீக்ரோக்கள் போராடினர். மார்டின் லூதர் கிங், ரால்ஃப் அபர்நாதி போன்ற தலைவர்கள் தலைமை தாங்கினார். பொது இடங்களில் இன வேறுபாடு காட்டக்கூடாது என்று 1953இல் ஆணை பிறப்பித்தனர். சிவில் உரிமைச் சட்டப்படி இனம், நிறம், சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் வாக்குரிமை மறுக்கப்படுவதை விசாரிக்க பொது உரிமைக்குழு அமைக்கப்பட்டது. வாக்குரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

**இன ஒதுக்கலுக்கு எதிரான தலைமை நீதிமன்ற தீர்ப்பு**

1954இல் நீதிபதி ஏர்ல்வாரன், பிரவுன் VS தொபேகா கல்வி வாரிய வழக்கில் கூறிய தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கதாக அமைந்தது. பொதுக்கல்விக் கூடங்களில் இன ஒதுக்கல் கொள்கை கடைப்பிடிக்கக் கூடாது என்று தீர்ப்பு வழங்கினார். இந்தத் தீர்ப்பின் காரணமாக அர்கான்சாஸ் மாநிலம் லிட்டில்ராக் என்ற ஊரில் கலவரம் தோன்றியது. பள்ளிகளில் நீக்ரோ மாணவர்கள் சேர்க்கப்பட்டால் கலவரம் வெடிக்கும் என மாநில கவர்னர் கூறினார். ஜனாதிபதி கூட்டாட்சி படைகளை அங்கு அனுப்பினார். கவர்னரின் கருத்துக்கு எதிராக நீக்ரோ மாணவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு 1957-58ஆம் ஆண்டு முழுவதும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

**வெளிநாட்டுக் கொள்கை பிரச்சினை**

ஜான் பாஸ்டர் டல்லஸ் (John Foster Dulles) என்பவர் வெளியுறவுச் செயலராக இருந்தார். கம்யூனிசத்தை உலகளவில் ஒடுக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டார். ட்ரூமன் காலத்தில் தொடங்கப்பட்ட கொரியப்போர் முடிவிற்குக் கொண்டுவர ஜனாதிபதி 1952 டிசம்பரில் கொரியா சென்றார். 1953 ஜூலையில் பன்முன்ஜாம் என்ற இடத்தில் வடகொரியா, சீனா ஆகியோர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். 38வது அட்சரேகை எல்லையாக நிர்ணயிக்கப்பட்டது.

**வியட்நாம்**

பிரெஞ்சு குடியேற்ற நாடான இந்தோசீனாவில் கம்யூனிஸ்ட்கள் ஹோசிமின் தலைமையில் வியட்மின் என்ற படையை அமைத்து போரிட்டு வந்தனர். பிரான்சுக்கு அமெரிக்கா பண உதவி வழங்கியது. டல்லஸ் படைகளை உதவிக்கு அனுப்பத் திட்டமிட்டார். 1954 ஜூலை மாதம் நடைபெற்ற ஜெனிவா உடன்படிக்கையின்படி வியட்நாம் பிரிக்கப்பட்டது. வியட்நாம், லாவோஸ், கம்போடியா நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. இதனை டல்லஸ் ஏற்றுக்கொள்ளவில்லை.

**சியாட்டோ (SEATO)**

சியாட்டோ எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை அமெரிக்காவின் உதவியுடன் இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாட்டு பிரதிநிதிகள் 1954, செப்டம்பர் 8ஆம் தேதி மணிலா உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். கம்யூனிசம் பரவுவதை தடுத்து நிறுத்தவே இந்த உடன்படிக்கை என அமெரிக்கா அறிவித்தது. உடன்படிக்கை நாடுகள் தங்கள் பகுதி நாடுகள் மீது ஆக்கிரமிப்பு நிகழ்ந்தால் அதனை முறியடிக்க ஒன்றுபட்டு செயல்படுவர் என முடிவு செய்யப்பட்டது. இங்கிலாந்து இந்த உடன்படிக்கையில் அக்கறை காட்டவில்லை. பாகிஸ்தான் சீனாவுடன் தனியே உடன்படிக்கை செய்து கொண்டது. பின்னர் விலகிக் கொண்டது.

**CENTO (Central Treaty Organization) 1955**

மத்திய கிழக்குப் பகுதியில் கம்யூனிசம் பரவாமல் தடுத்து நிறுத்த பாக்தாத் உடன்படிக்கை செய்யப்பட்டது. இது ரஷ்யாவிற்கு எதிரான நடவடிக்கையாகும். துருக்கி, ஈராக், ஈரான், இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. பின்னர் அமெரிக்காவும் சேர்ந்து கொண்டது. ரஷ்யா இந்த பாக்தாத் உடன்படிக்கை நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டதால் இவ்வுடன்படிக்கை முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்டது.

**யு-2 நிகழ்ச்சி**

அமெரிக்க அதிபர் ஐசன் ஹோவரும், ரஷ்ய பிரதமர் குருச்சேவும் 1960, மே மாதம் பாரிசில் சந்திப்பதாக முடிவு செய்யப்பட்டது. இதற்கு சில நாட்களுக்கு முன்னர் லாஹீட் யு.2 என்ற அமெரிக்க வேவு விமானம் ரஷ்யா மீது பறந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது. விமானி பிரான்சிஸ் பவர்ஸ் உயிருடன் பிடிக்கப்பட்டார்.

இதனால் மாநாட்டில் கலந்து கொள்ள குருச்சேவ் மறுத்துவிட்டார். வேவு விமானம் அனுப்பப்பட்டதை ஐசன்ஹோவர் ஒப்புக் கொண்டார். 1962 பிப்ரவரியில் யு2 விமானி விடுதலை செய்யப்பட்டார். பதிலுக்கு அமெரிக்காவில் கைதியாக இருந்த ரஷ்ய ஒற்றர் ரடால்ப் ஏபல் விடுதலை செய்யப்பட்டார்.

**மத்திய கிழக்கு**

மத்திய கிழக்கில் அரபு நாடுகளின் நட்பைப் பெற அமெரிக்கா விரும்பியது. ஆனால் அரபு நாடுகள் இஸ்ரேலுக்கு எதிரியாக விளங்கின. இஸ்ரேலோ அமெரிக்கா உதவியுடன் 1948இல் தனி நாடாக உதயமானது மற்றும் அரபு நாடுகள் பிரிட்டன், பிரான்ஸிற்கு எதிராகவும் இருந்தன.

1955இல் பிரிட்டன் கூட்டிய மத்திய கிழக்கு பாதுகாப்பு கழகத்தில் ஈராக்கைத் தவிர பிற அரபு நாடுகள் கலந்துகொள்ளவில்லை. துருக்கி, ஈரான், பாகிஸ்தான் கலந்து கொண்டன. எகிப்தின் நாசர் ரஷ்யாவின் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தார். டல்லஸ் இதனை விரும்பவில்லை. மேலும் நைல் நதியின் குறுக்கே கட்டப்படும் அஸ்வான் அணைக்கு உதவப்போவதில்லை என டல்லஸ் அறிவித்தார். இதற்குப் பதிலடியாக நாசர், சூயஸ் கால்வாய் பகுதியை கைப்பற்றினார். சூயஸ் கால்வாய் பிரிட்டிஷ், பிரெஞ்சு பங்குதாரர்களுக்குச் சொந்தமானது. நாசருக்கு பதிலடி கொடுக்க பிரிட்டன், பிரான்ஸின் முயற்சிகளுக்கு அமெரிக்கா ஒத்துழைக்கவில்லை. சூயஸ் கால்வாயைப் பயன்படுத்த இஸ்ரேலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே இஸ்ரேல் எகிப்து மீது படையெடுத்தது. இச்சமயத்தில் பிரிட்டனும், பிரான்சும் படைகளை அனுப்பி கால்வாய் பகுதியை கைப்பற்ற நினைத்தது. இதற்கு அமெரிக்கா ஆதரவு தரவில்லை. ஐ.நா.சபையும் கண்டித்தது. பிரிட்டிஷ், பிரெஞ்சு, இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. பதிலுக்கு நாசர் எதுவுமே செய்யவில்லை.

1957 மார்ச் மாதம், மத்திய கிழக்கில் உள்ள மக்களை கம்யூனிசத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்ற அமெரிக்கா படைபலத்தை பயன்படுத்தும் என காங்கிரஸின் மூலம் பிரகடனப்படுத்தினார். 200 மில்லியன் டாலர் உதவியை அரபு நாடுகள் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தன. மத்திய கிழக்கில் கிடைபிடிக்கப்பட்ட இக்கொள்கை ‘ஐசன்ஹோவர் கோட்பாடு’ எனப்படும். நாசர் அனைத்து அரபு நாடுகளையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அரபு நாடுகளில் அரசர்களுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டங்களை நசுக்க அமெரிக்கப் படைகள் பயன்படுத்தப்பட்டன.

1957இல் ஜோர்டானில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி அமெரிக்கப் படையுடன் நசுக்கப்பட்டது. 1958இல் சிரியாவில் இடதுசாரியினர் ஆட்சியை கைப்பற்றினர். கிரியாவின் அண்டை நாடுகளுக்கு அமெரிக்க படைகள் அனுப்பப்பட்டன.

1958, ஜூலை மாதம் ஈராக்கில் தேசியவாதிகள் ஆட்சியை கைப்பற்றினர். இதனை ஆதரித்து லெபனானிலும், ஜோர்டானிலும் நடந்த போராட்டத்தை அமெரிக்கப்படை அடக்கியது. அராபியர்களுக்கும், யூதர்களுக்குமிடையே போர் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

**இலத்தீன் அமெரிக்கா**

அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இப்போது அமெரிக்க எதிர்ப்பு வளரலாயிற்று. கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்கு பெறலாயிற்று. குவாடிமாலாவின் 1954இல் கம்யூனிச ஆதரவு பெற்ற அரசு பதவிக்கு வந்தவுடன் அமெரிக்க நிறுவனங்கள் கைப்பற்றப்பட்டன. ரஷ்யா இந்நாட்டிற்கு ஆயுதங்கள் வழங்குவதை அறிந்த அமெரிக்கா படையெடுக்க திட்டமிட்டது. ஆனால் கம்யூனிச ஆதரவு அரசு வீழ்ந்ததினால் மீண்டும் அமெரிக்க ஆதிக்கம் ஏற்பட்டது. துணை ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் வெனிசுலா, பெரு ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்த போது அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. கியூபாவில் அமெரிக்க ஆதரவு சர்வாதிகாரி பாட்டிஸ்டா விரட்டப்பட்டார். பிடல் காஸ்ட்ரோ புதிய அதிபர் ஆனார். சோவியத் யூனியனுடன் அரசியல் பொருளாதார உறவுகளை ஏற்படுத்தி கொண்டார்.

குடியரசு கட்சியைச் சேர்ந்த ஐசன்ஹோவர் தனது நடவடிக்கைகளின் மூலம் அமெரிக்காவின் அரசியல் உறவுக் கொள்கையை நிலைநாட்ட முயன்றார். உலகம் முழுவதும் மக்களை, நாடுகளை கம்யூனிசத்திற்கு எதிராக காப்பது அமெரிக்காவின் கடமை என்று கருதினார். உள்நாட்டில் பிரச்சனைகளை தடுத்து நிறுத்த முடியவில்லை. வேலையின்மை, விவசாயிகள் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. உயர் அதிகாரிகள் ஊழல் மிக்கவர்களாக இருந்தனர். சோவியத் யூனியன் உலக அரங்கில் செல்வாக்கு பெற்றது. இந்த அதிருப்தியின் காரணமாக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜான் F. கென்னடி வெற்றி பெற்றார்.

## ஜான் F. கென்னடி (1961 - 1963)

அமெரிக்காவின் முப்பத்தைந்தாவது ஜனாதிபதி ஜான் F. கென்னடி ரோமன், கத்தோலிக்க மதப்பிரிவைச் சேர்ந்தவர் மற்றும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். 42 வயது இளைஞர், தாராள நோக்கும், சமூக சீர்திருத்தங்களில் ஆர்வம் உடையவர். நீக்ரோக்களின் சிவில் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவளித்ததன் காரணமாகவே சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கருதப்படுகிறது. தியோடர் ரூஸ்வெல்ட், உட்ரோவில்சன், பிராங்களின் ரூஸ்வெல்ட் ஆகியோர் கடைப்பிடித்த கொள்கைகளை தானும் கடைப்பிடித்தார்.

கென்னடி ஒரு செல்வந்தக் குடும்பத்தில் 1917, மே 29ஆம் தேதி மசாசுசெட்ஸ் மாநிலம் புரூக்லைன் நகரில் பிறந்தார். இவரது தந்தை ஜோசப் கென்னடி வங்கி தொழில் புரிந்தார். இங்கிலாந்தில் அமெரிக்க தூதுவராக பணிபுரிந்தார். கென்னடி ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் 1936–40 காலகட்டத்தில் கல்வி கற்றார். பின்னர் இரண்டாம் உலகப்போரில் 1941–1945 வரை அமெரிக்க கடற்படையில் பணிபுரிந்தார். 1947–53 வரை மசாசுசெட்ஸ், அமெரிக்க பிரதிநிதிகள் சபைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952இல் அமெரிக்க செனட்டர் ஆனார். 1956ஆம் ஆண்டு துணை ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தார். 1960ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி ரிச்சர்ட் நிக்சனை எதிர்த்து வெற்றி பெற்றார். லிண்டன் ஜான்சன் இவரது துணை ஜனாதிபதியாவார்.

**உள்நாட்டுக் கொள்கை**

கென்னடி கடைப்பிடித்த கொள்கை புதிய எல்லை New Frontier எனப்படும். இவரது திட்டங்களுக்கு காங்கிரஸ் முட்டுக்கட்டை போட்டது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த விரும்பி 1962இல் எஃகு தொழிலாளர்களின் கூலி உயர்வையும், எஃகு உற்பத்தியாளர்களின் விலை உயர்வையும் அனுமதிக்கவில்லை. தொழிற்சங்க தலைவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் வேலையிழந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடலாயினர். உள்துறையின் ஒரு பிரிவாக அமைதிப்படை ஒன்று சர்ஜண்ட் ஷிரிவர் தலைமையில் அமைக்கப்பட்டது. வேலையற்ற இளைஞர்கள் பிற நாடுகளுக்கு சமூகசேவை செய்யவும், கல்வி கற்பிக்கவும் அனுப்பப்பட்டனர். 80 ஆயிரம் இளைஞர்கள் 63 நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். பல நாடுகள் இவர்கள் அமெரிக்க உளவாளிகளாக இருக்கலாம் என்று கருதி திருப்பி அனுப்பி விட்டனர்.

நீக்ரோக்களின் சிவில் உரிமைப் போராட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. நீக்ரோக்களை தனிமைப்படுத்த (Segregation) நடத்துவதை கண்டித்தார். நீக்ரோக்கள் சம உரிமை வேண்டி போராட்டங்களில் ஈடுபட்டனர். 1962இல் வெள்ளையர்கள் பயிலும் மிசிசிபி பல்கலைக்கழகத்தில் ஜேம்ஸ்மெரிடித் என்ற மாணவரைச் சேர்க்க, மாநில கவர்னர் ரோஸ்பெர்னட் என்பவர் எதிர்த்தார். பின் 1963 ஜூனில் அலபாமா பல்கலைக்கழகத்தில் நீக்ரோ மாணவர்கள் சேர்க்கப்படுவதை அந்த மாநில கவர்னர் ஜார்ஜ்வாலேஸ் எதிர்த்தார். நீக்ரோக்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

ஆனால் இந்த உரிமைப் போராட்டங்களில் காந்திய வழியில் தன் போராட்டத்தை வகுத்துக் கொண்டவர் மார்டின் லூதர் கிங் ஆவார். 1963, ஆகஸ்ட் மாதம் வாஷிங்டன் நகரில் சுதந்திர நடை பயணம் (Freedom March) ஒன்றை தலைமையேற்று நடத்தினார். லிங்கன் நினைவுச்சின்னம் அருகில் இவர் நிகழ்த்திய உரை உணர்ச்சிகரமானதாகும். "I have a dream எனத் தொடங்கும் தனது உரையில் அமெரிக்க மக்கள் ஏற்றத்தாழ்வு இன்றி இன்பமுடன் வாழ்வதாக தான் கனவு காண்பதாக அறிவித்தார். உயர்வும் தாழ்வும் ஒன்றாகி வெறுப்பும் சினமும் இல்லாமல் கருப்பு இனத்தவர் கண்ணியமாக வாழ்வதாக கனவு காண்கின்றேன்" என்ற இவரது உரை மக்களைக் கவர்ந்தது. நீக்ரோக்களுக்குச் சம உரிமை கிடைக்க வழி செய்யுமாறு அதிபர் கென்னடியை வேண்டினார். எல்லாருக்கும் பொது உரிமை அளிக்கும் சட்டம் ஒன்றை 1963ஆம் ஆண்டு காங்கிரசுக்கு அனுப்பினார். ஆனால் அவ்வாண்டின் இறுதியில் 1963, நவம்பர் 22ஆம் தேதி வெள்ளை ஆதிக்கம் படைத்தவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கருதப்படுகிறது. இச்செய்தி உலகத்தை உலுக்கிவிட்டது. லீ ஹார்வி ஆஸ்வால்ட் என்ற கொலைகாரன் உடனடியாக கைது செய்யப்பட்டான். ஆனால் இவனை வேறு சிறைக்குக் கொண்டு செல்லும்வழியில் ஜேக்ரூபி என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டான். கென்னடி கொலையை 'வாரன் கமிசன்' விசாரித்தது. ஆனால் அது ஒரு முழுமையான அறிக்கையை அளிக்கவில்லை. கென்னடியின் கொலை மர்மம் விடுவிக்கப்படவில்லை.

**வெளிநாட்டுக் கொள்கை**

ஜான் எப்.கென்னடி பதவிக்கு வந்தபோது 1945ஆம் ஆண்டு இருந்த உலக அரசியல் நிலைமை முற்றிலும் மாறியிருந்தது. பனிப்போர் கொள்கைகள் மாற்றியமைக்க வேண்டியிருந்தது. பிரிட்டிஷ், பிரெஞ்சு, டச்சு பேரரசுகள் மறைந்து விட்டன. இதனால் ஆசியா, தூரகிழக்கு, மத்யகிழக்கு, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிடையே அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை, சோவியத் யூனியனுக்கு எதிராக உருவாக்கப்பட வேண்டியிருந்தது. கென்னடிக்கு பெரும் சவால்கள் முன்னே நின்றன. இவர் பதவியேற்ற பொழுது ரஸ்யாவின் குருச்சேவ் மாஸ்கோவில் உரையாற்றிய போது கிழக்கே வியட்நாமிலிருந்து, மேற்கே கியூபா வரை சோவியத்தின் ஆதிக்கம் விரிவடைந்திருக்கிறது என்றும், சோசலிச பாதையை தடுத்து நிறுத்த எந்த ஒரு சக்தியாலும் முடியாது எனக் கூறினார். இந்தச் சவால்களை முறியடிக்க கென்னடிக்கு உறுதுணையாக, வெளியுறவுச் செயலர் டீன்ரஸ்க், படைத்துறை செயலர் ராபர்ட் மக்னமாரா மற்றும் திறமைமிக்க அதிகாரிகள் உறுதுணையாக இருந்தனர்.

1945இல் இலத்தீன் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்காவில் உள்ள நாற்பது நாடுகள் சுதந்திரமடைந்தன. இவற்றோடு அயலுறவுகளை வளர்ப்பதில் அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டியிருந்தது. மூன்றாம்

உலக நாடுகளுடன் கடைப்பிடிக்க வேண்டிய அயலுறவுக் கொள்கை கென்னடியால் மாற்றியமைக்கப்பட்டது. இவரது வெற்றியை மூன்றாம் உலக நாடுகள் வரவேற்றன. அந்நாட்டுத் தலைவர்கள் வெள்ளை மாளிகை நோக்கிச் சென்றனர். கென்னடி அவர்கள் தங்கள் நாட்டுப் பிரச்சினைகளில் தீவிர அக்கறை கொண்டிருப்பதை உணர்ந்தனர். இந்நாடுகளுக்கு உதவ Peace Corps என்ற அமைதிப்படையில் பத்தாயிரம் இளைஞர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**பிக்ஸ் வளைகுடா படையெடுப்பு**
**(Bay of Pigs Invasion 1961)**

கியுபாவில் பிடல் காஸ்ட்ரோவின் ஆட்சியைக் கவிழ்க்க ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது. நாடு கடத்தப்பட்ட கியுபாக்காரர்களுக்கு குவாடிமாலாவில் பயிற்சி அளித்து கியுபாவில் கலவரத்தில் ஈடுபடுவதற்காக 1961, ஏப்ரல் 17ஆம் தேதி சுமார் 1400 முதல் 1500 பேரை கொண்ட (பிரிஹேட் 2506) என்ற நாடுகடத்தப்பட்ட கியூபப் படை கியூபாவின் தெற்கு கடற்கரையில் உள்ள பிக்ஸ் வளைகுடாவில் இறக்கிவிடப்பட்டனர். ஆனால் இவர்களை காஸ்ட்ரோவின் படைகள் எளிதாக வென்றன. 1100 பேரைக் கைது செய்தனர். இவர்களை மீட்க அமெரிக்க அரசாங்கம் 53 மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள உணவு மற்றும் மருந்துப் பொருட்களை தர வேண்டியிருந்தது. இது கென்னடிக்கு ஒரு தோல்விதான்.

**முன்னேற திட்டத்திற்கான உடன்பாடு**
**(Alliance For Progress)**

பிராங்களின் ரூஸ்வெல்ட் கடைப்பிடித்த நல்ல அயலார் கொள்கையைப் பின்பற்றி அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கான திட்டம் 1961, ஆகஸ்ட் மாதம் உருகுவேயில் புந்தா டெல் எஸ்டி (Punta Del Este) என்ற இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் கையெழுத்திடப்பட்டது. இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு பொருளாதார உதவி செய்யப்பட்டது. இலத்தீன் அமெரிக்க நாடுகள் கியுபாவுடன் ராஜ்ஜிய உறவுகளை முறித்துக் கொள்ளவேண்டும். அமெரிக்க மூலதனங்களுக்கு உத்தரவாதம் தரப்பட வேண்டும். உதவித் தொகையில் 80 சதவீதம் அமெரிக்க பொருட்களை வாங்க செலவிட வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**ஜெனிவா மாநாடு**

இரண்டாவது ஜெனிவா மாநாடு 1961, மே–1962 ஜுலை வரை கூடியது. அமெரிக்காவுடன் 14 நாடுகள் சேர்ந்து லாவோசின் சுதந்திரத்தை அங்கீகரித்தன. அமெரிக்க ஆதரவுடன் தென்வியட்நாமில் பதவிக்கு வந்த டையீம் என்பவரை எதிர்த்து வியட்காங் தேசியவாதிகள் கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்களை அடக்க அமெரிக்கப்படைகள் உதவி அனுப்பப்பட்டது. ஆனால் அமெரிக்கத் திட்டங்களுக்கு டையீம் ஒத்துவராததால் அவரை பதவி நீக்கம் செய்து டு வாங் வான்மின் அதிபராக்கப்பட்டார்.

வியட்நாமில் அமெரிக்கத் தலையீட்டிற்கு அமெரிக்காவில் எதிர்ப்பு வலுத்தது. அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலர் மெக்நமாரா, வியட்நாமில் உள்ள அமெரிக்கப் படைகள் 1965-க்குள் விலக்கிக் கொள்ளப்படும் என அறிவித்தார். ஆனால் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார்.

**இலத்தீன் அமெரிக்க பிரச்சனைகள்**

அமெரிக்காவிற்கு அருகாமையில் இருந்த கியூபாவில் 1959இல் பிடல் காஸ்ட்ரோ அமெரிக்க எதிர்ப்பு கம்யூனிச ஆட்சியை நிறுவினார். அவர் சோவியத் யூனியனுடன் நெருக்கம் காட்டினார். 1962, அக்டோபரில் பனிப்போர் உச்சகட்ட நிலையை அடைந்தது. கியூபாவின் மீது பறந்த அமெரிக்க இராணுவ வேவு விமானங்கள், அங்கு சோவியத் யூனியன் நிறுவியிருந்த கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகள் நிறுவப்பட்டிருந்ததை கண்டறிந்தன. இதனை அறிந்த கென்னடி அதிர்ச்சியடைந்தார். மிகக்குறைந்த தூரத்தில் கியூபாவிலிருந்து புறப்பட்டு வரும் ஏவுகணைகளை தடுத்து நிறுத்த இயலாத நிலை. இந்தச் சூழ்நிலை கென்னடியின் நிர்வாகத்திற்கு ஒரு சோதனையான நேரமாக இருந்தது. ஏற்கனவே பிக்ஸ் வளைகுடா படையெடுப்பு தோல்வியில் முடிவடைந்தது ஒரு எச்சரிக்கையாகவும் அமைந்தது. எனவே இம்முறை மிகவும் திறமையுடன் வெற்றிகாண திட்டமிட்டார். வெள்ளை மாளிகை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இச்சமயம் ரஷ்யாவிலிருந்து ஒரு டஜனுக்கும் மேற்பட்ட படைக்கப்பல்கள் கியூபாவிற்கு வந்து கொண்டிருக்கும் செய்தியும் கிடைத்தது.

அக்டோபர் 22, 1962-இல் கென்னடி தனது திட்டத்தை நாட்டு மக்களுக்கு அறிவித்துவிட்டு கியூபாவைச் சுற்றி கடல் என எதிர்பார்த்தனர். முற்றுகையிட ஆணையிட்டார். அறுபதாயிரம் படை வீரர்களை புளோரிடாவிற்கு அனுப்பி தயார் நிலையில் இருக்கச் செய்தார். உலக நாடுகள் அச்சத்தில் உறைந்தன. கென்னடியின் நடவடிக்கைகளுக்கு குருச்சேவின் பதில் என்னவாக இருக்கும் என எதிர்பார்த்தனர்.

அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்குமிடையே போர் நிகழுமா என எதிர்பாக்கப்பட்டது. அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு முழுமனதாக கென்னடியின் செயலை ஆதரித்தது. நிலைமையை உணர்ந்த குருச்சேவ் கியூபாவில் வைத்திருந்த ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் திரும்ப பெற்றுக் கொள்வதாக உறுதியளித்தார். பதிலுக்கு கியூபாவின் மீது படையெடுப்பதில்லை என்றும், துருக்கியில் உள்ள அமெரிக்க ஏவுகணை தளங்களை மூடிவிடுவதாகவும் கென்னடி உறுதியளித்தார். ஓர் உலகப்போர் தவிர்க்கப்பட்டது.

**அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் 1963**

உலகில் அமைதியை நிலை நாட்டவும் அணுகுண்டு சோதனைகளைத் தடை செய்ய வேண்டும் என்ற இயக்கத்தை பெட்ரண்ட் ரசல் என்ற அறிஞர் தொடங்கினார். அமெரிக்கா, சோவியத் யூனியன், இங்கிலாந்து ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். 'அணுஆயுத சோதனை தடை' ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆகாயத்திலும், நீருக்கடியிலும் அணு ஆயுத சோதனைகள் நடத்துவது தடை செய்யப்பட்டது. 105 நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டன. சீனாவும், பிரான்சும் கையெழுத்திட மறுத்துவிட்டன.

இவரது ஆட்சிக்காலத்தில் ரஷ்யா பெர்லின் நகரைப் பிரிக்க சுவர் ஒன்றை கட்டியது. இந்தியாவிற்கு PL480 திட்டத்தின் மூலம் பொருளாதார உதவி வழங்கப்பட்டது. 1962ஆம் ஆண்டு சீனா இந்தியாவின் மீது படையெடுத்தது. இக்கட்டான நிலையில் இருந்த இந்தியாவிற்கு கென்னடி உதவியளித்தார். சீனா போரை முடித்துக் கொண்டது. இதனால் இந்திய மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட ஜனாதிபதியாக விளங்கினார். 1961-இல் அமெரிக்க அரசியலமைப்பு 23வது திருத்தம் கொண்டுவரப்பட்டு கொலம்பியா மாவட்டத்தில் வசிப்பவர்களும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

★★★

# லிண்டன் B. ஜான்சன் (1963-1969)

ஜான் F. கென்னடி சுடப்பட்டதை அடுத்து அவரது துணை ஜனாதிபதியாக இருந்த லிண்டன் B.ஜான்சன் ஜனாதிபதி பதவி ஏற்றார். (1963, நவம்பர் 22) பின்னர் 1964இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்றார். தனது கொள்கையாகச் சீர்மிகு சமுதாயம் (Great Society) என்ற அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டார். நீக்ரோ சிவில் உரிமைப் போராட்டங்கள் தொடர்ந்தன. வியட்நாமில் அமெரிக்கா தீவரமாக தலையிட வேண்டியிருந்தது.

லிண்டன் ஜான்சன் டெக்ஸாஸ் மாநிலத்தை சேர்ந்தவர். தந்தை சாம் ஏலி ஜான்சன் டெக்ஸாஸ் மாநில பிரதிநிதிகள் சபையில் பத்து ஆண்டுகாலம் பதவியிலிருந்தார். ஜான்சன் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் 1927இல் சேர்ந்து படிப்பை முடித்தார். அரசியலில் 1932 முதல் ஈடுபட்டார். 1937-1949 வரை அமெரிக்க கூட்டாட்சி பிரதிநிதிகள் சபையில் டெக்சாஸ் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாம் உலகப்போரில் அமெரிக்க கடற்படையில் பணியாற்றினார். 1949-1961 வரை அமெரிக்க செனட் மன்ற உறுப்பினராக பணிபுரிந்தார். ஜான் F.கென்னடியின் துணை ஜனாதிபதியாக 1960ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். கென்னடியின் திடீர் மரணம் இவரை ஜனாதிபதியாக்கியது. இரண்டாம் முறையும் ஜனாதிபதியானர்.

**சீர்மிகு சமுதாயம்**

செல்வமிகு சமுதாயத்தை மட்டுமல்லாமல் சீர்மிகு சமுதாயத்தை உருவாக்க வாய்ப்பு கிடைத்துள்ளதாக மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போது அறிவித்தார். இதன் மூலம் ஏழ்மை, வறுமையில் வாடும் அமெரிக்கர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், மருத்துவம், இன்சூரன்ஸ் வசதி, வேலையில்லாதவர்கட்கு உதவி போன்றவை கிடைக்க ஏற்பாடுகள் செய்தார்.

பொருளாதார வாய்ப்பளிக்கும் சட்டம் ஒன்று 1964இல் இயற்றப்பட்டது. 16 முதல் 21 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சியளிக்கப்பட்டது VISTA. Volunteers in service to America – அமெரிக்க சேவையின் பணியாளர்கள் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு சேவை புரிபவர்களை ஈடுபடுத்தியது. மாணவர்கள் படிக்கும்போதே வேலைவாய்ப்பு அளிக்க வேலை–கல்வித்திட்டம் (Work Study Program) கொண்டுவரப்பட்டது. மற்றும் 'வேலை அனுபவத் திட்டம்',

'சமுதாய செயல் திட்டம்' போன்றவற்றினால் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மருத்துவ இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்பட்டது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், தண்ணீர், காற்று இவற்றின் தூய்மையை பாதுகாக்கவும், தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டன. நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெட்டிகள் உள்ளே அடைத்து விற்கப்படும் பொருட்களின் விபரங்கள் என அச்சிடப்பட வேண்டும் கட்டாயப்படுத்தப்பட்டது. நெடுஞ்சாலை பாதுகாப்புச் சட்டம், இறைச்சி பாதுகாப்பு சட்டம் போன்ற பல சட்டங்கள் மக்கள் நலனை பேணுவதாக இருந்தன.

அரசியலமைப்புக்கு 1964ஆம் ஆண்டு 24வது திருத்தம் கொண்டு வரப்பட்டு தேர்தல்வரி ரத்து செய்யப்பட்டது. 25வது அரசியலமைப்பு திருத்தத்தின்படி துணை ஜனாதிபதி காலியாகும் போது, காங்கிரசின் ஒப்புதலின்படி நியமனம் செய்துகொள்ள ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

நீக்ரோ மக்களுக்கு சம உரிமை அளிப்பது தொடர்பாக 1964இல் 'சிவில் உரிமைச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. "நீக்ரோக்களின் வாக்குரிமைகளைப் பாதுகாக்கவும், பள்ளிகள், பேருந்துகளில், பொது இடங்களில் இனப்பாகுபாட்டை அகற்றவும், சமவேலை வாய்ப்புகளை வழங்கவும்", கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மார்டின் லூதர்கிங் அலபாமா மாநிலத்தில் செல்மா என்ற நகரிலிருந்து தலைநகர் மாண்ட்கோமரிக்கு 1965 –ஆண்டில் பாதயாத்திரை தொடங்கியபோது கைது செய்யப்பட்டார். இதனால் கலவரங்கள் ஏற்பட்டன.

Black Panther – கருஞ்சிறுத்தைகள் என்ற தீவிரவாத அமைப்பு 1966இல் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்டது. 1967இல் நூறு நகரங்களில் வன்முறை கலவரங்கள் நடந்தன. டெட்ராய்ட் நகரில் நடந்த வன்முறை மிகவும் மோசமானதாகும். நீக்ரோக்கள் வாக்குரிமை பெற கல்வி சோதனை முறையை ஜான்சன் ரத்து செய்தார். 1968இல் நீக்ரோக்களுக்கு வீடுகள் விற்பது, வாடகைக்கு விடப்படுவது தொடர்பாக உள்ள சிரமங்கள் களையப்பட்டன. 1968 ஏப்ரல் 4ஆம் தேதி மெம்பஸ் என்ற நகரில் இனவெறி கொண்ட வெள்ளையன் ஒருவனால் மார்டின்லூதர் கிங் சுடப்பட்டார். இனவெறி அடங்குவதாக இல்லை. நீக்ரோக்களின் வாழ்வு எதிர்பார்த்த அளவு முன்னேறவில்லை.

**வெளிநாட்டுக் கொள்கை**

ஜான்சனின் முதல் நடவடிக்கை டொமினிக்கன் குடியரசின் விவாரங்களில் தலையிட்டது தான். அங்கு ஜீவன்பாஷ் என்ற தலைவர் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகள் அமெரிக்க முதலீடுகளுக்கு ஆபத்தாக அமைந்தன. எனவே அதிபரை கவிழ்க்க அமெரிக்க உளவு நிறுவனம் சதி செய்தது. மீண்டும் ராணுவ சர்வாதிகாரி அமர்த்தப்பட்டார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கலகங்கள் தோன்றின. 1965இல் 20 ஆயிரம் அமெரிக்க துருப்புகள் அனுப்பப்பட்டனர். கிளர்ச்சி அடக்கப்பட்டது. இதே போல் குவாடிமாலாவிலும் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

வடகொரியா பகுதியில் நின்று கொண்டிருந்த பியுப்ளோ என்ற உளவுக்கப்பல் வட கொரிய ராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டது. அமெரிக்க மாலுமி ஒருவர் கொல்லப்பட்டார். கப்பல் சர்வதேச கடல் பகுதியில்தான் இருந்தது என அமெரிக்கா வாதிட்டது. ஆனாலும் அமெரிக்கா மன்னிப்பு கேட்ட பின்னரே கப்பல் விடுவிக்கப்பட்டது.

**வியட்நாம் சிக்கல்**

வியட்நாமில் அமெரிக்கா தலையிட்டது தூரகிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மிகப்பெரும் அரசியல் சிக்கலை உருவாக்கியது. 1970-இல் சுமார் 4 கோடி மக்களைக் கொண்ட வியட்நாம் வடக்கு,தெற்கு என இரு வியாட்நாம்களாகச் செயல்பட்டன. கி.பி.1615இல் வியட்நாமில் நுழைந்த பிரான்ஸ் அங்கு கத்தோலிக்க கிறித்தவ மதத்தையும், கல்வியையும் கொண்டுவந்தது. கி.பி.1885இல் வியட்நாம் பிரான்சின் கட்டுப்பாட்டில் நிர்வகிக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் வியட்நாமைக் கைப்பற்றியது. இருந்தபோதும் பிரான்சை நாட்டை ஆள்வதற்கு அனுமதித்தது.

கி.பி. 1945இல் பேரரசர் பவோ டாய்–யிடம் அவரது நாடு சுதந்திரமடைந்து விட்டதாக ஜப்பான் கூறியது. பிரெஞ்சு ஆதிக்கம் முடிவுற்றது. ஆகஸ்ட் 1945இல் ஹோசிமின், முப்பது ஆண்டு காலமாக தனது நாடு விடுதலையடைய வேண்டும் எனப் போராடி வந்தவர். ஹனோயில் கம்யூனிச அரசாங்கத்தை நிறுவினார். இவரது ஆதிக்கத்தை ஏற்ற மன்னர் வடவியட்நாமில் ஜனநாயக குடியரசு ஏற்பட்டதை ஏற்றுக்கொண்டார்.

ஒரு கிராமத்து பள்ளி ஆசிரியரின் மகனாக ஹோசிமின் மே 19, 1890இல் பிறந்தார். பழைய தலைநகரான ஹியூ நகரின் கல்லூரியில் 1905–1910இல் கல்வியை முடித்தார். ஒரு பிரெஞ்சுக் கப்பலின் சமையல்காரருக்கு உதவியாளராக பணிபுரிந்தார். உலகின் பல பகுதிகளுக்கும் சென்றவர் பிரான்சில் ஒரு புகைப்பட நிலையத்தில் பணியில் சேர்ந்தார். கி.பி.1918–இல் பிரான்சின் சோசலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். வியட்நாமின் விடுதலைக்குப் பாடுபட்டார். அந்நாட்டு

| | |
|---|---|
| NDMA | National Disaster Management Authority (தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்) |
| NDRF | National Disaster Response Force (தேசிய பேரிடர் மீட்புப் படை) |
| NIDM | National Institute of Disaster Management (தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம்) |
| TNSDMA | Tamil Nadu State Disaster Management Authority (தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்) |
| SDRF | State Disaster Response Force (மாநில பேரிடர் மீட்புப் படை) |

**பேரிடரை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடும் துறைகள்**

| அவசரகால மீட்பு நடவடிக்கைகள் | பொறுப்பு துறைகள் |
|---|---|
| மீட்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்துதல் | மாநில பேரிடர் மேலாண்மை மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமை. |
| இடர்கால தகவல் தொடர்பு | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை. மாநில அவசர கட்டுப்பாட்டு அறை. மாவட்ட கட்டுப்பாட்டு அறை. செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை. ஊடகங்கள் மற்றும் தொலை தொடர்பு நிறுவனங்கள் |
| பொது மக்கள் வெளியேற்றம் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, ஊரக மற்றும் நகராட்சி துறைகள், காவல்துறை, ஊர்க்காவல் படை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை. மாநில பேரிடர் மீட்புப்படை தேசிய பேரிடர் மீட்பு படை ஆயுதப்படை, தன்னார்வலர்கள், 108 ஆம்புலன்ஸ், பொதுமக்கள். |
| மீட்கப்பட்ட மக்களை முகாம்களில் தங்க வைத்தல் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை உள்ளாட்சி மற்றும் நகராட்சி அமைப்புகள். |
| போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் மாற்று வழி அமைத்தல் | போக்குவரத்து காவல் துறை ஊர்க்காவல் படை மற்றும் தன்னார்வலர்கள். |
| பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதியை பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வருதல் | மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படைகள், காவல் துறை, ஊர்க்காவல் படை மற்றும் தன்னார்வலர்கள். |
| சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு | காவல்துறை மற்றும் ஊர்க்காவல் படை |
| தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் | தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படைகள், காவல் துறை, பொது மக்கள் |
| முதலுதவி மற்றும் அவசரகால சிகிச்சை | சுகாதாரத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் செஞ்சிலுவை சங்கம். |
| நிவாரண மையங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் அளித்தல் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை. சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள். |
| இறந்த மற்றும் காயம் அடைந்த மக்களை இனம் கண்டறிதல் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சுகாதாரத்துறை மாநிலம் உள்ளாட்சி அமைப்புகள். |
| காயமுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சை | சுகாதாரத்துறை |
| பாதிப்பு மற்றும் வளம் மதிப்பீடு | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, உள்ளாட்சி அமைப்புகள், தொழில்நுட்ப வல்லுநர்கள். |
| பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சுத்தம் செய்தல் | ஊரக வளர்ச்சித்துறை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி உள்ளாட்சி அமைப்புகள். |
| தொற்று நோய் பரவுதலை தடுத்தல் மற்றும் சுகாதார முகாம்கள் | சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் |
| தேவை அடிப்படையில் தற்காலிக வசிப்படங்கள் அமைத்து தருதல் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, உள்ளாட்சி அமைப்புகள். |
| நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புக்கான பொருட்களை அனுப்புதல் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, குடிமைப் பொருள் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் |
| சாலை வசதி தகவல் தொடர்பு சீரமைத்தல் | பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி உள்ளாட்சி அமைப்புகள், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம். |
| குடிநீர் வசதி | தமிழ்நாடு வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள். |
| மின்வசதி சீரமைப்பு | தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் |
| போக்குவரத்து சீரமைப்பு | சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை |
| உணவு வசதி | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, குடிமைப் பொருள் வழங்கல் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள். |
| நிவாரண பொருட்கள் வழங்குதல் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை. குடிமைப் பொருள் வழங்கல் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை. |
| தற்காலிக பிணவறை இறந்த உடல்கள் அகற்றம் | சுகாதாரத்துறை, வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, மற்றும் உள்ளாட்சி அமைப்புகள். |
| கால்நடைகள்/ வீட்டு வளர்ப்பு பிராணிகளை வெளியேற்றுதல் | கால்நடைப் பராமரிப்புத்துறை, புளூகிராஸ், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னார்வலர்கள். |
| இறந்த விலங்குகளை அப்புறப்படுத்துதல் | கால்நடை பராமரிப்புத்துறை |
| இயல்பு நிலை திரும்ப நடவடிக்கை மேற்கொள்ளுதல் | வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை மற்றும் தொடர்புடைய இதர துறைகள். |

# கூடுதல் தகவல்கள்

### சில முக்கிய புவியிலாளர்கள்

- **எராடோஸ்தென்ஸ்(Eratosthenes)** – புவியின் சுற்றளவையும் புவி அச்சின் சாய்வையும் முதன்முதலாகக் கண்டறிந்தவர்.
- **அனாஸிமாண்டெர்(Anaximander)** – முதன்முதலில் உலகவரைபடத்தை உருவாக்கியவர்
- **அயன்வில்லே(Ainville)** – முதன்முதலில் இந்திய வரைபடத்தை உருவாக்கியவர்.
- **தாலமி (Ptolemy)** - உலக வரைபடத்தில் இந்தியாவையும் இணைத்து வரைந்தவர்.
- **பிரடெரிக் ரட்ஸெல்(Fredrich Ratzel)** – மானுட புவியியலை (Anthropo geography) துவங்கியவர்.

**சூரியக் குடும்பத்தின் தோற்றம் பற்றியக் கருதுகோள்கள்**

| கருதுகோள் | முன்மொழிந்தவர் |
|---|---|
| வாயு கருதுகோள் (Gaseous Hypothesis) | கான்ட் (Kant) |
| நெபுலா கருதுகோள் (Nebular Hyothesis) | லாப்லாஸ் |
| நெபுலா மேக கருதுகோள் (Nebular Cloud Hypothesis) | வான் வெய்ஸாக்கர் |
| அலை கருதுகோள் (Tidal Hypothesis) | சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் மற்றும் ஹெரால்டு ஜெப்ரிஸ் |
| இரட்டை நட்சத்திர கருதுகோள் (Binary Star Hypothesis) | எச்.என். ரஸ்ஸல் |
| நட்சத்திர வெடிப்பு கருதுகோள் (Supernova Hypothesis) | ஹோய்ட்டே |
| விண்மீன்களுக்கிடையிலான தூசிக் கருதுகோள் (Inter stellar Dust Hypothesis) | ஸ்கிமிட் |
| மின்காந்த கருதுகோள் (Selectromagnetic Hypothesis) | ஆல்ஃபன் |
| Proto Plant Hypothesis | குயிப்பர் |

SURA'S

**உலக காலநிலை வகைகள்**

| | பரவல் | காலநிலை | இயற்கைத்தாவரங்கள் | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| வெப்பமான ஈரப்பதமிக்க நிலநடுக்கோட்டு காலநிலை (Hot wet Equatorial Climate) | ◆ 5° வடக்கு முதல் 5° தெற்கு வரை<br>◆ இது முக்கியமாக அமேசானின் தாழ்நிலைப் பகுதிகள், காங்கோ, மலேசியா மற்றும் கிழக்கு இந்தியத்தீவுகள் | ◆ சராசரி வெப்பநிலை<br>◆ 24-27°C<br>◆ வெப்பச்சலன மழையுடன் வருடாந்திர மழைஅளவு 250 செ.மீ<br>◆ வருட சராசரி வெப்பநிலை வேறுபாடு மிகவும் குறைவு | ◆ வெப்பமண்டல மழைக்காடுகள் இதில் பசுமைமாறா மரங்களான மகோனி எபோனி பியானஸ் எபிபைட்டிக் மற்றும் ஒட்டுண்ணி தாவரங்கள் இங்கு காணக்கிடைக்கும் | ◆ குறைந்த எண்ணிக்கையிலான ஆதிகால மக்கள் (primitive People) வசிக்கின்றனர்.<br>◆ வேட்டையாடுதல் மற்றும் இயற்கைப் பொருட்களை சேகரிப்பது தொழில்<br>◆ மாற்றிட வேளாண்முறை பெருமளவில் பின்பற்றப்படுகிறது. |
| வெப்பமண்டல பருவமழை மற்றும் கடல் காலநிலை (Tropical Monsoon and Tropical Marine Climate) | ◆ நிலநடுக்கோட்டின் இருபுறமும் 5° முதல் 30° வரை<br>◆ இந்தியா, மியான்மர், தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, வடக்கு ஆஸ்திரேலியா | ◆ சூரியனின் வட மற்றும் தென் அரைக்கோள இடப் பெயர்வுகளால் குளிர்காலம் மற்றும் கோடைகாலத்தின் வெப்பநிலை வேறுபாடு அதிகமாக இருக்கும்.<br>◆ ஈரப்பதமற்ற கோடை கால சூழலில் சராசரி வெப்பநிலை 27° - 32° C<br>◆ மலை தடுப்பு மற்றும் புயல் மழைப்பொழிவுடன் தென்மேற்கு பருவக்காற்று பருவமழையைக் கொடுக்கும் | ◆ இலையுதிர் காடுகள்<br>◆ தேக்கு, சால், அஜாசியா உள்ளிட்ட மரங்கள் | ◆ வேளாண்மை சார்ந்த பொருளாதாரம்<br>◆ அரிசி, கரும்பு, சணல் போன்ற வேளாண் பொருட்கள் |
| மிதவெப்ப கண்ட காலநிலை (ஸ்டெப்பி) (Temperate Continental Steppe Climate) | ◆ ஹங்கேரியின் புஸ்தாஸ், வட அமெரிக்காவிலுள்ள உருகுவே மற்றும் பிரெய்ரி, அர்ஜெண்டினாவின் பாம்பா, தென் ஆப்பிரிக்காவின் புஷ் ஆகிய பகுதிகள். | ◆ கண்டக் காலநிலை நிலவுவதால், கோடைக்காலத்தில் வெப்பநிலை மிக அதிகமாகவும் குளிர்காலத்தில் குளிர் மிக அதிகமாகவும் காணப்படும் | ◆ பகுதியளவு வறண்ட யுரேஷிய கண்டப்பகுதியின் குறைந்த தாவரங்களே காணப்படும். | ◆ கால்நடை மேய்த்தல், விரிவான மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட கோதுமை பயிரிடல் முறைகள். |

| | பரவல் | காலநிலை | இயற்கைத்தாவரங்கள் | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| சூடான் (அ) சவானா காலநிலை (Sudan (or) Savanna Climate) | ◆ நிலநடுக்கோட்டின் இருபுறமும் 5° முதல் 20° வரை<br>◆ தென் அமெரிக்காவின் ஒரினாகோ பள்ளத்தாக்கு, பிரேசிலின் காம்போஸ், மத்திய அமெரிக்காவின் மலைப்பகுதிகள் தெற்கு காங்கோ | ◆ மாறுபட்ட வெப்பம், மழை மற்றும் வறண்ட குளிர் காலநிலை வருடம் முழுவதும் 24 முதல் 27 C எனும் மிக அதிக சராசரி வெப்பநிலை நிலவும்<br>◆ இரவு–பகல் வெப்பநிலை வேறுபாடு மிக அதிகமாக இருக்கும் இது சூடான் வகை காலநிலையின் அம்சமாகும்<br>◆ சராசரி வருடாந்திர மழைப் பொழிவு 100 செ.மீ. முதல் 150 செ.மீ. வரை ஆகும் | ◆ உயரமான புற்கள் உயரம் குறைந்த மரங்கள்<br>◆ மரங்கள் இலையுதிர் தன்மையும் கடினமானதாக இருக்கும்.<br>◆ ஆஸ்திரேலியாவிலுள்ள புதர்காடுகளில் மாலீ, மல்வா, ஸ்பைனிஃபெக்ஸ் போன்றவை வளரும் | ◆ சவான பகுதிகளில் பழங்குயினர் வசிக்கின்றனர்<br>◆ மசாய் உள்ளிட்ட சில பழங்குடிகள் கால்நடை மேய்ச்சலில் ஈடுபட்டுள்ளனர்.<br>◆ வடக்கு நைஜீரியா பகுதியில் ஹௌசாக்கில் விவசாயிகளாக குடியேறியுள்ளனர் |
| வெப்பநிலை மிகுந்த பாலைவன மற்றும் இடைப்பகுதி காலநிலை (Hot Desert and Mid-Latitudinal Desert Climate) | ◆ நிலநடுக்கோட்டின் இருபுறமும் 15° முதல் 30° வரை.<br>◆ பெரும்பாலான வெப்பம் மிகுந்த பாலைவனங்கள் கண்டங்களின் மேற்குக் கரைப் பகுதியில் அமைந்துள்ளன. | ◆ ஒப்பு ஈரப்பதம் (Relative Humidity) மிகக் குறைவு. துணை வெப்ப மண்டல உயர் அழுத்த மண்டலத்தில் அமைந்துள்ளதால் காற்றழுத்தம் குறைந்து கொண்டே வருகின்றது.<br>◆ இடியுடன் கூடிய வெப்பச்சலன மழைப்பொழிவுகள் ஏற்படுகின்றன.<br>◆ ஆண்டு வெப்பநிலை வேறுபாடு (Dieurnal Temperature) மிகவும் அதிகம். | ◆ வறட்சியைத் தாங்கும் தாவரங்கள் (Xerotype). இத்தாவரங்கள் குறைந்த இலைகள் ஊசி வடிவ இலைகள் மற்றும் தடித்த இலைகள் உள்ளிட்ட தகவமைப்புகளைப் பெற்றுள்ளன. | ◆ இத்தகைய காலநிலை இப்பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தடையாக உள்ளது. கலஹாரி பாலைவனத்தில் புஷ்மென் பழங்குடிகளும் ஆஸ்திரேலியப் பாலைவனத்தில் பிந்துபிகளும் வசிக்கின்றனர். |
| மிதவெப்ப மேற்கு விளிம்பு மத்தியத் தரைக்கடல் காலநிலை (Warm Temperate Western Margin : Mediterranean) | ◆ வெப்பமான வறண்ட கோடைகாலங்கள் குளிர்ச்சியான ஈரப்பதமிக்க குளிர்காலம். கோடைகாலத்தின் போது மத்திய தரைக்கடல் காலநிலையானது துணைவெப்பமண்டல உயரழுத்த செயல்களால் பாதிக்கப்பட்டு மழைபொழிவை குறைக்கிறது. அல்லது அறவே இல்லாமல் செய்து விடுகின்றது. | ◆ இது கலிபோர்னியா, ஆஸ்திரேலியாவின் மேற்கு மற்றும் தெற்குப்பகுதிகள், தென் ஆப்பிரிக்காவின் தென்மேற்குப்பகுதிகள், மத்திய சிலியின் சில பகுதிகள், மத்தியத்தரைக்கடல் பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகள் | ◆ ஒக், யூகலிப்ட்ஸ், ஜர்ரா, காரி ஆகிய பசுமை மாறா மரங்கள் காணக் கிடைக்கின்றன. பைன் ஃபிர்கள் செடார் மற்றும் சைப்ரசெஸ் ஆகியவை பசுமைமாறா ஊசியிலை மரங்களாகும் | ◆ சிட்ரஸ் பழங்கள், இதர பழங்கள், ஒயின் மற்றும் தானியங்கள் உற்பத்தியைச் சார்ந்து பொருளாதாரம் இயங்குகிறது |
| மிதவெப்ப கிழக்கு விளிம்பு (Warm Temperature Eastern Margin – China Type) (சீனா வகை அல்லது வளைகுடா வகை) | ◆ கண்டங்களின் மிதவெப்ப அட்ச கிழக்குப் பகுதிகள். குறிப்பாக மிதவெப்ப அட்சப் பகுதிகளில். | ◆ மிதவெப்ப ஈரப்பதமற்ற கோடை மற்றும் குளிர்ச்சியான வறண்ட குளிர்காலம்.<br>◆ வருடம் முழுவதும் சமமான மழைப் பொழிவு இவ்வகை காலநிலையின் முக்கிய அம்சமாகும். | ◆ அகன்ற இலைகளை உடைய பசுமை மாறா மரங்கள் மற்றும் இலையுதிர் காடுகள் | ◆ அரிசி மற்றும் மல்பெரி போன்றவை சீனாவில் அதிக அளவில் விளைகின்றன. |

| | பரவல் | காலநிலை | இயற்கைத்தாவரங்கள் | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| மிதமான குளிர்ந்த மேற்குவிளிம்பு (பிரிட்டிஷ் வகை) (Cold Temperate Western Margin British Type) | ◆ பிரிட்டன் வடக்கு மற்றும் மேற்கு பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மாா, மேற்கு நார்வே (பிரிட்டனிலிருந்து வடமேற்கு ஐரோப்பா வரை) | ◆ இது மேற்கத்திய இடையூறினால் நிரந்தரமான தாக்கத்திற்கு உள்ளாகின்றது<br>◆ மழைதரும் காற்றுகள் மேற்கிலிருந்து வருவதால் மழைப்பொழிவு மேற்குப்பகுதியில் அதிகமாக இருக்கும். | ◆ ஒக், லெம், பிர்ச், பீச், பாப்லர் உள்ளிட்ட தாவரங்கள் காணப்படும். இலையுதிர் காடுகள் காணப்படும். | ◆ நார்வே மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் மீன்பிடித்தல் மிகமுக்கியமான தொழிலாகும்<br>◆ வடமேற்கு ஐரோப்பாவில் சந்தை தோட்டக்கலை வெகுவாகப் பின்பற்றப்படுகின்றன. |
| மிதமான குளிர்ந்த கண்டக்கால நிலை : சைபீரியன் – போரியல் வகை [Cool Temperature Continental: Siberian -Boroeal type] | ◆ இது வட அரைக் கோளத்தில் மட்டுமே காணப்படுகிறது.<br>◆ வட அரைக்கோளத்தில் இது ஆர்டிக் தூந்திர பகுதியுடன் இணைந்து விடுகின்றது. | ◆ கடுங்குளிரையுடைய நீண்ட குளிர்காலம் மற்றும் குறுகிய கால அவகாசமுடைய குளிர்ந்த கோடைகாலம்.<br>◆ குளிர்காலங்களில் மழைப் பொழிவானது பனிவடிவில் இருக்கும். | ◆ யுரேஷியா மற்றும் வடஅமெரிக்காவின் ஊசியிலைக் காடுகள் மென்மையான மரக்கட்டைகளுக்கான மிகப்பெரிய ஆதாரமாகத் திகழ்கின்றது<br>◆ பைன், ஃபிர், ஸ்புரூஸ் மற்றும் லர்ச் ஆகியவை. | ◆ மென்மையான மரங்கள் அதிகமுள்ளதால் மர அரவை ஆலைகள் அதிகஅளவில் காணப் படுகின்றது.<br>◆ வடமேற்கு ஐரோப்பாவில் சந்தை சார்ந்த தோட்டக்கலைப் பயிர்கள் விளைவிக்கப் படுகின்றன.<br>◆ சைபீரியாவிலுள்ள சமோயட்கள் மற்றும் யாகுட்கள் மற்றும் சில கனடா மக்கள் வேட்டை மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றனர். |
| மிதமாக குளிர்ந்த கிழக்கு விளிம்பு காலநிலை (லெளரென்ஷியன்) (Cool Temperature Eastern Margin : Laurentian) | ◆ இது வட அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதிகள் மற்றும் ஆசியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் காணப்படுகிறது.<br>◆ இத்தகைய காலநிலை தென் அரைக்கோளத்தில் காணப்படுவதில்லை.<br>◆ ஏனெனில் தென் அரைக்கோளத்தின் 40° அட்சத்தில் குறைந்த அளவிலான நிலப்பகுதிகளே உள்ளன. | ◆ குளிர்ந்த வறண்ட குளிர்காலம் மற்றும் மிதமான குளிருடைய ஈரப்பதமிக்க கோடைகாலம்.<br>◆ குளிர்கால வெப்பநிலையானது உறைநிலை வெப்பநிலைக்கு கீழ் செல்லும். பனிப்பொழிவு அதிகமாக இருக்கும். | ◆ ஊசியிலை மரங்களைக் கொண்ட காடுகள், ஒக்,மேப்பிள் மற்றும் பிர்ச் ஆகிய மரங்கள் காணப்படுகின்றன. | ◆ மரம் வெட்டுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய காகிதம் தயாரிப்பு தொழற்சாலைகள் பொருளாதார நடவடிக்கைகளில் முக்கியப் பங்காற்றுகின்றன |
| ஆர்டிக் மற்றும் துருவ காலநிலை (Arctic and polar) | ◆ இது ஆர்டித் வளையத்தின் வடபகுதியில் காணப்படுகிறது. | ◆ இங்கு ஆண்டுமுழுவதும் மிகக் குறைந்த வெப்பநிலையே நிலவும். நீண்ட கடுங்குளிரான குளிர்காலம் காணப்படுகிறது.<br>◆ கோடைக்காலங்கள் மிக குறுகியகால பகல் பொழுது உடையவை. ஆனால் குளிரானவை.<br>◆ குளிர்காலங்களில் பனிப்பொழிவு கடுமையாக இருக்கும் | ◆ மிகக் குறைந்த வெப்பநிலை காரணமாக இங்கு குறைந்த அளவிலான உயிரினங்களே வசிக்கும்.<br>◆ தூந்திர வனப் பகுதிகளில் மரங்கள் இருக்காது. | ◆ தூந்திரப் பகுதிகளில் வசிப்பவர்கள பகுதியளவு நாடோடி வாழ்க்கையை வாழ்கின்றனர்.<br>◆ கிரீன்லாந்து வடக்கு கனடா மற்றும் அலாஸ்காவில் எஸ்கிமோக்கள் வசிக்கின்றனர்.<br>◆ யூரேசிய தூந்திரப்பிரதேசங்களில் இதர நாடோடி மக்கள் வசிக்கின்றனர்.<br>◆ வடக்கு பின்லாந்தில் லாப்களும் சைபீரியாவில் சமோயெடுகள், வடகிழக்கு ஆசியாவில் யாகுட்கள், கொர்யாக்கள் மற்றும் சுகூஷிகள் வசிக்கின்றனர். |